செப்டம்பர் 2002

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

**முதலாளிகளின் வங்கிக் கொள்ளை**






படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## 'ஊடுருவல்' இரகசியம்

எல்லையோரத்தில் குவிக்கப்பட்ட இந்திய இராணுவம் இன்னும் திரும்பப் பெறப்பட வில்லை. ஆனாலும், பாகிஸ்தானால் பயிற்சி யளிக்கப்பட்டு அனுப்பப்படும் பயங்கரவாதிகள் காசுமீருக்குள் ஊடுருவுவது இன்னும் குறை யவேயில்லை எனத் 'தேசிய'க் கட்சிகள் அனைத்தும் தினம் தினம் புலம்பத் தவறுவதே யில்லை. "எல்லையைக் கண்காணிக்கும் இந்திய வீரர்களின் கண்களில் பாக். பயங்கரவாதிகளால் எப்படி மண்ணைத் தூவ முடிகிறது?" எனக் கேட்டால், சுமந்தா பானர்ஜி என்ற அரசியல் விமர்சகர், 'பயங்கரவாதிகள்' மண்ணைத் தூவ வில்லை; பணத்தைத் தூவுகிறார்கள் என அம்பலப்படுத்துகிறார். ஊழலில் ஊறிப் போன எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிக்கு முன்னூறு ரூபாய் கொடுத்தால், ஒரு 'பயங்கரவாதி' எல்லையைத் தாண்டி பத்திரமாக காசுமீருக்குள் புகுந்து விட முடியுமாம்! இந்த இலஞ்சத் தொகை 1990-இல் ரூ.150/- ஆக இருந்ததாம். எல்லையில் 'கண்காணிப்பு' கூடிவிட்டது; விலைவாசியும் ஏறிவிட்டது. அதனால் இலஞ்சத் தொகையும் இரட்டிப்பாகி விட்டது.



தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட சந்தன் பட்டாச்சார்யா.

## லல்லுவின் சமூக நீதி

ஜெயா, தனது வளர்ப்பு மகனுக்கு நடத்திய திருமணத்திற்குச் சவால் விடும் வகையில், லல்லு தனது இரண்டாவது மகளின் திருமணத்தைச் சமீபத்தில் நடத்தி முடித்ததை யாரும் மறந்திருக்க முடியாது. அப்படி ஆடம்பரத் திருமணம் நடத்துமளவுக்கு அவர் வீட்டு கஜானா ரொம்பி வழிய, அவர் மனைவி ராப்ரிதேவி ஆட்சி செய்யும் பீகார் அரசின் கஜானா காலியாகக் கிடக்கிறதாம். பல மாதங்களாக அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாததால், அவர்கள் குடும்பம் அரைப்பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இப்பட்டினிக் கொடுமையைச் சகிக்க முடியாத சந்தன் பட்டாச்சார்யா என்ற ஊழியர் பாட்னா உயர்நீதி மன்ற வளாகத்தில் தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டு, இறந்து விட்டார். ரவிகாந்த் சௌத்ரி என்ற போக்குவரத்து ஊழியர் ராப்ரிதேவியின் வீட்டின் முன்பு தீ குளிக்கப் போவதாக அறிவித்துள்ளார். பீகார் மாநில அரசு ஊழியர்களின் கதியே இதுதான் என்றால், அத்துக் கூலிகளின் நிலைமை என்னவாக இருக்கும்?

## பன்னாட்டு பண மூட்டைகளின் சதி

தென் அமெரிக்க கண்டத்திலுள்ள பிரேசில் நாட்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது. இதனால் கொஞ்சம் கவலையடைந்த பன்னாட்டு நிதி நிறுவனங்கள், அந்நாட்டில் கொட்டியிருந்த அமெரிக்க டாலர்களைத் திடீரெனத் திரும்பப் பெற்று, பொருளாதாரத் தாக்குதலைத் தொடுத்தன. இதனால் அந்நாட்டு நாணயத்தின் மதிப்பு சடசடவென சரிந்தது. அதுவரை 'ஆரோக்கியமாக' இருந்த பொருளாதாரம், சீக்காளியானது. உடனே, அந்நாட்டு அரசு சர்வதேச நிதிச் சந்தையில் கையேந்தியது. அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதைப் போல, பன்னாட்டு நிதி நிறுவனங்களும் பிரேசிலுக்குப் பல்வேறு நிபந்தனையை விதித்து, 3000 கோடி டாலரைக் கடனாகக் கொடுத்தன. "தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் கடன் கொடுத்த பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்குத் தலையாட்ட வேண்டும்" என்பது அந்த நிபந்தனைகளுள் ஒன்று. ஜனநாயகத்திற்கும் பாதகமில்லை; ஏகாதிபத்தியக் கொள்ளைக்கும் ஆபத்தில்லை!

## மாடு இறக்குமதி! நோய் வெகுமதி!

ஆடு, மாடு போன்ற கால்நடைச் செல்வங்களுக்கு நமது நாட்டில் பஞ்சமே கிடையாது. எனினும், "ஹை-டெக்" முதல்வர் சந்திரபாபு நாயுடு 4 கோடி ரூபாய் செலவில் ஆஸ்திரேலியாவில் இருந்து ஜெர்ஸி இனத்தைச் சேர்ந்த 160 காளை மாடுகளையும், 40 பசுக்களையும் இறக்குமதி செய்தார். இந்தியாவிற்கு வந்த நான்கு மாதங்களுக்குள்ளாகவே, ஒருவகை வயிற்றுப் போக்கு நோயினால் பாதிக்கப்பட்டு, ஏழு மாடுகள் அடுத்தடுத்து இறந்து போய்விட்டன. இன்னும் எத்தனை மாடுகள் மண்டையைப் போடுமோ என ஆந்திர அரசு கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறது. மாடுகளை அனுப்பிய ஆஸ்திரேலிய நிறுவனமோ மிஞ்சியுள்ள மாடுகளைத் திரும்ப எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டது. வெள்ளைக்காரன் சரக்கு என்றாலே தரமாக இருக்கும் எனச் சிலாகிப்பவர்கள்தான் இக்கட்டில் மாட்டிக் கொண்ட ஆந்திர அரசுக்கு ஒரு வழி சொல்ல வேண்டும்.

## பா.ஜ.க.வின் வீட்டு மனை ஊழல்

தலைநகர் தில்லியில் மைய அரசுக்குச் சொந்தமான விலை மதிப்புமிக்க மனைகளை வளைத்துப் போடுவதில், ஆர்.எஸ்.எஸ். மும்முரமாக இறங்கியிருக்கிறது. நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சராக இருக்கும் ஆர்.எஸ்.எஸ். விசுவாசி ஜெக்மோகன், சம்ஸ்கார் பாரதி - வித்யாபாரதி உள்ளிட்ட பல்வேறு ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளுக்கு, காலி மனைகளை அடிமாட்டு விலைக்கு விற்றுத் தள்ளுகிறார். கல்வி, கலாச்சாரம் என்ற போர்வையில் இந்தச் சட்டப்பூர்வ சுருட்டல் நடைபெறுகிறது. அடுக்கடுக்காக ஊழல்கள் அம்பலமான பின்னும், பொதுச் சொத்தை ஏப்பம் விடுவதில் ஆர்.எஸ்.எஸ். அசந்த மாதிரி தெரியவில்லை.

## அப்துல் கலாமின் ஆறுதல் நாடகம்

குஜராத் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட முசுலீம்களில் ஒரு சிலரை மட்டும் சந்தித்து, அரசுத் தலைவர் அப்துல் கலாம் ஆறுதல் நாடகம் நடத்திக் கொண்டிருந்த பொழுது, அகமதாபாத் நகரில் இயங்கி வரும் ஷா ஆலம் முகாமில் தங்கியிருக்கும் ஆயிரக் கணக்கான முசுலீம்கள் மோடி அரசைக் கண்டித்து உண்ணாவிரதம் நடத்தினர். அந்த முகாமை நடத்தி வரும் ஷெரீப்கானை, அப்துல் கலாம் குஜராத் வருவதற்கு ஒருநாள் முன்னதாகவே, சட்டவிரோதமாகக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டது மோடி அரசு. ஷெரீப் கான் அப்துல் கலாமைச் சந்தித்து விடக் கூடாது என்ற உள்நோக்கம் தான், இந்தக் கைதிற்கு அடிப்படை. மோடி அரசின் இந்த அக்கிரமத்தைக் கண்டித்துத்தான் முசுலீம் அகதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். ஷா ஆலம் அகதி முகாமில் கிட்டதட்ட 4,000 முசுலீம் அகதிகள் வீடு திரும்ப முடியாமல் தங்கியிருக்கின்றனர். ஆறுதல் சொல்லப் போன அப்துல் கலாமோ அந்த அகதி முகாம் இருக்கும் திசைப் பக்கம் கூடத் தலையைத் திருப்பவில்லை.

இனப்படுகொலைக்குப் பக்கபலமாக இருந்த மோடியுடன் நிவாரணம் குறித்து ஆலோசனை நடத்தும் அப்துல் கலாம்.





படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 17
இதழ் 11
செப்டம்பர் 2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண். 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

# திறந்தவெளிச் சிறைச்சாலையாகும் தமிழ்நாடு

அரசியல் பழிவாங்குதலை பாசிச ஜெயலலிதா - சசிகலா கும்பல் ஆட்சி விரிவுபடுத்திக் கொண்டே போகிறது. முதலில் முதன்மையான அரசியல் எதிரியாகக் கருதப்படும் கருணாநிதி குடும்பத்தினர்; பின்னர் தி.மு.க.வினர்; அதன் பிறகு பத்திரிக்கையாளர்கள்; அப்புறம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் என்று தனது தாக்குதலைப் பரவலாக்கிக் கொண்டே வந்த அரசு, இப்போது ஏறக்குறைய சமூகத்தின் எல்லாத் தரப்பினர் மீதும் பாய்ந்து கடித்துக் குதறுகிறது.

1996 தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் தன்னைத் தோற்கடித்து, பதவியைப் பறித்த தமிழக மக்களின் செயலை ஜெயா - சசி கும்பல் மறக்கவோ, மன்னிக்கவோ தயாரில்லை. எனவேதான், அனைத்துப் பிரிவு மக்கள் மீதும் தாக்குதல் தொடுக்கும் வகையில் 4,500 கோடி ரூபாய்க்கு பல்வேறு கட்டண உயர்வு, விலை உயர்வு, வரி உயர்வு செய்தார். பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை ரத்து செய்தார். இவற்றுக்கு எதிராகப் போராடிய மக்கள் மீது போலீசை ஏவிக் கொடூரமாக அடக்கி ஒடுக்கினார்.

இந்தப் போக்கு வளர்ந்து, கடுமையான வழக்கு மன்றக் கட்டண உயர்வு, பல்கலைக் கழகங்களுடன் அரசுக் கல்லூரிகள் இணைப்பு, அரசு ஊழியர்களின் உரிமைகள் - சலுகைகள் பறிப்பு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் நிறுத்தம், தொழிலாளர்களுக்கு எதிரான தனியார்மயம், அரசு மருத்துவமனைகளுக்கும் கட்டண வசூல், ரேசன் கடை வழங்கீடுகள் மீது கட்டுப்பாடு என்று பல்வேறு பிரிவு மக்களின் எதிர்கால வாழ்வையே இருளடையச் செய்து வருகிறது.

அதேசமயம், இன்னும் இரண்டு காட்சிகளைக் காண்கிறோம். ஒருபுறம் ஜெயா - சசி கும்பல் தனது அரசின் ஆடம்பர - ஊதாரித்தனங்களையோ, உல்லாச - சொகுசு வாழ்க்கை முறைகளையோ மேலும் மேலும் பெருக்கிக் கொண்டு வருகிறது. இன்னொருபுறம் போராடும் பல்வேறு பிரிவு மக்களையும் அடக்கி ஒடுக்கும் வேட்டை நாய்களாகச் செயல்படும் போலீசுக்கும், கட்சி குண்டர்களுக்கும் மிதமிஞ்சிய சலுகைகள் - தீனிகளை வாரி இறைக்கிறது. போராடும் மக்கள் மீது அன்றாடம் அவதூறுகளை வீசுவதும், கொலைவெறியாட்டம் போடும் போலீசுக்கு வக்காலத்து வாங்குவதும், போலீசுக்குப் பதவி - ஊதிய உயர்வு, மருத்துவக் குடியிருப்பு - பராமரிப்பு வசதி, நவீன சாதனங்கள் ஆகியவற்றைப் பெருக்குவதும்தான் ஜெயலலிதா ஆற்றும் ஆட்சிப் பணியாக உள்ளது. சாதாரணக் குடியுரிமைப் பிரச்சினைகளுக்காக அறவழியில் திரளும் மக்களைச் சந்திப்பதற்குக் கூட சிவில் அதிகாரிகள் அனுப்பப்படுவதில்லை. போலீசு அதிகாரிகளையும் ஆயுதப் போலீசையும் குவிப்பதே வாடிக்கையாகி விட்டது.

தமிழ்நாட்டை ஒரு திறந்தவெளி சிறைச்சாலையாக்குவதற்கு வசதியாக போலீசுக்கு வரைமுறையற்ற அதிகாரம் தரும் சட்டதிட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. காலனிய காலத்து ஒடுக்குமுறை கிரிமினல் சட்டங்கள் தோண்டியெடுக்கப்பட்டு ஏவிவிடப்படுகின்றன. இதற்காகவே அத்தியாவசியப் பணிகளுக்கான வேலை நிறுத்தத் தடைச் சட்டம், "பொடா" போன்றவற்றை ஜெயலலிதா அரசு கையிலெடுத்துக் கொண்டுள்ளது.

பயங்கரவாத - பிரிவினைவாத பீதி கிளப்பி அரசியல் ஆதாயம் அடையும் பார்ப்பன சதிகார அரசியலின் ஒரு பகுதியாக வைகோவும், நெடுமாறனும் புலி ஆதரவாளர் என்பதற்காக "பொடா"வில் கைது செய்யப்பட்டனர். இக்கைதுகளைக் கண்டித்து வழக்குப் போடப்போவதாகக் கூறிய சுப. வீரபாண்டியனும் அடுத்த சில நாட்களில் "பொடா"வில் கைது செய்யப்பட்டார். ஆள் பலமோ, மக்கள் செல்வாக்கோ இல்லாத நெடுமாறனின் கட்சி தடை செய்யப்பட்டு, அலுவலகங்கள் போலீசின் அதிரடி சோதனை - சீல் வைப்பு என நடவடிக்கைகள் தொடர்கின்றன. திருமாவளவன், இராமதாசு, கண்ணப்பன் போன்றவர்களை "பொடா"வில் கைது செய்யப் போவதாக மிரட்டல்கள் விடப்படுகின்றன.

திருச்சி - திண்ணியம் தாழ்த்தப்பட்டோர் மீதான சாதிவெறித் தாக்குதலைக் கண்டித்த ஊர்வலத்துக்கு கடும் நிபந்தனைகளுடன் நீதிமன்ற அனுமதி; விடுதலைச் சிறுதைகள் பொதுக் குழு, ம.தி.மு.க. உறுப்பினர் கூட்டங்களுக்கும் போலீசு 'வீடியோ' பதிவு என அடக்குமுறை ஏவிவிடப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்றால் ஊர்வலம், பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு, நீதிமன்றங்களே கடுமையான நிபந்தனைகள் விதிக்கின்றன; போலீசுக்கே முழு அதிகாரம் வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்படாத அரசியல் அமைப்புகள் ஊர்வலம், பொதுக்கூட்டம் என்ன, சுவரெழுத்து சுவரொட்டிகளுக்கு முயன்றாலே கைது செய்யப்படுகின்றனர். ஜெயா - சசி கும்பலின் கைக்கூலிகள் தவிர எல்லாத் தரப்பு அரசியல் நடவடிக்கைகளும் போலீசு - வீடியோ கண்காணிப்பு - தணிக்கைக்குள்ளாகிறது.

சிவசேனா பாணியில் இந்துத்துவா - பாசிசத்தை அமலாக்குவது, இந்த வகையில் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலை விஞ்சி விடுவது என்று கங்கணங்கட்டிக் கொண்டு ஜெயலலிதா - சசிகலா கும்பல் செயல்படுகிறது. ஓட்டுரிமை, வழக்காடும் உரிமை, அறவழி போராட்ட உரிமை, கருத்துரிமை எல்லாம் பறிக்கப்படுகிறது. இந்தப் போக்கில் போலீசுடன் வந்து மக்கள் வாழ்வுரிமையையும் பறிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

# பட்டினியில் நெசவாளர்கள் உல்லாசத்தில் ஜெயா

*''பட்டினிய பசியப் பத்தி உனக் கென்ன தெரியும்? அத படத்தில வேசங் கட்டி ஆடத்தானே தெரியும்!''*

- மக்கள் கலை இலக்கியக் கழகம் பத்தாண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட ''இருண்ட காலம்'' என்ற பாடல் தொகுப்பு ஒலிப்பேழையில், ஜெயாவின் பகட்டை அம்பலப்படுத்தி பாடப்பட்ட வரிகள் இவை. இந்த வரிகள் மிகைப்படுத்திக் கூறப் பட்டதல்ல, மறுக்க முடியாத உண்மை என்பதை ஒருவேளைக் கஞ்சிக்கு அல்லாடும் தமிழக நெசவாளர்கள் பிரச்சி னையில், ஜெயா தானே நிரூபித்துக் காட்டி விட்டார்.

கடந்த ஆண்டு சம்பாவிற்கு அறுத்த நெல்லைக் கொள்முதல் செய்ய ஜெயா மறுத்ததாலும்; ஜெயாவின் சகபாடி கர்நா டக முதல்வர் கிருஷ்ணா, காவிரியில் தண்ணீர் விட மறுத்து விட்டதாலும் காவிரிப் பாசன விவசாயிகள் எலிக்கறி சாப்பிடும் அவலத்திற்குத் தள்ளப்பட்டு விட்டனர். தமிழக நெசவாளர்களின் நிலையோ, விவசாயிகளை விடப் பரிதாப கரமாக இருக்கிறது.

விவசாயமும், நெசவும் தமிழகத்தின் உயிர்நாடியான தொழில்கள் எனும்பொ ழுது, அதை நம்பி வாழும் பாதி தமிழக மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் தள்ளப்பட்டு விட்டனர் என்றுதான் கூற வேண்டும். எனினும், இன்னொரு பகுதி தமிழகமோ, விபரீதமாக எதுவுமே நடக் காத மாதிரி, அமைதியாக வேலைக்குப் போய்த் திரும்புகிறது; தொலைக்காட்சி முன் அமர்ந்து பொழுதை ஓட்டுகிறது.

காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கோரிப் போராட்டம் நடத்த முன் வராத தி.மு.க., நெசவாளர்களுக்காகக் கஞ்சித் தொட்டி திறக்கிறது. போராட்டம் நடத்தி, மண்டையை உடைத்துக் கொள்வதற்குப் பதில், கஞ்சித் தொட்டி திறந்து, பசியால் வாடும் நெசவாளர்களின் அனுதாபத்தைப் பெற்று, அந்த அனுதாபத்தைப் பிற்பாடு ஓட்டுக்களாக மாற்றி விடலாம் என்பது மு.க. போடும் அரசியல் கணக்கு.

ஆனால், பாசிச ஜெயா கும்பலோ, தனது அதிகார அத்துமீறல்களால், தி.மு.க. கஞ்சித் தொட்டி திறப்பதையே பெரும் போராட்டமாக மாற்றி விட்டது. மதுரை - செல்லூரில் கஞ்சி ஊற்ற வந்த முன்னாள் தமிழக அமைச்சர் தா. கிருஷ்ணனைக் கூட விட்டு வைக்காமல், தி.மு.க.வினர் அனை வரையும் தாக்கி, உள்ளே தள்ளி, ஜெயில் களியைத் தின்ன வைத்துவிட்டது. திரு வள்ளூர் மாவட்டம் அம்மையார் குப்பத்தில் கஞ்சி ஊற்ற வரவிருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியைக் கூடத் தாக்க அ.தி.மு.க. திட்டமிட்டதாகக் கூறப்படுகி றது. தி.மு.க.வின் கஞ்சிக்கு எதிராக அ.தி.மு.க. நடத்திவரும் முட்டை பிரி யாணி விருந்துகளின் மூலம், நெசவாளர் களை வெளிப்படையாகவே அவமானப் படுத்துகிறது.

எந்தப் பிரச்சினையையும் நடுநிலைக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என உபதேசிக்கும் 'தேசிய'ப் பத்திரி கைகள், நெசவாளர் பிரச்சினையை அர சியல் ஆக்காதீர்கள் என வேண்டுகோள் வைக்கின்றன. நெசவாளர்களை வெறும் வாக்கு வங்கிகளாக அணுகக் கூடாது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான்; அதேசமயம், நெசவாளர்களின் பட்டினிப் பிரச்சினையை அரசியலே அற்ற தூய அனு தாபக் கண்ணோட்டத்துடன் மட்டும் பார்க்க முடியாது. நெசவாளர்களின் பட்டினிப் பிரச் சினைக்கும், ஓட்டுச்சீட்டு அரசியலுக்கும் உள்ள உறவைப் புட்டு வைத்தால்தான், அதற்கு எதிரான புரட்சிகர அரசியலை நெச வாளர்களிடம் புகுத்தினால்தான், இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் முதல் அடியை எடுத்து வைக்க முடியும்.

### ஜெயாவின் அகங்கார அரசியல்

சிறீவில்லிபுத்தூர் பகுதி நெசவாளர்கள், கஞ்சித் தொட்டியைத் திறப்பதற்கு முன்பா கவே, தங்களின் அவல நிலையை அரசுக்கு எடுத்துச் சொல்லும் விதமாக பல்வேறு சட்டபூர்வ போராட்டங்களை நடத்தி னார்கள். தமிழகத்தில், தகவல் தொழில் நுட்பத்துறையில் பெரும் புரட்சியைச் சாதித்து விட்டதாகக் கூறும் தமிழக அர சுக்கு, நெசவாளர்கள் நடத்திய போராட்டம் மட்டும் காதில் எட்டவில்லையாம்!

எதிர்க்கட்சிக்காரன் ஒண்ணுக்குப் போனதைக் கூட உளவுத்துறை மூலம் துப்பு துலக்கித் தெரிந்து கொள்ளும் ஜெயா, நெச வாளர்கள் நெய்து கொடுத்த துணிகள் கோ-ஆப்டெக்ஸ் கிட்டங்கிகளில் மலைம லையாகக் குவிந்து கிடப்பது பற்றி அக்கறை கொண்டது கிடையாது. போலீசுக் காரனை சென்னைக்குக் கூட்டி வந்து, அவ னது குறைகளைக் கேட்டறிந்து களையும்

தறிக் கூடத்தில் வேலையின்றி முடங்கிக் கிடக்கும் நெசவாளர்; நெசவாளர்களுக்காகத் தயாராகும் கஞ்சி; கஞ்சி வாங்கக் காத்திருக்கும் பெண்கள்.




படிப்பகம்

www.padippakam.com

ஜெயா, கஞ்சித் தொட்டி திறந்த பிறகுகூட நெசவாளர்களைச் சந்திக்க முயலவில்லை.

நெசவாளர்களை விடுங்கள். சிறீவில்லி புத்தூர் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ., இன்பத் தமிழன், ''கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகளை அம்மாவிடம் நேரில் எடுத்துச் சொல்ல முடியவில்லை'' என ஜெயாவின் 'அக்கறை' பற்றி ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

ஜெயா, கடந்த சட்டசபை தேர்தலுக்காக ஓட்டுக் கேட்க வந்தபொழுது கூட, தான் உட்கார்ந்திருந்த குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட வண்டியில் இருந்து கீழே இறங்கவில்லை. ஆட்சியைப் பிடிக்கும் முன்பே தமிழக மக்களை ஏதோ வேடிக்கைப் பொருளாக பார்த்த ஜெயாவிற்கு, ஆட்சியைப் பிடித்த பிறகு அவர்கள் மீது அனுதாபமும், அக்கறையுமா பிறந்திருக்கும்?

சிறீவில்லிபுத்தூர் நெசவாளர்கள் நடத்திய பல்வேறு போராட்டங்கள் செவிடன் காதில் ஊதிய சங்கான பின்புதான், அவர்கள் கஞ்சித் தொட்டியைத் திறந்தார்கள். ''சுப்பையா என்ற நெசவாளர் பட்டினியால் இறந்து விட்டார். இந்தப் பட்டினிச் சாவு தொடர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே, கஞ்சி ஊற்ற ஏற்பாடு செய்துள்ளோம். அரசை அவமானம் செய்வது எங்கள் நோக்கமல்ல'' என அதற்கு விளக்கமும் அளித்தார்கள். குனியக் குனியத்தான் குட்டுவார்கள் என்பது போல, விருதுநகர் மாவட்ட ஆட்சியாளர், ''அரசுக்கு நெருக்கடி தருவதற்காகவே கஞ்சித் தொட்டியைத் திறந்ததாக'' நெசவாளர்களைச் சாடினார்.

தமிழக அரசின் கஜானா காலியான பின்னும் கூட அதிகார வர்க்கம் நெருக்கடியே இல்லாமல் வாழ்க்கை நடத்தும் இரகசியத்தை மாவட்ட ஆட்சியாளர் நெசவாளர்களுக்கும் சொல்லிக் கொடுத்திருந்தால், அவர்களும் கூட அரசுக்கு 'நெருக்கடி' ஏற்படுத்தியிருக்க மாட்டார்கள்!

இலஞ்சப் பணத்தை அள்ளிக் கொடுத்து அரசின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப, நெசவாளிகள் முதலாளிகள் கிடையாது; ஆறடிக்கு ஆறடி கட்-அவுட் வைத்து அம்மாவின் ஆசியைப் பெறுவதற்கு நெசவாளிகள், அ.தி.மு.க.வைச் சேர்ந்த பொறுக்கி கும்பல் கிடையாது. தலையைச் சொறிந்து, கூழை கும்பிடு போட்டு சலுகையைப் பெறுவதற்கு நெசவாளிகள், அதிகார வர்க்கம் கிடையாது. நெசவாளிகள், தொழிலாளர்கள். அதனால்தான் நியாயமான முறையில் போராட்டம் நடத்தி, அரசின் கவனத்தைக் கொஞ்சமாவது தங்கள் பக்கம் திருப்பியிருக்கிறார்கள்.

நெசவாளர்கள் கஞ்சித் தொட்டி திறந்து அரசுக்கு 'நெருக்கடி' ஏற்படுத்திய பிறகு முழித்துக் கொண்ட ஜெயா, இலவச வேட்டி - சேலை திட்டத்திற்காக நெய்யப்பட்ட



வறுமையின் கொடுமையைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட ஜாக்குலின் மேரி.

சனதா ரகங்களை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கியதோடு, இலவச வேட்டி - சேலை நெய்வதில் ஈடுபட்ட குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கவும் உத்தர விட்டார். இந்த உத்தரவுகளைப் போட்ட கையோடு, ''கஜானா காலியாகிக் கிடக்கும் சமயத்திலும் கூட, நெசவாளர்களுக்காகத் தனது அரசு கருணையுள்ளத்தோடு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக''த் தம்பட்டம் அடித்துக் கொண்டார்.

சேலத்திலும், மதுரையிலும், இராமநாத புரத்திலும் அரசு விழா என்ற போர்வையில் நடந்த அ.தி.மு.க. மாநாடுகளுக்கு ஹெலிகாப்டரில் பறந்து போய் திரும்பியபொழுது, ஜெயாவிற்கு கஜானா காலியாகக் கிடப்பது நினைவுக்கு வரவில்லை.

சேலத்தில் ஏற்கனவே விமானப்படைக்குச் சொந்தமான ஒரு ஹெலிகாப்டர் இறங்கு தளம் இருக்கும்பொழுது, ஜெயாவிற்காகவே இரண்டு லட்சம் ரூபாய் விரயம் செய்து புதிய இறங்குதளம் அமைக்கப்பட்ட பொழுது தமிழக கஜானா பொங்கியா வழிந்தது?

காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட 168 கோடி ரூபாய் வறட்சி நிவாரணத் திட்டத்தை, அ.தி.மு.க. புள்ளிகள் தங்களின் 'வறுமையை'ப்

> "கஞ்சி ஊற்றுங்கள்; பிரியாணி போடுங்கள்; அரிசி கொடுங்கள்" எனத் தன்மானத்தை இழந்து விட்டு நெசவாளர்கள் கையேந்தி நிற்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் கடனுக்கு நூலும்; தொடர்ச்சியான வேலையும்; வேலைக்கேற்ற கூலியும்தான்.

போக்கிக் கொள்ளச் சுருட்டுகிறார்களே, அந்தப் பணம் போயஸ் தோட்டத்து கஜானாவில் இருந்து வரவில்லை. வீண் ஆடம்பரம் - டாம்பீகம் - ஊழல் மூலம் தமிழக கஜானாவை மொட்டையடிக்கும் ஜெயா, பட்டினியால் வாடும் நெசவாளர்களுக்குச் 'சலுகை' வழங்கும் போது ''கஜானா காலி'' என மூக்கால் அழுகிறார். அதற்குப் பத்திரிகைகளும் ஆமாம் சாமி போடுகின்றன.

**நிதி ஒதுக்கீடு - மாபெரும் மோசடி**

''அ.தி.மு.க. அரசு இலவச வேட்டி சேலை திட்டத்தை நிறுத்திவிட்டதால், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் நெசவாளர் சங்கங்களிடம் கொள்முதல் செய்வதை நிறுத்தி விட்டது. கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 16 கோடியையும் அது வழங்கவில்லை. இதனால் 30-க்கும் மேற்பட்ட நெசவாளர் சங்கங்கள் மூடுவிழா கண்டன. இதனால் நெசவாளர்களுக்குத் தர வேண்டிய கூலி பாக்கி சுமார் 4 கோடி ரூபாயை கூட்டுறவு சங்கங்களால் வழங்க இயலவில்லை'' என்ற ஒரு புள்ளி விவரத்தை அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வமற்ற கட்சி ஏடான ''துக்ளக்'' வெளியிட்டுள்ளது. இதை வைத்துப் பார்க்கும் போது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, அரசு நெசவாளர்களுக்குத் தரவேண்டிய பணத்தை, நிதியாக ஒதுக்கவிட்டு, ''இலவசம்'', ''நிவாரணம்'' என்றெல்லாம் மோசடி நாடகம் ஆடுகிறது ஜெயா கும்பல்.


தமிழக நெசவாளர்களில் ஒருவர் கூட, ''கஞ்சி ஊத்துங்கள்; முட்டை பிரியாணி போடுங்கள்; இலவச அரிசி கொடுங்கள்'' எனத் தன்மானத்தை இழந்து விட்டு, தி.மு.க., அ.தி.மு.க.விடமோ, தமிழக அரசிடமோ கையேந்தி நிற்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் கடனுக்கு நூலும்; தொடர்ச்சியான வேலையும்; உழைப்புக் கேற்ற கூலியும்தான்.

இதை உத்தரவாதமாகத் தரமுடியாத ஜெயா கும்பல், வேண்டுமென்றே புழுத்துப் போன அரிசியை இலவசமாகக் கொடுத்து, நெசவாளர்களை அவமானப்படுத்துகிறது. இந்த இலவச அரிசியும் அனைத்து நெசவாளர் குடும்பங்களுக்கும் தரப்படுவதில்லை. 2001-2002-ஆம் ஆண்டில் இலவச வேட்டி - சேலை நெய்தவர்களுக்கு மட்டும்தான். மற்ற நெசவாளிகளெல்லாம் வயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக் கொள்ள வேண்டுமாம். நெசவாளர்கள் தங்களின் ஒற்றுமையையும் தன்மானத்தையும் காத்துக் கொள்வதற்காக, பல ஊர்களில் இந்த இலவச அரிசியை வாங்காமல் புறக்கணித்திருக்கிறார்கள்.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள அத்தனூரைச் சேர்ந்த நெசவாளிகள், தாங்களாகவே கஞ்சி காய்ச்சி ஊற்றுவதைத் தொடங்கியவுடன், இராசிபுரம் தொகுதி அ.தி.மு.க.

www.padippakam.com

எம்.எல்.ஏ. பி.ஆர். சுந்தரம் நெசவாளர்களிடம் ''மழைக்காகக் கஞ்சி காய்ச்சுவதாக''க் கூறச் சொல்லி, பிரச்சினையைப் பூசி மெழுகச் சொல்லியிருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த நெசவாளிகள் அவரைச் சுற்றி வளைத்து, ''இந்தப் பட்டினிப் பிரச்சினைக்கு பதில் சொல்லி விட்டு போகுமாறு'' கூறி, இரண்டு மணி நேரத்துக்கும் மேலாகச் சிறை பிடித்து வைத்தனர்.



**தங்களின் வாழ்க்கை பிரச்சினைக்கு வழி சொல்லி விட்டு போகக் கோரி இராசிபுரம் எம்.எல்.ஏ. சுந்தரத்தின் காரை முற்றுகையிட்டுப் போராடும் அத்தனூர் பகுதி நெசவாளர்கள்.**

''புரட்சித் தலைவியின் ஆட்சியில் யாரும் கஞ்சி குடிக்க வேண்டிய நிலையில் இல்லை; அதனால்தான் முட்டை பிரியாணி சாப்பிடுகிறார்கள்''; ''புரட்சித் தலைவி அளித்திருக்கும் சலுகைகளைக் கொண்டாடுவதற்காக நெசவாளர்களே பிரியாணி ஆக்கிச் சாப்பிடுகிறார்கள்''; ''இலவச அரிசி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நெசவாளர்கள் கஞ்சி காய்ச்சி ஊற்றுகிறார்கள்'' எனத் தெனாவட்டாகவும், திமிரோடும் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கும் அ.தி.மு.க. புள்ளிகளும், அதிகார வர்க்கமும், இந்தத் திமிரை நெசவாளர்களிடம் நேரடியாகக் காட்டினால் ராசிபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வுக்கு நேர்ந்த கதிதான் அவர்களுக்கும் ஏற்படும்!

### இலவச வேட்டி - சேலை திட்டம் - சர்வரோக நிவாரணியா?

✱ ''ஆறு இலட்சம் கைத்தறிகள் உள்ள தமிழகத்தில், ஏறத்தாழ இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான கைத்தறிகள் சுத்தமாக வேலையே இல்லாமல் ஓய்ந்து விட்டன.

✱ கைத்தறி நெசவுக்குப் பேர் போன சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களில் 30,000 உறுப்பினர்களைக் கொண்ட 520 கூட்டுறவு சங்கங்கள் இழுத்து மூடப்பட்டு விட்டன.

✱ கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 50,000 கைத்தறி நெசவாளர்களில், 80 சத வீத நெசவாளர்களுக்கு நெசவு வேலை அறவே இல்லாமல் போய் விட்டது.

✱ கும்பகோணம் அருகிலுள்ள மணலூர் கிராமத்தைச் சேர்ந்த சவரிநாதன் என்ற பட்டு நெசவாளியின் மனைவி ஜாக்குலின் மேரி வறுமையின் கொடுமையை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனார்.

- இப்படிப்பட்ட இக்கட்டில் வாடும் கைத்தறி நெசவாளர்களின் தொழில் - வாழ்க்கை பிரச்சினையைத் தீர்க்க ஓட்டுக் கட்சிகளிடம் தீர்வு என்ன இருக்கிறது?

ஜெயாவைப் பொருத்தவரை 20 கிலோ இலவச அரிசியையும், 25 கோடி ரூபாய் 'நிதி'யையும் ஒதுக்கிவிட்டு, இந்தப் பிரச்சினையைக் கைகழுவி விட்டார். ''பொதுக் கூட்ட மேடைகளில் சால்வைகளுக்குப் பதிலாக கைத்தறி துணிகளை அணிவிக்க வேண்டும்'' என்ற புல்லரிக்க வைக்கும் திட்டத்தைத் தவிர்த்து, வேறு ஏதாவது உருப்படியான யோசனை இருக்கிறதா? எனக் கேட்டால், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில், ''இலவச வேட்டி - சேலை திட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும்'' எனக் கூறுகின்றன.

இலவச வேட்டி - சேலை திட்டம் மீண்டும் கொண்டு வரப்பட்டால் கூட, அத்திட்டம் தமிழகத்திலுள்ள அனைத்து நெசவாளர்களுக்கும் பலன் அளிக்கப் போவது கிடையாது. இலவச வேட்டி - சேலை நெய்வதில் 25,000 நெசவாளர்கள்தான் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இந்த 25,000 நெசவாளர் குடும்பங்களுக்காவது இலவச வேட்டி - சேலைத் திட்டம் சர்வரோக நிவாரணமாக அமையுமா என்றால், அதுவும் கிடையாது.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள குருசாமி பாளையத்தைச் சேர்ந்த பெருமாள் 12 வருடமாக இலவச வேட்டி - சேலை நெய்து கொடுத்து வருகிறார். ''ஒரு நாளைக்கு 2 பேர் நெய்தால் இரண்டு ஜனதா வேட்டிகள்தான் நெய்ய முடியும். கஷ்டப்பட்டு தறி அடித்தால் ஒருநாள் கூலி 50 ரூபாய் கிடைக்கும். இல்லையென்றால் சாதாரணமாக நாற்பது ரூபாய்தான் கிடைக்கும். சொந்தமாக எட்டுத் தறி வைத்திருந்தும் எனது பெரிய பையனை என்னால் படிக்க வைக்க முடியவில்லை'' எனக் கூறுகிறார் அவர்.

இலவச வேட்டி - சேலை திட்டம் கைவிடப்பட்ட பின்பு, விசைத்தறியில் கண்டு போடும் வேலைக்குச் செல்லும் குருசாமி பாளையத்தைச் சேர்ந்த மாதேஸ்வரி, மூன்று வருடத்திற்கு முன்பு தனது மகளின் திருமணத்திற்காக, ஆறாவது படித்துக் கொண்டிருந்த தனது மகனை பத்தாயிரம் ரூபாய்க்கு விசைத்தறி முதலாளியிடம் விற்று விட்டார்.

-- இதுதான் நெசவாளர்களின் வாழ்க்கையை உய்விக்க எம்.ஜி.ஆரால் கொண்டு வரப்பட்ட இலவச வேட்டி - சேலைத் திட்டத்தின் இலட்சணம். இலவச வேட்டி - சேலை நெய்த நெசவாளர்களின் வயிற்றை நிரப்பக்கூடப் பயன்படாத இந்தத் திட்டம், அரசியல்வாதிகளின், அதிகாரிகளின் பணப்பையை நிரப்புவதற்குத்தான் முழுமையாகப் பயன்பட்டது. இந்தத் திட்டத்தின் மகிமையை எடுத்துச் சொல்வதற்கு ஜெயாவின் கடந்த ஆட்சி காலத்தில் இலவச வேட்டி - சேலை தயாரித்து வழங்குவதில் நடந்த 'மெகா' ஊழல் ஒன்றே போதும், வேறு ஆதாரங்களே தேவையில்லை. ''நமக்கும் கமிசன் கிடைக்குமே'' என்ற 'பரந்த மன' அடிப்படையில் கூட, இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வர, ஜெயா தயாராக இல்லை. ஏனென்றால், உலக வங்கியின் உத்தரவு அப்படி!

### கைத்தறியை முழுங்கத் துடிக்கும் மில் முதலாளிகள்

''ஐரோப்பிய மேலை நாடுகள் தங்கள் நாட்டு ஜவுளித் தொழிலைப் பாதுகாக்க விதிக்கும் பல்வேறு விதமான வரியில்லாத கட்டுப்பாடுகள்தான் இந்திய ஜவுளி ஏற்றுமதியைப் பாதிப்பாக'' உலக வர்த்தகக் கழகம் குறிப்பிடுகிறது. இந்தியாவின் ஜவுளி உற்பத்தியாளர்கள், குறிப்பாக மில் முதலாளிகள் கண்ணாமூச்சி காட்டும் மேலை நாட்டுச் சந்தையைப் பிடிக்க, அந்நாடுகள் விதிக்கும் இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கக் கோரிப் போராட வேண்டும். ஆனால் அவர்களோ, அதற்கு மாறாக, மேலை நாட்டுச் சந்தையைப் பிடிக்க வேண்டும் என்றால், உள்நாட்டில் தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்; கைத்தொழிலுக்குக் கொடுக்கப்படும் அரைகுறை பாதுகாப்பையும் ஒழிக்க வேண்டும்'' என்கிறார்கள்.

1985-இல் உருவாக்கப்பட்ட ஜவுளிக் கொள்கையின்படி, ''பெரும் பஞ்சாலைகள் தங்களின் மொத்த நூல் உற்பத்தியில், 50 சத வீதம் கைத்தறிக்கான சிட்டா நூலைத் தயாரிக்க வேண்டும்'' என்ற விதி உருவாக்கப்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதுதான் மில் முதலாளிகளின் நெடுநாளைய ஆசை.

பெரிய மற்றும் நடுத்தர பஞ்சாலைகள் கைத்தறிக்குத் தேவைப்படும் நூலைத் தயாரிப்பதற்காக, அவைகளுக்கு விற்பனை மற்றும் கலால் வரிச் சலுகைகள் வழங்கப்ப

www.padippakam.com

டுகிறது; மின்சார மானியம் கூட வழங்கப்பட்டது. இந்தச் சலுகைகளை இம்மி விடாமல் அனுபவித்துக் கொள்ளும் பஞ்சாலை முதலாளிகள், குறிப்பிட்ட அளவு சிட்டா நூலைத் தயாரிப்பதில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் தில்லுமுல்லுகள் செய்து வருகின்றனர். தாராளமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கைத்தறிக்காக உற்பத்தி செய்யப்பட்ட 40 மற்றும் 20-ஆம் நம்பர் நூல்களை ஏற்றுமதி செய்து கொள்ளை இலாபம் அடிக்கின்றனர். சிட்டா நூல் கிடைப்பதில் செயற்கையான தட்டுப்பாடு உருவாக்கப்பட்டு, கைத்தறிக்குப் பயன்படுத்தப்படும் 40, 60 ஆம் நம்பர் நூலின் விலை தாறுமாறாக உயர்த்தப்பட்டது. இந்த விலையேற்றம் ஒருபுறமிருக்க, மைய அரசு கடந்த ஆண்டு பட்ஜெட்டில் சிட்டா நூலின் மீது 9 சதவீதம் கலால் வரி விதித்தது. இதற்கு முன் நாட்டை ஆண்டவர்கள் கூட, கைத்தறி நெசவாளிகள் மீது இப்படிப்பட்ட வரிச் சுமையை ஏற்றியது கிடையாது.

1985 ஜவுளிக் கொள்கையின் படி 22 இரகங்கள் கைத்தறியில் தான் தயாரிக்க வேண்டும் என ஒதுக்கப்பட்டது. தாராளமயத்தின் பின் அந்த ஒதுக்கீடு 11 இரகங்களாகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்த 11 இரகங்களைச் சட்ட விரோதமான முறையில் விசைத்தறி முதலாளிகளும் தயாரித்து வருவதை, அதிகாரிகள் இலஞ்சம் வாங்கிக் கொண்டு கண்டு கொள்வதேயில்லை. ஜனதா ரகமான இலவச வேட்டி - சேலை ரகங்களைக் கூட விசைத்தறி முதலாளிகள் விட்டு வைப்பதில்லை என அத்தனூர் பகுதி நெசவாளர்கள் பு.ஜ. நிருபர்களிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பஞ்சாலை முதலாளிகளின் பேராசையால் கைத்தறி நூல் கிடைப்பதில் செயற்கையாக உருவாக்கப்படும் தட்டுப்பாடு; நூல் விலையேற்றம்; கைத்தறிக்காக ஒதுக்கப்பட்ட இரகங்களை விசைத்தறி முதலாளிகளும் ஓட்டுவது ஆகியவை கைத்தறித் தொழிலின் மென்னியைப் பிடிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. இதைக் கண்காணித்து ஒழுங்குப்படுத்தாத மைய அரசு, தாராளமயத்திற்காக, கைத்தறி தொழிலையே அழித்து விடும் நடவடிக்கைகளை எடுக்கக் காத்திருக்கிறது. மைய அரசு நியமித்த சத்யம் கமிட்டி, ''பெரிய மற்றும் நடுத்தர பஞ்சாலைகள், தங்கள் உற்பத்தியில் 50 சதவீதம் கைத்தறிக்கான நூலை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும், கைத்தறிக்காக இரகங்கள் ஒதுக்கீடு செய்வதையும் ஒழித்துக் கட்ட வேண்டும்'' எனப் பரிந்துரை செய்திருக்கிறது.

### கைத்தறி நவீனமயமாவதைத் தடுப்பது யார்?

கைத்தறி நெசவாளர்கள், புதிய பொருளாதாரக் கொள்கையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள்; ஆனால், அதிகார வர்க்கமோ பாதிக்கப்பட்ட நெசவாளர்களையே குற்றவாளியாக்குகிறது. விருதுநகர் மாவட்ட ஆட்சியாளர், ''காலத்திற்கேற்ற சேலைகளைத் தயாரிக்க வேண்டும்; ஏற்றுமதிக்கேற்ப சேலைகளின் டிசைன்களை மாற்ற வேண்டும்'' என நெசவாளர்களுக்கு நவீனமயம் பற்றி உபதேசிக்கிறார்; மேலும், ''வெளியே டிமாண்ட் இல்லாத சேலைகளைத் தயாரித்துவிட்டு, அதை அரசே வாங்கிக் கொள்ள வேண்டும் என நெசவாளர்கள் எதிர்பார்ப்பதாக''க் குற்றப் பத்திரிகை வாசிக்கிறார்.

இதைப் படிக்கும்பொழுது தமிழகக் கைத்தறி நெசவாளர் பழைய இரகத் துணிகளை மட்டும்தான் நெய்வோம் என அடம் பிடிப்பதாகத் தோன்றும். உண்மையில், கைத்தறி நவீனமயமாவதற்கு முட்டுக் கட்டையாக இருப்பதே அதிகார வர்க்கம்தான்.

கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் நெசவாளர்கள், கோ-ஆப்டெக்ஸ் தரும் அரசு கூட்டுறவு ஆலை நூல்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது தமிழக அரசு. ''கூட்டுறவு ஆலை நூல் தரமில்லாமல் உள்ளது. 1 கிலோ நூல் வாங்கி சேலை நெய்து கொண்டு வந்து கொடுத்தால், 1/4 கிலோ குறைகிறது. தரம் இல்லாத கூட்டுறவு சொசைட்டி ஜரிகை ரூ. 230/- ஆனால் தரமான மில் முதலாளிகளின் ஜரிகை ரூ. 180/-க்கு கிடைக்கிறது'' என அதிகார வர்க்கத்தின் தொழில் நாணயத்தைப் புட்டு வைக்கிறார்கள், திருச்சி உறையூர் பகுதியைச் சேர்ந்த நெசவாளர்கள். கைத்தறி நெசவாளர்களுக்குத் தரமான நூலை வழங்கக்கூட வக்கற்ற அதிகார வர்க்கத்துக்கு, நவீனமயத்தைப் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?

அதிகார வர்க்கம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அரித்துத் தின்னும் ஒட்டுண்ணிகளாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. ஒரு கைத்தறி நெச

## தமிழகம் எதிர்நோக்கும் அபாயம்

**ஜனவரி 1, 2005 தொடங்கி ஜவுளி இறக்குமதி தொடர்பான எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும், இந்தியா நீக்கி விட வேண்டும் என்பது உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனை.**

**உலக வர்த்தகக் கழகத்தின் இந்த நிபந்தனை தமிழகத்திற்குத்தான் மிகப் பெரும் அபாயமாகும். ஏனென்றால், இந்தியாவின் மொத்த கைத்தறி உற்பத்தியில் 30 சதவீத உற்பத்தி தமிழகத்தில்தான் நடைபெறுகிறது. இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மொத்த கைத்தறி துணிகளில், 50 சதவீதத் துணிகள் தமிழகத்தில்தான் தயாரிக்கப்படுகின்றன. உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனை அமலுக்கு வந்தபின், தமிழகக் கைத்தறி உற்பத்தியாளர்கள், எந்த விதமான தொழில் பாதுகாப்பும் இன்றி, அரசின் எந்தவிதமான உதவியும் இன்றி, சர்வதேச ஜவுளி உற்பத்தியாளர்களோடு, உள்நாட்டுச் சந்தையிலும், வெளி நாட்டுச் சந்தையிலும் போட்டி போட வேண்டும்.**

**நெசவாளர்களுக்குக் கஞ்சி ஊற்றும் தி.மு.க.வின் மாறன்தான், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதிக்கு அனுமதியளித்தார். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் வணிகத் துறை அமைச்சர் மாறன் அளித்த இச்சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, சீனாவில் இருந்து இறக்குமதியாகும் விசைத்தறி பட்டு, காஞ்சிபுரம் கைத்தறி பட்டைப் பதம் பார்க்கத் தொடங்கி விட்டதாகக் கூறுகிறார் முன்னாள் எம்.எல்.ஏ.வான இ.எஸ்.எஸ். ராமன்.**

**மதுரை - செல்லூர் பகுதியில் கஞ்சி ஊற்ற முயன்ற முன்னாள் தி.மு.க. அமைச்சர் தா. கிருட்டிணனைத் தாக்கும் போலீசு: அதிகார அத்துமீறல்.**





படிப்பகம்

வாளி காலை 6 மணி தொடங்கி இரவு 9 மணி வரை வேலை செய்தாலும், அவருக்குக் கூலியாக ஐம்பது ரூபாய் கிடைப்ப தில்லை. ஆனால், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தனி அதிகா ரிக்கோ மாதமொன்றுக்குச் சம்பளம் ரூ. 18,000/-

''இந்தத் தனி அதிகா ரிக்கு வருடமொன்றுக்குச் சம்பளமாக இரண்டு லட்ச ரூபாய் சொசைட்டியின் பணத்தில் இருந்து தரப்படு கிறது. இந்தச் சம்பளத்தை அரசே கொடுக்க வேண்டும் எனக் கேட்டிருந்தோம். அந்தக் கோரிக்கையை அர சாங்கம் கண்டு கொள்ளவே இல்லை.''



சென்னை - அசோக் நகரிலுள்ள நியாய விலைக் கடையில் ஜனதா ரக வேட்டி - சேலை விற்பனையைத் தொடங்கி வைக்கும் முதல்வர் ஜெயா: நிவாரண நாடகம்.

''இந்த இரண்டு இலட்சம் இருந்தால், நாங்களே நூலை வெளியே கொள்முதல் செய்து சொசைட்டியைச் சிறப்பாக நிர்வாகம் செய்ய முடியும்; எல்லோருக்கும் நிறுத்தாமல் வேலை கொடுக்க முடியும். எங்களுக்குத் தெரிந்த அளவுக்குக்கூட, தனி அதிகாரிக்கு வியாபார நுணுக்கம் தெரிவ தில்லை'' எனக் குற்றம் சாட்டுகிறார்கள் திருச்சி உறையூர் பகுதி நெசவாளர்கள்.

''தீன்தயாள் ஹாத் கர்கா யோஜனா - 2002 என்ற மைய அரசின் திட்டத்தின் கீழ் 1000 உறுப்பினர் கொண்ட ஒரு சங்கத்தில் இருந்து 100 உறுப்பினர்களைத் தேர்ந்தெ டுத்து, தற்போதைய நிலைமைக்கு ஏற்றாற் போல தறியை மாற்றி அமைக்க அவர்க ளுக்குப் பயிற்சி கொடுப்போம்; பயிற்சி காலத்தில் நவீன ரகத்தை நெய்வதற்குச் சொல்லிக் கொடுப்போம்; பயிற்சி காலத்தில் உதவிப் பணமாக ரூ. 750/- வழங்குவோம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த அறிவிப்பு காகிதத்தோடு நின்றுவிட்டது'' என அரசின் அக்க றையைப் புட்டு வைக்கிறார், முசிறியி லுள்ள சிறீ அழகு நாச்சியம்மன் பருத்தி மற்றும் பட்டுக் கைத்தறி நெசவாளர் சங்க மேலாளர் ராமச்சந்திரன்.

**நெசவாளர்கள் வேறு தொழிலுக்கு மாற முடியுமா?**

தமிழகக் கைத்தறி துறை அமைச்சர் சோமசுந்தரமும் கைத்தறித் துறை இயக் குநர் ஆனந்தும் கூட்டணி சேர்ந்து கொண்டு, தங்களுக்கு கமிசன் கிடைக்காது என்ற காரணத்தினாலேயே, தமிழக நெசவா ளர்களுக்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் கூலி கிடைக்கக் கூடிய 10 இலட்சம் சேலைகள் நெய்யும் ஆந்திர அரசின் ஆர்டரை வாங்கிக் கொடுக்க மறுத்து விட்டார்கள். இப்படி நெசவாளர்களின் வாயிலும் வயிற் றிலும் மண்ணை அள்ளிப் போடும் ஆளுங் கும்பல், ''நீங்க ஏன் வேற தொழிலுக்கு மாறிப் போகக் கூடாது?'' எனக் கேட்டு நஞ்சையும் பாய்ச்சுகிறது.

அதிகார வர்க்கத்தை ஒரு துறையில் இருந்து இன்னொரு துறைக்குப் பந்தாடு வதைப் போல பந்தாடுவதற்கு கைத்தறி நெசவாளர்கள் கூலிக்கு மாரடிக்கும் அரசு ஊழியர்கள் அல்ல. கைத்தறி நெசவாளர் களை அப்படி மாறச் சொல்லுவது வேரோடு மரத்தைப் பிடுங்கி எறிவதைப் போன்றதுதான். இது ஒருபுறமிருக்க, அவர்கள் அப்படி வேறு தொழிலுக்கு மாறிச் செல்வது நடைமுறையில்தான் சாத்தியமாகுமா?

''விசைத்தறி வேலைக்குப் போகலாம் என்றாலும், எங்களைப் போன்ற குறைந்த படிப்பு உள்ளவர்கள் வேலை பழக வேண்டும்; அதற்குக் குறைந்தது இரண்டு வருடமாகும். குறைந்தது பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். அப்போ துதான் ஏற்றுமதிக்கான நவீன ரகத்தை விசைத்தறியில் ஓட்ட முடியும். இப்போது விசைத்தறியிலும் ஏற்றுமதிக்கான ஆர்டர் அதிகம் கிடைக்காததால், வேலையும் அங்கு அதிகம் இருப்பதில்லை. இந்தச் சூழ்நிலையில் எங்கள் குலத்தொழிலையும் விட்டு விட்டு திக்கு திசை தெரியாமல் சிர மப்பட வேண்டியதுதான்'' என அதிகார வர்க்கத்தின் ஆலோசனையை அம்பலப்ப டுத்துகிறார்கள் அத்தனூர் கைத்தறி கூட்டு றவு சங்க உறுப்பினர்கள்.

இப்படி வேறு தொழிலுக்கு மாறிப் போனவரின் நிலைமை எப்படி இருக்கிறது தெரியுமா? ''என்னிடம் உள்ள விசைத்தறி ஒவ்வொன்றும் ரூ. 25 ஆயிரம் பெறுமா னதுதான். இதில் நம்ம நாட்டிற்குத் தேவை யான பெட்ஷீட், துண்டு, டவல் மட்டும்தான் நெய்ய முடியும். மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்து விட்டதால், எங்க ளுக்கும் அவ்வப்போது வேலை இல்லாமல் போய் விடுகி றது. வெளிநாட்டு ஏற்றும திக்கு நெய்யும் விசைத்தறி வைத்து [illegible]வர்கள்கூட அரசின் தாராளமயக் கொள்கையால் ஏற்றுமதி இல்லாமல் மிகவும் சிரமப் படுகின்றனர். பேசாமல் பழைய எங்கள் குலத் தொழிலான கைத்தறி நெய்வதற்கே போய் விடலாம் என நினைக் கின்றேன்'' என்கிறார், குரு சாமிபாளையத்தைச் சேர்ந்த செந்தில் என்ற விசைத்தறி உரிமையாளர்.

தமிழகக் கைத்தறி தொழில், 21-ஆம் நூற்றாண்டிலும் நிலைத்தி ருக்க வேண்டுமானால், முதலில் கைத்தறி நெசவுத் தொழிலின் கழுத்துக்குக் கத்தியாகத் தொங்கும் தாராளமயம் தடுத்து நிறுத்தப் பட வேண்டும்; கைத்தறிகளைக் காலத்திற் கேற்ப மாற்றியமைப்பதோடு, பரம்பரை பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களுக்கு உதவித் தொகை யோடு நவீன இரகங்களை நெய்வதற்கான பயிற்சி அளிக்க வேண்டும்.

நெசவாளர்களைத் தற்பொழுது வாட்டும் பட்டினிப் பிரச்சினையைத் தீர்க்க, அவர்களே கோருகிறபடி, கோ-ஆப்டெக் ஸிலும், கூட்டுறவு சங்கங்களிலும் தேங்கிக் கிடக்கும் ஜவுளி முழுவதையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும். நெசவாளர் களுக்கு தரப்பட வேண்டிய கூலி பாக்கி உட னடியாகத் தரப்படவேண்டும். நெசவா ளர்கள் தர வேண்டிய கடனுக்காக எடுக்கப் படும் ஜப்தி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவ தோடு, கடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். சிட்டா நூல் மீது மைய, மாநில அரசுகள் விதித்துள்ள வரிகள் நீக்கப்பட வேண்டும்; நெசவாளர்களுக்குத் தரமான நூல் மலிவான விலையில் கிடைக்க உத்தர வாதம் செய்வதோடு, கைத்தறிக்கு ஒதுக்கப் பட்ட இரகங்களைத் தறி முதலாளிகள் ஓட்டாமல் தடுக்க வேண்டும். இதைக் கண்காணிக்கும் அதிகாரம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டும். நெசவாளர் கூட்டுறவு சங்கங் களில் ஒட்டுண்ணியாக இருக்கும் தனி அதி காரிகள் நீக்கப்பட்டு, சங்கங்களுக்கு உடன டியாகத் தேர்தலை நடத்தி, நிர்வாகக் குழுவை அமைக்க வேண்டும். இதை யெல்லாம் செய்ய முடியாமல், மீண்டும் இலவச வேட்டி - சேலைத் திட்டத்தை அமல்படுத்தக் கோருவது புண்ணுக்குப் புனுகு தடவுவதாகவே இருக்கும்.

● பாலன்

(பு.ஜ. செய்தியாளர்களின் உதவியுடன்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## இருண்ட கண்டத்தில் போராட்ட ஒளிக்கீற்று

ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள நைஜீரியாவில், அமெரிக்க ஏகபோக எண்ணெய் நிறுவனத்துக்கு எதிராக கிராமப்புற பெண்கள் நடத்திய முற்றுகைப் போராட்டமும் அதில் அவர்கள் அடைந்துள்ள முதற்கட்ட வெற்றியும் உலகெங்குமுள்ள உழைக்கும் மக்களின் போராட்ட உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சியுள்ளது.

எண்ணெய் வளமிக்கதாயினும் நைஜீரியா ஒரு ஏழை நாடு. அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகளின் எண்ணெய் நிறுவனங்களால் சூறையாடப்பட்டு வரும் நாடு. ஊழல் பெருச்சாளிகளான அந்நாட்டின் ஆட்சியாளர்களோ, இராணுவ சர்வாதிகாரிகள். ஏகாதிபத்தியங்களின் கைப்பாவைகளான இவர்கள், நைஜீரிய மக்களின் வாழ்வையும் ஜனநாயக உரிமைகளையும் பறித்து அடக்குமுறையையும் அரசு பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விடும் கொடுங்கோலர்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்க ஏகபோக எண்ணெய் நிறுவனமான "ஷெல்"-க்கு எதிராகப் போராடிய மக்கள் தலைவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியுமான கென் சரோ-விவா என்பவரையும் இதர எட்டு முன்னணியாளர்களையும் நைஜீரிய சர்வாதிகாரிகள் தூக்கிலிட்டுக் கொன்றனர். அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களில் பணியாற்றும் நைஜீரியத் தொழிலாளர் போராட்டங்கள் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டன. தமது வாழ்வையும் வளத்தையும் பறித்துக் கொண்டதோடு சுற்றுச்சூழலையும் நஞ்சாக்கி வரும் அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு எதிராக நைஜீரிய பழங்குடியின மக்கள் நடத்திய போராட்டங்கள் இராணுவ பூட்சுகளாலும் துப்பாக்கிகளாலும் நசுக்கப்பட்டன.

இத்தகைய அடக்குமுறைகளும் கொடூரங்களும் நிலவிய சூழலிலும், எண்ணெய் நிறுவனத் தொழிலாளர்களின் மனைவி - சகோதரி - தாய் - உள்ளிட்ட பெண்கள் பெரும்படையாய்த் திரண்டனர். நகரங்கள் மட்டுமின்றி சுற்றுப்புற கிராமங்களின் பழங்குடியினப் பெண்களும் இவர்களுடன் சேர்ந்து புதிய அமைப்பைக் கட்டியமைத்தனர். 30 வயதான பெண்கள் முதல் 90 வயதான மூதாட்டிகள் வரை உள்ள இம்மகளிர் அமைப்பை நைஜீரிய மக்கள் "மமா"க்கள் என்று மரியாதையுடன் குறிப்பிடுகின்றனர்.



கடந்த ஜூலை 8-ஆம் நாளன்று எஸ்கிரோவோஸ் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள், நைஜர் நதியின் நடுவேயுள்ள செவ்ரான் டெக்சாகோ எனும் அமெரிக்க ஏகபோக எண்ணெய் நிறுவனத்தின் துரப்பண மேடையை திடீரென முற்றுகையிட்டனர். இந்நிறுவனத்தின் படகுகளைக் கொண்டு ஆற்றைக் கடந்து வந்த அவர்கள், துரப்பணமேடை, எண்ணெய்க் குழாய், தொடர்பு மையம் மற்றும் விமான ஓடுபாதை அனைத்தையும் முற்றுகையிட்டு கைப்பற்றிக் கொண்டனர். ஏறத்தாழ 700-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அமெரிக்க, பிரிட்டிஷ், கனடிய தொழில்நுட்பவாதிகள் பிணைக் கைதிகளாக அவர்களிடம் சிக்கிக் கொண்டனர். பழங்குடியின மக்களின் பாரம்பரிய முறையிலான அவமானப்படுத்தும் சைகைகளைக் காட்டியும், ஆடைகளைக் களைந்து மலங்கழிப்போம் என்று எச்சரித்தும் அவர்கள் ஊழியர்களைச் சிறை பிடித்தனர். இதனால் பீதியடைந்த செவ்ரான் டெக்சாகோ நிறுவனம், நைஜீரிய வீராங்கனைகளுடன் பேச்சு வார்த்தைக்கு முன் வந்தது. அதைத் தொடர்ந்து ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில், எஸ்கிரோவோஸ் நகரைச்சுற்றியுள்ள கிராமங்களில் பள்ளிகள், மருத்துவமனைகள், கலையரங்கம், மின்சார - குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும், கிராமப்புற மக்களின் எதிர்கால வாழ்வுக்கு மீன் பண்ணை, கோழிப் பண்ணை அமைப்பதாகவும், ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 25 குடும்பங்களுக்கு எண்ணெய் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு அளிப்பதாகவும் செவ்ரான் டெக்சாகோ நிறுவனம் வாக்களித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றாவிட்டால், அடுத்த கட்டப் போராட்டம் தொடரும் என்று நைஜீரியத் தாய்மார்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க ஏகபோக எண்ணெய் நிறுவனத்தையே மண்டியிட வைத்த தாய்மார்களின் போராட்டம், நைஜர் நதியின் டெல்டா பகுதியெங்கும் காட்டுத் தீயாகப் பரவி பல பகுதிகளில் பெண்கள் இத்தகைய முற்றுகைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இருண்ட கண்டத்தில் விடியலுக்கான ஒளிக்கீற்றுகள் பரவத் தொடங்கிவிட்டன.

## பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக... கூராகுண்டு வழியில் பிளாச்சிமடா

தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள கொலம்பியா நாட்டில் தொழிலாளர்களின் இரத்தத்தைக் குடிக்கும் கொலைகார கோகோ கோலா நிறுவனம், கேரளாவில் வரைமுறையின்றி நிலத்தடி நீரை உறிஞ்சி வளமான பாலக்காடு மாவட்டத்தின் சிற்றூர் வட்டாரத்தையே வறண்ட பாலைவனமாக்கக் கிளம்பியுள்ளது.

கேரளாவின் பாலக்காடு மாவட்டம் சிற்றூர் வட்டத்திலுள்ள பிளாச்சிமடா கிராமத்தில், அமெரிக்காவின் கோகோ கோலா நிறுவனம் தனது குளிர்பான ஆலையை நிறுவியுள்ளது. இங்கு 6 ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து ஒரு நாளைக்கு ஏறத்தாழ 15 லட்சம் லிட்டர் தண்ணீரை இந்நிறுவனம் வரைமுறையின்றி உறிஞ்சுகிறது. இதனால் இந்த கிராமத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணறுகள் வற்றிவிட்டன. தண்ணீர் உள்ள ஒருசில கிணறுகளின் தண்ணீரும் வாயில் வைக்க முடியாத அளவுக்கு துவர்ப்பாகி விட்டது. தண்ணீரைக் காய்ச்சினால் பாத்திரத்தின் அடியில் வெள்ளையாக ரசாயன உப்பு படிகிறது. இக்கிராம மக்கள் தினமும் 2,3 கி.மீ தூரம் சென்று சுற்றுப்புற கிராமங்களிலிருந்து குடிநீர் எடுத்துவர வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

இதுதவிர, இக்கிராமத்திலும் சுற்றுப்புற பகுதிகளிலும் குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுகின்றன. பலருக்கு உடலெங்கும் அரிப்பு, தடிப்பு மற்றும் கட்டிகள் ஏற்படுகின்றன. மாலை நேரங்களில் கோக் ஆலையிலிருந்து வெளியேற்றப்படும்

www.padippakam.com



கழிவுகளிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் கிளம்பி இப்பகுதியில் குடியிருக்கவே முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இக்கழிவுகள் வளமான விவசாய நிலங்களில் பரவி பயிர்களை நாசப்படுத்துகின்றன.

நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறிஞ்சுவதோடு, சுற்றுச் சூழலையும் நஞ்சாக்கி சிற்றூர் வட்டாரத்தையே பாலைவனமாக்கக் கிளம்பியுள்ள கோகோ கோலா குளிர்பான ஆலையை மூடக் கோரி நூற்றுக்கணக்கான கிராம மக்கள் கடந்த இரு மாதங்களாகப் போராடி வருகின்றனர். இந்தப் பகுதியைச் சேர்ந்த மருத்துவர் சதிஷ் சந்திரன், ஆலையைச் சுற்றிலுமுள்ள கிராம மக்களுக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படுகிறது என்பதை ஆதாரங்களுடன் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்துக்குப் புகார் மனுவாக 4 மாதங்களுக்கு முன்பு அனுப்பி வைத்துள்ளார். ஆனாலும் இன்று வரை மைய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோகோ கோலா குளிர்பானம் மட்டுமின்றி அதன் ஆலையும் மக்கள் விரோதமானது; நாட்டுக்கு எதிரானது என்ற உண்மைகளை விளக்கி துண்டுப் பிரசுரங்களுடன் பிரச்சாரம் செய்து வரும் கிராம மக்கள், அண்மையில் ஆலையின் எதிரே மிகப் பெரிய தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியுள்ளனர்.



கோக் நச்சு ஆலையை மூடக் கோரி கிராம மக்களின் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்.

கேரளத்தின் கூராசுண்டு கிராம மக்கள் கடந்த ஈராண்டுகளாக பாமாயில் இறக்குமதியையும் பயன்பாட்டையும் எதிர்த்து முன்னுதாரணமிக்கப் போராட்டத்தைத் தொடங்கி, ஆரம்ப வெற்றியையும் சாதித்துள்ளனர். அந்த வழியில் இன்று பிளாச்சிமடா கிராம மக்கள் அமெரிக்க கோகோ கோலா ஆலையை மூடக் கோரி போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஓங்கட்டும் போராட்டம்! ஒழியட்டும் அமெரிக்க ஆதிக்கம்!

## குரப்புலிகளின் சோகக் கதை

கேரளத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு, கொச்சி நகரில் உலகளாவிய முதலீட்டாளர்களின் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைப் பெருக்கி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது என்ற பெயரில் தாராளமயமாக்கலையும் அந்நிய ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தையும் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் இக்கூட்டத்தை மாநில அரசு ஆடம்பரமாக ஏற்பாடு செய்து வருகிறது. இதை எதிர்த்து, ''இந்நிகழ்ச்சி நடைபெற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்; அந்நிய மூலதன ஆதிக்கத்தையும் தாராளமயத்தையும் எதிர்த்துப் போராடுவோம்'' என்று சி.பி.எம். கட்சியின் இளைஞர் அமைப்பான இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டு எச்சரித்து வந்தது.

அடிப்படை வசதிகளைச் செய்து தராத நகராட்சி - பஞ்சாயத்து அலுவலகங்கள் முன்பாக சிரிப்பாய் சிரிக்கும் போராட்டம், சுடுகாடுகளின் முன்பாக முன்னோர்களிடம் நியாயம் கேட்டு ஆவியெழுப்பும் போராட்டம் - எனபோராட்டங்களையே கொச்சைப்படுத்தி வரும் வாலிபர் சங்கத்தினர், அந்நிய மூலதன ஆதிக்கத்தை எதிர்க்கக் கிளம்பி விட்டனர் என்றதும் கேரள மக்கள் ஆச்சரியப்பட்டனர். வாலிபர் சங்கத்தினருக்குப் போராட்ட உணர்வு வந்து விட்டதோ என்று புருவங்களை நெறித்தனர்.

ஆனால் இவையெல்லாம் வெற்றுச் சவடால்கள்தான் என்பதை அடுத்த சில நாட்களிலேயே வாலிபர் சங்கத்தினர் நிரூபித்துக் காட்டிவிட்டனர். கடந்த ஆகஸ்டு 18-19 தேதிகளில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் தேசிய செயற்குழு கூட்டம் கோழிக்கோடு நகரில் நடந்தது. அதைத் தொடர்ந்து அச்சங்கத்தின் தேசிய தலைவர் கிருஷ்ணதாஸ், பொதுச் செயலாளர் தபஸ் சின்ஹா ஆகியோர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். ''மாநிலத்தின் வளர்ச்சிக்காக அந்நிய முதலீட்டாளர்களை ஈர்த்து தொழில் தொடங்கும் எந்தவொரு முயற்சியையும் நாங்கள் வரவேற்கிறோம்; இதில் எங்களுக்கும் சி.பி.எம். கட்சிக்கும் வேறுபாடு எதுவும் கிடையாது'' என்று ஒரே போடாகப் போட்டனர். அதிர்ச்சியடைந்த பத்திரிகையாளர்கள், ''அப்படியானால் உங்கள் வாலிபர் சங்கத்தின் கேரளக் கிளையினர் அறிவித்த போராட்டம் என்னவாகும்?'' என்று கேட்ட போது, ''அரசுத்துறை நிறுவனங்களை அந்நிய முதலீட்டாளர்களுக்குத் தாரை வார்த்தால், அதற்காக உலகளாவிய முதலீட்டாளர்களின் கூட்டம் நடத்தப்பட்டால், நாங்கள் போராடுவோம்!'' என்று அவர்கள் விளக்கமளித்துள்ளனர்.

அதாவது, அரசுத்துறை நிறுவனங்களை அந்நிய நிறுவனங்களிடம் தாரை வார்த்தால் எதிர்ப்போம்; அதேசமயம், மாநிலத்தின் வளர்ச்சிக்காக அந்நிய தனியார் முதலாளிகள் தொழில் தொடங்குவதை ஆதரிப்போம் என்று தமது சந்தர்ப்பவாதத்தை விளக்கியுள்ளனர். இதன்படி, இவர்கள் அமெரிக்க ஏகபோக குளிர்பான நிறுவனங்களான கோகோ கோலா, பெப்சி ஆகியவற்றை எதிர்த்துப் போராட மாட்டார்களாம்! ஏனெனில், அது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கானதாம்! ஆனால் கோக்கும், பெப்சியும் வந்து உள்நாட்டு குளிர்பானங்களை ஒழித்துக் கட்டி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்துள்ளதை நாட்டு மக்கள் நன்கறிவர். மேலும், அந்நிய முதலீட்டாளர்கள் புதிதாக எந்த தொழிலையும் தொடங்குவதில்லை; புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதில்லை. இதர நிறுவனங்களைக் கைப்பற்றுவது; பங்குச் சந்தை - ஊக வணிகத்தில் ஈடுபட்டு இலாபத்தையும் முதலீட்டையும் கடத்திச் செல்வது எனும் 'சீட்டு கத்தரிக்கும்' வேலையில்தான் ஈடுபடுகின்றனர். இதைத்தான் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கானது என்ற பெயரில் போலி கம்யூனிஸ்டுகள் வெட்கமின்றி ஆதரித்து நியாயப்படுத்துகின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com



உள்நாட்டுத் தொழில்களை அழித்து மக்களை மரணக் குழியில் தள்ளிவரும் தாராளமயக் கொள்கைகளையும், அந்நிய மூலதன ஆதிக்கத்தையும் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் ஆதரித்து வரும் இப்பித்தலாட்டக்காரர்கள், வேலையின்மையை எதிர்த்து நவம்பர் மாதத்தில் டெல்லிக்கு ஊர்வலம் செல்லப் போகிறார்களாம்! இதைவிட மோசடித்தனம் வேறென்ன இருக்க முடியும்?

## மீண்டும் ''சதி'' – சதிகாரர்கள் யார்?

வெள்ளைக்காரன் காலத்திலேயே ''சதி'' எனும் விதைவைகளை உடன்கட்டை ஏற்றும் கொடுஞ்செயல் ஒழிக்கப்பட்டு விட்டது என்கின்றன, பாடப்புத்தகங்கள். ஆனால் அந்நிலப்பிரபுத்துவ பெண்ணடிமைத்தனம் நீறுபூத்த நெருப்பாகவே இன்னும் நீடிக்கிறது. கடந்த ஆகஸ்டு 6-ஆம் தேதியன்று அது மீண்டும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியுள்ளது.

மத்தியப் பிரதேசத்தின் பன்னா மாவட்டத்திலுள்ள தமோலி பட்னா கிராமத்தில், குட்டுபாய் எனும் 65 வயதான பெண்மணி தனது கணவர் நோய்வாய்ப்பட்டு இறந்ததும், அவருடன் சேர்ந்து உடன்கட்டை ஏற்றப்பட்டு, உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். இக்கொடுஞ்செயல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் முன்னிலையில் நடந்துள்ளது.

தனது கணவர் இறந்ததும் துக்கம் தாளாமல் அரற்றிய குட்டுபாய், சவ ஊர்வலத்தில் மணப்பெண் கோலத்தில் உடன்வந்து கணவரோடு உடன்கட்டை ஏறப் போகிறேன் என்றும் என்னை யாரும் தடுக்காதீர்கள் என்றும் கூறினாராம். மயானத்தில் கணவனின் உடலை தனது மடியில் கிடத்திக் கொண்டு கட்டைகளை அடுக்கி சிதைக்கு தீ மூட்டக் கோரினாராம். அதன்படியே கிராம மக்கள் சடங்குகளை செய்து, சிதைக்குத் தீயிட்டு ''சதி மாதா கி ஜே!'' என்று முழங்கியபடியே வணங்கினார்களாம். இச் சதிச்செயல் நடந்து முடிந்து பல நாட்களுக்குப் பின்னர் மெதுவாக செய்திகள் கசியத் தொடங்கி ம.பி. சட்டமன்றத்தில் ஆளும் காங்கிரசுக் கட்சியும், எதிர்த்தரப்பு பா.ஜ.க.வும் காரசாரமாக மோதிக் கொண்டுள்ளன.

குட்டுபாய் தம்பதிகள் ''நய்'' என்னும் ஒடுக்கப்பட்ட நாவிதர் சாதியினர். இச்சாதியினர் பார்ப்பன - இந்து முறைப்படி உடன்கட்டை ஏறியதாக வரலாறே இல்லை. மேலும் இச்சாதியைச் சேர்ந்தவர்கள் இக்கிராமத்தில் மொத்தமே இரண்டு குடும்பங்கள்தான். பெரும்பான்மையினர் இதர பிற்பட்ட மற்றும் மேல்சாதியினராவர். இக்கிராமத்தில் கடும் வறட்சியும் வறுமையும் நீடிப்பதால், அது கடவுள் கோபத்தால் ஏற்பட்டுள்ள விளைவு என்றும், உடன்கட்டை ஏற்றுவதன் மூலம் கடவுளின் அருள் கிடைத்து மழை பெய்யும் என்று கிராம மக்கள் தீர்மானித்து இச்''சதி''யைச் செய்ததாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வருகின்றன.

மேலும், குட்டுபாயை உடன்கட்டை ஏற்றும் ''சதி''யைப் பற்றி இக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் போலீசுக்குத் தகவல் கூறியுள்ளார். உள்ளூர் போலீசார் சிறிய குழுவாக வந்து இச்''சதியை''த் தடுக்க முற்பட்டபோது, கிராம மக்கள் போலீசார் மீது கல்லெறித் தாக்குதலை நடத்தி விரட்டியடித்துள்ளனர். குட்டுபாயின் மூத்த மகன் சிதைக்குத் தீ வைக்கத் தயங்கி நின்றபோது, இக்கிராமத்தைச் சேர்ந்த சிலர் திடீரென சிதைக்குத் தீ வைத்துள்ளனர். மேலும், சிதை எரியும் போது, கட்டைகளையும் தேங்காய்களையும் வீசியெறிந்துள்ளனர். துடிக்கத் துடிக்க உயிரோடு எரிக்கப்பட்ட குட்டுப்பாயின் மரண ஓலம் வெளியே தெரியாதிருக்க, ''சதி மாதா கி,ஜே!'' என்று கூச்சலிட்டுள்ளனர். இச்''சதி'' சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மக்கள் திரண்டபோது, அவர்களோடு வந்த கல்லூரி மாணவர் ஒருவர், தீ வைக்கப்பட்டதும் தனது காமிராவில் அந்தக் கோரத்தைப் படம் பிடித்துள்ளார். அந்தப் புகைப்படம் வட மாநில பத்திரிகைகளில் வெளிவந்ததும் நாடே அதிர்ச்சியில் உறைந்தது.

ம.பி. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் இந்த விவகாரத்தைச் சூடேற்றிக் கிளறவும், ஆளும் காங்கிரசு அரசு ''இது 'சதி'யே இல்லை; 'சதி'க்கான சடங்குகள் எதுவும் செய்யப்படவில்லை'' என்று பூசி மெழுகிவிட்டு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டது. ஆனால் குட்டுபாய் உடன்கட்டை ஏற்றப்பட்ட இடத்திற்கு அடுத்த நாளே சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து வழிபட்டு, மயானச் சாம்பலை நெற்றியில் பூசிக் கொண்டுள்ளனர். அந்த இடத்தில் சதிமாதா கோயில் கட்டவும் முற்பட்டுள்ளனர். அதன் பின்னரே, குட்டுபாயின் மகன்கள் உள்ளிட்டு 15 பேரை போலீசு கைது செய்துள்ளது. இப்போது இக்கிராமத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, போலீசு குவிக்கப்பட்டுள்ளது.

1987-இல் இராஜஸ்தானில் ரூப்கன்வர் என்ற இளம்பெண் அவளது கணவரோடு சேர்த்து ராஜபுத்திர சாதிவெறியர்களால் உடன்கட்டை ஏற்றப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டு நாடே வெட்கித் தலைகுனிந்தது. அதன்பிறகு 1991 நவம்பரில் உ.பி.யில் சரண்ஷா என்ற 55 வயதான பெண்மணி உடன்கட்டை ஏற்றப்பட்டார். இன்று ம.பி.யில் குட்டுபாய் சதியில் உயிரோடு எரிக்கப்பட்டுள்ளார்.

விதவை என்பவள் உயிரோடு நடமாடும் பிணம் என்கிறது பார்ப்பன இந்துமதம். அதன் காட்டுமிராண்டித்தனமான பழம் பெருமைகளை நிலைநாட்டக் கிளம்பியுள்ள இந்து வெறியர்களும் அவர்களுடன் அனுசரித்துச் செல்லும் பாசிசகாங்கிரசும் அதிகாரத்தில் உள்ளவரை சதிகள் தொடரவே செய்யும். ரூப்கன்வர்கள் தொடர்கதையாகும்.

**சதி – கொழுந்து விட்டெரியும் நிலப்பிரபுத்துவ காட்டுமிராண்டித்தனம்**
**(உள்படம்) உடன்கட்டை ஏற்றப்பட்ட குட்டுபாய்.**





படிப்பகம்

# ஊழலின் மறுபெயர் பா.ஜ.க.

"பதினாறு வயதினிலே" திரைப் படத்தில் ஒரு காட்சியில் கதாநாயகன் இப்படி புலம் புவான்: "யாரு என்ன கோபால கிருஷ்ணன்னு பேரச் சொல்லி கூப்பிடுறா? எல்லோரும் சப்பாணி, சப்பாணின்னுதான் கூப்பிடு றானுக"

இப்படி புலம்ப வேண்டிய இக்கட்டில் மாட்டிக் கொண்டு விட்டது, பா.ஜ.க. பாரதீய ஜனதாக் கட்சி என அழைக்கப்படுவதற்கு மாறாக, இப்பொழுது அக்கட்சி **பாரதீய பெட்ரோல் பம்ப் கட்சி** என்றுதான் நக்கலாக அழைக்கப்படுகிறது. பெட்ரோலியத் துறை அமைச்சராக இருக்கும் பா.ஜ.க.வைச் சேர்ந்த ராம் நாயக்கை, "ஜெய் சீரிராம் நாயக்" என்று எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்திலேயே கிண்டலடிக்கின்றன. பெட்ரோல் - மண்ணெண்ணெய் - சமையல் எரிவாயு விற்பனை உரிமம் வழங்குவதில் நடந்துள்ள அதிகார முறைகேடுகள் இந்தளவிற்கு பா.ஜ.க.வின் யோக்கியதையைச் சந்தி சிரிக்க வைத்து விட்டன.

சனவரி 2000-க்குப் பின் ஒதுக்கப்பட்ட 3,850 உரிமங்களில் முக்கால்வாசி உரிமங்கள், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப., ஆகிய இந்து- மதவெறி அமைப்புகளின் தலைவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும், வேண்டப்பட்டவர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்குச் சொன்னால், சனவரி 2000-க்குப் பின் உரிமம் பெற்றுள்ள உ.பி. மாநிலம் லக்னோவைச் சேர்ந்த அர்ச்சனா மிஸ்ரா, பிரதமர் வாஜ்பாயிக்கு மருமகள் முறை வேண்டும்; மற்றொரு உரிமதாரரான சிறீனிவாஸ், ஆர்.எஸ்.எஸ்.-இன் பத்திரிகை தொடர்பாளர் எம்.ஜி. வைத்தியாவின் சொந்த மகன்.

இந்த அதிகார முறைகேடை ரூபாயின் மதிப்பில் சொன்னால், கிட்டதட்ட 2,500 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாகக் கொள்ளலாம். இந்த ஊழல் பணம் முழுவதும் கட்சியின் கஜானாவிற்குப் போனதாகக் கூறப்படுகிறது.

நெல்லுக்குப் பாயும் நீர் புல்லுக்கும் பொசிவது போல், இந்து மத வெறியர்களின் கூட்டணிக் கட்சியான பா.ம.க.வின் முக்கிய வன்னிய பிரமுகர்களும் இந்த அதிகார முறைகேட்டினால் பலன் அடைந்திருக்கின்றனர். பெட்ரோலியத் துறையில் அமைச்சராக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தியும் இணை அமைச்சராக இருந்த பா.ம.க.வின் பொன்னுசாமியும் தில்லியில் உட்கார்ந்து கொண்டு பார்த்த வேலை இதுதான்.

"பெட்ரோல் - மண்ணெண்ணெய் - சமையல் எரிவாயு உரிமங்களை ஒதுக்கும் அதிகாரம் பெட்ரோலியத் துறை அமைச்சகத்திடம் கிடையாது. உரிமங்களுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, தேர்வு செய்து, உரிமங்களை ஒதுக்கும் அதிகாரம் உரிமத் தேர்வு வாரியங்களிடம் (Dealership Selection Boards) இருக்கிறது. இந்த 59 வாரியங்களும் சுதந்திரமாகச் செயல்படக் கூடியவை; ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகள் இந்த வாரியங்களில தலைவர்களாக இருக்கிறார்கள். எனவே, உரிமங்களை ஒதுக்குவதில் அதிகார முறைகேடுகள் நடக்க வாய்ப்பேயில்லை" என பெட்ரோலியத் துறை அமைச்சர் ராம் நாயக், சனவரி 2000-க்குப் பின் ஒதுக்கப்பட்ட உரிமங்களை ரத்து செய்து உத்தரவிடப்பட்ட பின்னும் கூட அடித்துப் பேசி வருகிறார்.

ராம் நாயக் அடித்துப் பேசுவது போல, உரிமங்களை ஒதுக்கும் அதிகாரம் உரிமத் தேர்வு வாரியத்திடம் தான் இருக்கிறது. ஆனால், பா.ஜ.க. தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு மட்டுமே உரிமங்கள் ஒதுக்கப்படுவதற்கு ஏற்றாற் போல, உரிமத் தேர்வு வாரியத்தில் பல மாற்றங்களையும் புதிய விதிகளையும் கொண்டு வந்தது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு உரிமத் தேர்வு வாரியங்களுக்கு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகளைத் தலைவராக நியமிக்கும் உரிமையை நவம்பர் 2000-இல் தானே எடுத்துக் கொண்டது. அதற்கு முன்பாகத் தலைவரைத் தேர்வு செய்வதற்குத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வந்தன. இப்படி அரசினால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரை இடை நீக்கம் செய்யும் விதியும் புதிதாகப் புகுத்தப்பட்டது.

அரசினால் தேர்ந்தெடுக்கப்படும் வாரியத்தின் தலைவருக்கு, வாரியம் ஒதுக்கீடு செய்த உரிமத்தை ரத்து செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு தேர்வு வாரியத்திலும் தலைவர் தவிர மற்ற இரு உறுப்பினர்கள், ஒரு விண்ணப்பத்திற்கு அதிக



பட்சமாக நூறு மதிப்பெண்கள்தான் கொடுக்க முடியும். ஆனால், தலைவருக்கு ஒரு விண்ணப்பத்திற்கு இருநூறு மதிப்பெண்கள் வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்த மாற்றங்களைப் பயன்படுத்திக் கொண்டு, இந்து மதவெறியர்கள் உரிமங்களை கைப்பற்றிக் கொள்வதில் புகுந்து விளையாடி விட்டனர்.

நரசிம்ம ராவ் ஆட்சியின் பொழுது பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த சதீஷ் சர்மா, தனது துறைக்கு இருந்த தன் விருப்ப ஒதுக்கீடு அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உரிமங்களைத் தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு மனம் போன போக்கில் வாரி வழங்கினார். காங்கிரசு ஆட்சியில் நடந்த இந்த அதிகார முறைகேடுகளை விசாரித்த உச்சநீதி மன்றம், தன் விருப்ப ஒதுக்கீட்டின்படி வழங்கப்பட்ட உரிமங்களை ரத்து செய்ததோடு, பெட்ரோலியத் துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அந்த சிறப்பு அதிகாரத்தையும் பறித்தது.

உச்சநீதி மன்றத் தீர்ப்பால் பெட்ரோலிய பொருள் விற்பனை உரிமம் வழங்குவதில் இனி அதிகார முறைகேடுகள் எதுவும் நடைபெறாது என நம்பிக் கொண்டிருந்தவர்களின் தலையில் மிளகாய் அரைத்துவிட்டது, பா.ஜ.க. ஊசியின் காதிலேயே ஒட்டகத்தை நுழைத்துவிடும் 'திறமை' கொண்ட அரசியல்வாதிகளுக்கும், அதிகார வர்க்கத்துக்கும், சட்டத்தில் ஓட்டையைக் கண்டுபிடிக்கவா முடியாது? எத்துணைதான் கடுமையான சட்டங்களையும், கண்காணிப்புகளையும் கொண்டு வந்தாலும், இந்த நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியின் கீழ் ஊழலையும், அதிகார முறைகேடுகளையும் ஒழித்துவிட முடியாது என்பதற்கு, இந்து மதவெறியர்களின் இந்த ஊழல் இன்னுமொரு உதாரணம்.

சதீஷ் சர்மா வழக்கில் தீர்ப்பு வழங்கிய உச்சநீதி மன்ற நீதிபதி குல்திப் சிங் இந்த அதிகார முறைகேடுகளை தேச விரோதம் எனச் சாடியிருக்கிறார். இந்த தேச விரோதச் செயலுக்கு 'தேச'பக்த திலகம் வாஜ்பாயி கொடுத்த தண்டனை, உரிமம் ரத்து! ஆனால், உரிமம் பெற்ற கட்சிக்காரர்களோ தூக்கு தண்டனையே கொடுத்து விட்டதைப் போல துடித்துப் போய்விட்டார்கள். இந்த உரிம ரத்துக்கு எதிராகப் பல்வேறு மாநில உயர்நீதி மன்றங்களில் வழக்கு தொடுத்து, தடையுத்தரவு வாங்கி விட்டார்கள். வாஜ்பாயி தன் பங்குக்கு இந்த விவகாரத்தில் 'நீதி' வழங்க உச்சநீதி மன்றத்தை நாடியிருக்கிறார். கூட்டிக் கழித்துப் பார்த்தால், பாம்பும் சாகவில்லை; தடியும் நோகவில்லை.

இந்த அதிகார முறைகேடுகள் எதிர்க்கட்சிகளுக்கும் அரசல் புரசலாகத் தெரிந்தேதான் நடந்து வந்திருக்கிறது. பெட்ரோலியத் துறைக்கான நாடாளுமன்றக் கமிட்டி, இந்த அதிகார முறைகேடுகளை மோப்பம் பிடித்து, நாடாளுமன்றத்திற்கு அறிக்கையொன்றைக் கொடுத்தது. அதனைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்ட எதிர்க் கட்சிகள், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு இந்த அதிகார முறைகேடுகளை ஆதாரத்தோடு அம்பலப்படுத்திய பிறகுதான், நாடாளுமன்றத்தை முடக்கின.

''ராம் நாயக் பதவி விலக வேண்டும்; மைய புலனாய்வுத் துறை உதவியோடு உச்சநீதி மன்ற நீதிபதி இந்த அதிகார முறைகேடுகளை விசாரிக்க வேண்டும்'' என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் வழக்கமான பூச்சாண்டி தவிர வேறில்லை. ஆனால், ஹவாலா ஊழல் புகழ் அத்வானியும், ''தவறான கட்சியில் இருக்கும் சரியான நபர்'' வாஜ்பாயியும் ஒப்புக்காகக் கூட விசாரணை நடத்த முடியாது எனக் கூறி எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டனர். அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ ''கடந்த பல ஆண்டுகளாக காங்கிரசு அனுபவித்து வந்ததை, இப்பொழுது நாங்கள் அனுபவிக்கிறோம்'' எனக் கூறி, தங்களின் ஊழல் செய்யும் உரிமையை நிலைநாட்டினார்கள்.

கட்சிக்காரர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமங்களை ரத்து செய்து வாஜ்பாயி போட்ட உத்தரவு கட்சிக்குள் பலத்த எதிர்ப்பை உருவாக்கிய பொழுது, அருண் ஷோரி வாஜ்பாயியின் உத்தரவை வரவேற்று ஆதரித்தார். பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் துறையின் அமைச்சர் அருண் ஷோரியின் இந்த நாணயத்தின் பின் இருப்பது நாட்டு நலன் இல்லை; மாறாக, தரகு முதலாளிகளின் நலன்!

''பெட்ரோலியத் துறை இன்னமும் பொதுத்துறை நிறுவனமாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட ஊழலும், அதிகார முறை கேடும் நடக்கிறது. அதைத் தனியார்மயமாக்கி விட்டால் இந்தப் பிரச்சினையே இருக்காது'' என்ற தனது வாதத்திற்கு வலு சேர்ப்பதற்காகவே அருண் ஷோரி உரிமங்கள் ரத்து செய்யப்படுவதை ஆதரிக்கிறார்.

இலாபம் தரும் பெட்ரோலியத் துறையை கட்சிக்காரன் சூறையாடினால் அது ஊழல்; தரகு முதலாளிகள் சூறையாடத் திறந்து விட்டால் அது வியாபாரம் என்பதுதான் அருண் ஷோரி கும்பலின் நியாயம்.

''தேசிய ஜனநாயகக் கூட்டணி'' என்ற பெயரில், இந்து மதவெறி பாசிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்த மூன்றே ஆண்டுகளுக்குள் தான் அடுக்கடுக்காக எத்தனை ஊழல்கள் - அதிகார முறைகேடுகள்?

✸ தொலைபேசித் துறையில் நுழைந்துள்ள பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகளின் நலனுக்காக இந்து மதவெறிக் கும்பல், 99-ஆம் ஆண்டு புதிய தொலை தொடர்புக் கொள்கையை அறிவித்தது. இதற்காக 300 கோடி ரூபாய் கை மாறியிருப்பதாகவும், இக்கொள்கையால் அரசுக்கு 50,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்றும் வாஜ்பாயி மீது குற்றம் சுமத்தப்பட்டது.

✸ காங்கிரசுக்கு அர்சத் மேத்தா என்றால் இந்து மதவெறிக் கும்பலுக்கு கேதான் பரீக். இந்தப் பங்குச் சந்தை சூதாடி தலைமையில் நடந்த பங்குச் சந்தை மோசடியால், கல்கத்தா பங்குச் சந்தையை இழுத்து மூடும் அபாயம் ஏற்பட்டதோடு, பங்குச் சந்தையில் 1,15,889 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதனால் பல இலட்சக் கணக்கான நடுத்தர வர்க்க முதலீட்டாளர்கள் போண்டியாகிப் போனதோடு, பலர் தற்கொலை செய்து கொண்டனர்.

✸ காங்கிரசு ஆட்சி வங்கிப் பணத்தை அர்சத் மேத்தாவிற்குத் தூக்கிக் கொடுத்தது என்றால், இந்து மதவெறிக் கும்பல் யூனிட் டிரஸ்டு ஆஃப் இந்தியா என்ற பொதுத் துறை நிதி நிறுவனத்தின் பணத்தை கேதான் பரீக்கிற்குத் தூக்கிக் கொடுத்தது. இதனால், யூனிட் டிரஸ்டு ஆஃப் இந்தியாவிற்கு 15,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு, அந்த நிதி நிறுவனம் திவாலாகிவிடும் ஆபாயத்தில் சிக்கியது.

✸ ராஜீவ் காந்திக்கு போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் என்றால், வாஜ்பாயிக்கு தெகல்கா பேரம். இந்து மதவெறிக் கும்பல் பணத்திற்காக சொந்த நாட்டு இராணுவத்திற்குக் கூடக் குழி பறிக்கும் என்பதை தெகல்கா பேரம் அம்பலப்படுத்தியது.

✸ கார்கில் போர் நடந்தபொழுது ஆயுதத் தளவாடங்கள் வாங்கியதிலும், கார்கில் போரில் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களுக்காக சவப்பெட்டி வாங்கியதிலும் 1,046 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடந்திருப்பதை இந்திய அரசின் தணிக்கை அதிகாரியே அம்பலப்படுத்தினார்.

அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஊழலிலும், அதிகார முறைகேடுகளிலும் ஊறித் திளைப்பதில் இந்து மதவெறிக் கும்பல் அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பனைப் போல நடந்து வருகிறது.

ஒருபுறம் ஊழல் அதிகார முறைகேடுகள்; இன்னொருபுறம் இந்து மதவெறிப் படுகொலைகள். இப்படிப்பட்ட கொள்ளைக்கார - கொலைகார கும்பல், மக்கள் முன் தன்னை, மாறுபட்ட கட்சியாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. இந்தக் கும்பலுக்கு ஓட்டுப் போடக் கூடாது; மாறாக துடப்பத்தால் போட்டுப் பாடம் புகட்ட வேண்டும்.

● செல்வம்

## ஜார்கந்து:

# இந்து மதவெறியர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி

ஜார்கந்து மாநிலம் கடந்த நவம்பர் 2000-இல் உருவானதிலிருந்து ஜார்கந்து மக்களின் எந்தவொரு அடிப்படைப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. மாறாக, கடந்த இரு மாதங்களாக அம்மாநிலத்தில் வன்முறைத் தீ கொழுந்துவிட்டு எரிகிறது.

ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசின் பழங்குடியின முதல்வர் பாபுலால் மராண்டி அறிவித்துள்ள ''மண்ணின் மைந்தர்'' கொள்கையை ஆதரித்தும் எதிர்த்தும் பழங்குடியினர் - பழங்குடியினரல்லாதவர்களுக்கிடையே வன்முறையும் மோதலும் கலவரமும் பற்றிப் படர்கிறது. ராஞ்சி, தன்பாத், பொகாரோ, ஜாம்ஷெட்பூர் முதலான பெருநகரங்களில் அடுத்தடுத்து கடையடைப்புகளும் வன்முறை - தீ வைப்பு சம்பவங்களும் நடந்துள்ளன. ஜார்கந்து உபேக்ஷிட் யுவ மன்ச் (JUYM) என்ற இளைஞர் அமைப்பு மண்ணின் மைந்தர் கொள்கையை எதிர்த்து தீக்குளிப்பு - கடையடைப்புப் போராட்டங்களை நடத்தியுள்ளது. மண்ணின் மைந்தர் கொள்கையை ஆதரிக்கும் ஆதிவாசிகள் - மூலவாசிகளைக் கொண்ட ஜார்கந்து மூலவாசி ஜன அதிகார்மன்ச் (JMJM) என்ற அமைப்பு எதிர் போராட்டங்களை நடத்தி வருவதோடு, அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு தாக்கியுள்ளது. மண்ணின் மைந்தர் கொள்கையை எதிர்க்கும் அமைச்சர்களைப் பதவி விலகி மாநிலத்தை விட்டே ஓடுமாறு கோரி சாலை மறியல்களை நடத்தியுள்ளது.

கடந்த ஜூலை 24 அன்று ஆதிவாசிகள் நடத்திய கடையடைப்புப் போராட்டத்துக்கு அரசு ஆதரவு தெரிவித்ததையொட்டி பெரு நகரங்கள் எங்கும் கலவரம் தலைவிரித்தாடியது. தலைநகர் ராஞ்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் இரு பிரிவாக நின்று மோதிக் கொண்டனர். வெட்டு, குத்து, தீ வைப்பு, குண்டு வீச்சு என்று வெறியாட்டம் பரவியது. கடைகளும் வாகனங்களும் வீடுகளும் பொதுச் சொத்துகளும் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. ஜார்கந்து தனி மாநிலம் கோரி ஒன்றுபட்டுப் போராடிய பழங்குடியினரும் தாழ்த்தப்பட்டோரும் பிற்பட்டோரும் இப்போது தமக்குள் பிளவுபட்டு உக்கிரமாக மோதிக் கொள்கிறார்கள். இந்த மோதல் - வன்முறைக் கொலைவெறியாட்டங்களுக்குக் காரணம் என்ன?

1932-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு, அதற்குப் பின் ஜார்கந்தில் குடியேறியவர்கள் அனைவரும் அந்நியர்கள் எனத் தீர்மானித்து குறிப்பிட்ட கால வரையறைக்குள் அவர்களை வெளியேற்ற வேண்டும்; இத்தகையோருக்கு இடைப்பட்ட காலத்தில் அரசு வேலைவாய்ப்பு தரக் கூடாது; வாக்குரிமையும் நிலம் மற்றும் சொத்துக்களை வாங்கும் உரிமையும் தரக் கூடாது என்கிறார் முதல்வர் மராண்டி.

பீகாரிலிருந்து ஜார்கந்த் மாநிலம் உருவாவதற்கு முன்னரே பீகார் சட்டமன்றத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், அதை இப்போது ஜார்கந்த் மாநிலத்தில் செயல்படுத்துவதில் தவறேதுமில்லை என்கிறார் அவர். இருப்பினும், ஆளும் கூட்டணியிலேயே எதிர்ப்புகள் வலுக்கத் தொடங்கியதும் 1982-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு இக்கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமென்கிறார். ஆனால் ஜார்கந்தின் பூர்வ குடிகள் யார் என்பதற்கு முதல்வரோ அரசோ எந்த வரையறுப்பையும் முன்வைக்கவில்லை. இதற்கான விசாரணை - ஆய்வுக் குழுவை நிறுவவேண்டும் என்ற எதிர்த்தரப்பினரின் கோரிக்கையையும் அரசு ஏற்க வில்லை.

ஜார்கந்து மாநிலம் உருவானதிலிருந்தே பல்வேறு பழங்குடியின, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்பட்டோர் அமைப்புகள் தமக்குக் கூடுதல் இட ஒதுக்கீடு சலுகையைக் கோரி வருகின்றன. அரசு வேலை, பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கான ஒதுக்கீடுகள் கோரி தமக்குள் மோதிக் கொண்டு நிற்கின்றன. எந்தெந்த சாதியினருக்கு எவ்வளவு ஒதுக்கீடு என்பதிலிருந்து, சட்டமன்ற - நாடாளுமன்ற தொகுதிகளை அதிகப்படுத்தி அதில் கூடுதல் ஒதுக்கீடு கோருவது வரை கோரிக்கைகளை வைத்துப் போராடுகின்றன.

ஜார்கந்து மக்கள் ஒரு தேசிய இனமாக உருவாகும் போக்கு இன்னும் நிறைவுறாத நிலையிலேயே உள்ளது. மேலும், ஜார்கந்து மக்கள் மே.வங்கம், ஒரிசா, பீகார், ம.பி., சட்டீஸ்கார் என்று பல மாநிலங்களில் சிதறியுள்ள நிலையில், தனிமாநிலம் அவர்களது கனவை நனவாக்கவில்லை. அதேசமயம் கடந்த 4,5 தலைமுறைகளாக பீகார், ஒரிசா, மே.வங்கம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து குடியேறி, இன்றைய ஜார்கந்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் உழைத்துப் பல்கிப் பெருகியுள்ள தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட கூலித் தொழிலாளர்கள் இன்று மண்ணின் மைந்தர் கொள்கைப்படி 'அந்நியர்கள்' என முத்திரை குத்தப்படுகிறார்கள். இக்கொள்கைப்படி இவர்கள் வெளியேற்றப்பட்டால், இவர்கள் சொந்தமண் ஏதுமின்றி அகதிகளாவார்கள்.

அதேசமயம், நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட ஜார்கந்து பழங்குடியினருக்கு மண்ணின் மைந்தர் கொள்கைப்படி உரிய இடஒதுக்கீடு சலுகையும் அரசு வேலை வாய்ப்பும் தர வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது என்றாலும், அரசுத்துறையில் வேலை வாய்ப்பே இல்லை என்ற நிலைமைதான் உள்ளது. மறுபுறம், தனியார்மய - தாராளமயக் கொள்கையால் வேலை

**பிரித்தாளும் சூழ்ச்சியில் பற்றி எரியும் கலவரத் தீ: மண்ணின் மைந்தர் கொள்கையை ஆதரித்து தலைநகர் ராஞ்சியில் ஜார்கந்து பழங்குடியினர் நடத்திய கடையடைப்புப் போராட்டம்.**



www.padippakam.com

யின்மை தீவிரமாகிவிட்டது. அதிகம் படித்திரா்த சாதாரணக் கூலிகளைப் பெருமளவில் கொண்ட பெரிய ஆலைகள் படிப்படியாக மூடப்பட்டு, தாராளமயத்தால் 'மலிவான' அந்நியப் பொருட்கள் சந்தையில் குவிகின்றன. மே.வங்கம் - ஜார்கந்து பிராந்தியத்திலுள்ள அரசின் கிழக்கத்திய நிலக்கரி வயல் நிறுவனம் நட்டக் கணக்கு காட்டப்பட்டு, தனியார்மயமாக்கும் முயற்சியில் மூடுவிழா காணும் நிலையில் உள்ளது. அதை முறைப்படுத்தி இயக்க முன்வராத அரசு, சீனா மற்றும் இந்தோனேஷியாவிலிருந்து 'மலிவான' நிலக்கரியை இறக்குமதி செய்து வருகிறது.

ஜார்கந்து மக்களின் வறுமைக்கும் வேலையின்மைக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது, தனியார்மய - தாராளமயக் கொள்கைகள்தான். ஆனால், இந்த உண்மையை மூடிமறைத்துவிட்டு பழங்குடியல்லாதோரை வெளியேற்றி விட்டால் ஜார்கந்து பூர்வகுடியினரின் வாழ்வில் வசந்தம் வீசத் தொடங்கிவிடும் என்றும், பழங்குடியினருக்குக் கூடுதல் சலுகை கொடுத்தால் இதர பிரிவினருக்கு வேலை வாய்ப்பு பறிபோய் விடும் என்றும் உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி குறுகிய சாதிய, இனவெறியூட்டி மோதவிட்டு ஓட்டுப் பொறுக்கிகள் குளிர் காய்கின்றனர். இதோடு பதவி சுகத்துக்காக, வலுவான சாதிய ஓட்டு வங்கியை உருவாக்கி வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் இத்தகைய வெறியாட்டங்கள் திட்டமிட்டே கட்டவிழ்த்து விடப்படுகின்றன. உழைக்கும் மக்களோ தமக்கு சாதிய, இன, பிராந்திய அடிப்படையில் தனிமாநிலம், தனி மாவட்டம் அமைந்தால் கூடுதலாக அரசு வேலைவாய்ப்பும், சலுகைகளும் கிடைக்கும் என்று நம்பி ஏமாறுகிறார்கள்.

இதேபோல, கிழக்கத்திய இரயில்வே துறையைப் பிரிப்பதையொட்டி பீகார், மே.வங்க மாநிலங்களில் போராட்டங்கள் நடக்கின்றன. நிர்வாக வசதிக்காக மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு தலைமையகம் மாறிவிட்டால் வேலை வாய்ப்பும், சேவைகளும் பறிபோய் விடும் என்றும், இல்லையில்லை; மண்டலங்களாகப் பிரித்தால் வேலை வாய்ப்பும் சேவைகளும் பெருகும் என்றும் நியாயவாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. ஏற்கனவே இரயில்வே துறையில் வேலைக்கு ஆளெடுப்பதை நிறுத்தியும், சரக்கு வண்டிகளின் பெட்டக சேவையை பகுதியளவில் தனியார் முதலாளிகளுக்கு குத்தகைக்கும் கொடுத்து வரும் அரசு, வேலை வாய்ப்பைப் பெருக்கி சேவையை அதிகரிக்கும் என்று நம்புவது கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான். ஆனாலும் ஓட்டுப் பொறுக்கிகள் இந்த உண்மைகளை மூடிமறைத்து விட்டு குறுகிய பிராந்திய வெறியை கிளறிவிட்டு ஆதாயமடைந்து வருகின்றனர். இரயில்வேயை மண்டலங்களைப் பிரித்தாலும், பிரிக்காவிட்டாலும் இறுதியில் ஆதாயமடையப் போவது நிலக்கரி மா·பியாக்களும், தனியார் ஒப்பந்தக்காரர்களும், ஊழல் அதிகாரிகளும் ஓட்டுப் பொறுக்கிகளும்தான்!

அன்று அசாமிலே அசாமியர்கள், போடோக்கள், இந்துக்கள், முசுலீம்கள் என உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி, வெறியூட்டி மோதவிட்டு இரத்தம் குடித்தவர்கள்தான், இன்று அதே உத்தியுடன் ஜார்கந்தில் கலவரத் தீயைப் பற்ற வைத்துள்ளார்கள். ஜார்கந்தின் பழங்குடியின மக்களோ தொடர்ந்து ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப்பட்டு வறுமையில் உழல்கிறார்கள். அவர்களின் மூதாதையர்கள் காலனிய பிரிட்டிஷ் அரசால் ஒடுக்கப்பட்டார்கள். அவர்களது மண்ணும் வாழ்வும் பறிக்கப்பட்டன. 1947-க்குப் பின்னர் அவர்களது கனிவளமிக்க நிலங்கள் அரசாலும் தனியார் பெருமுதலாளிகளாலும் பறிக்கப்பட்டு அவர்கள் கூலித் தொழிலாளிகளாக - கொத்தடிமைகளாக்கப்பட்டார்கள். இன்று தனியார்மய - தாராளமயக் கொள்கையால் சுரங்கங்களில் வேலையையும் இழந்து அவலத்தில் உழல்கிறார்கள்.

காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்ட ஜார்கந்து பழங்குடியின மக்கள், தனியார்மய - தாராளமயக் கொள்கையை முறியடிக்காமல் தமது நியாயமான உரிமைகளை மீட்டெடுக்க முடியாது; தனி மாநிலம் உருவாக்கப்படுவதன் மூலம் உழைக்கும் மக்கள் கூடுதல் வேலை வாய்ப்பு - அடிப்படை வசதிகளை அடைந்திடவும் முடியாது; ஒடுக்கப்பட்ட மக்கள் தமது நியாயமான இட ஒதுக்கீட்டு சலுகையை அனுபவிக்கவும் முடியாது. இந்த உண்மைகளை உணர்த்திவிட்டு கலவரச் சாம்பலில் ஜார்கந்து புதைந்து கொண்டிருக்கிறது.

● குமார்

# போதையிலிருந்து மீண்ட ''பாபா'' ரசிகர்கள்

கடந்த ஆகஸ்டு 15 அன்று ரஜினியின் ''பாபா'' திரைப்படம் வெளியான நேரத்தில் ''விவசாயிகளுக்கு எலிக்கறி! நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டி! இளைஞர்களுக்கு மூளைக் காய்ச்சல்! பாபா-வுக்குப் பலகோடி!'' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு, நிஜ ரஜினியின் யோக்கியதையை அம்பலப்படுத்தி ஈரோடு மாவட்ட புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்தனர்.

பாபா படம் பார்க்கத் தங்கள் வீட்டிலுள்ள அண்டா - குண்டாவை அடகு வைத்த இளைஞர்களின் செயலைக் கண்டு வேதனை அடைந்திருந்த நெசவாளர்களும் பகுதிவாழ் பொது மக்களும் பு.மா.இ.மு.வின் பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்ததோடு, துண்டுப் பிரசுரத்தை வாங்கிச் சென்று தமது பகுதிகளிலும் விநியோகித்தனர். மக்களின் பேராதரவுடன் நடந்த இப்பிரச்சாரத்தைக் கண்டு பீதியடைந்த பாபா-வின் அடியாளாகச் செயல்படும் ''காலைக் கதிர்'' நாளேடு, 'ரஜினி ரசிகர்கள் கொந்தளிப்பு' என்று செய்தி வெளியிட்டு ரசிகர்களை உசுப்பி விட்டது. அதைத் தொடர்ந்து ரஜினி ரசிகர் மன்றத்தால் தூண்டிவிடப்பட்ட சிவகிரி போலீசு நிலைய உதவி ஆய்வாளர், பு.மா.இ.மு. சிவகிரி கிளை நிர்வாகிகளை அழைத்து இதுபோல் பிரச்சாரம் வெளியிட்டுப் பிரச்சாரம் செய்தால் சட்டம் - ஒழுங்கு கெட்டு விடும் எனப் பீதி கிளப்பினார்.

இதன் பின்னர் ''படையப்பா நண்பர்கள் குழு'' என்ற ரஜினி ரசிகர்கள் குழுவாக சிவகிரி பு.மா.இ.மு. அலுவலகத்துக்கு வந்து, ''எங்கள் தலைவரைப் பற்றி ஏன் இப்படி பிரசுரம் வெளியிட்டீர்கள்?'' என்று விளக்கம் கேட்டனர். நிழல் ரஜினியையும் நிஜ ரஜினியையும் வேறுபடுத்திக் காட்டி, தனது ரசிகனிடமே கள்ள மார்க்கெட் டிக்கெட் மூலம் கோடிகோடியாய்ச் சுருட்டியதையும், நெசவாளர்கள் - விவசாயிகளின் அவலத்துக்கு எதிராகவோ - காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுக்கும் கர்நாடக அரசுக்கு எதிராகவோ அவர் வாய் திறக்காததையும், சினிமா போதையில் இளைஞர்களைச் சீரழித்து வருவதையும் அவர்களிடம் தோழர்கள் பொறுமையாக விளக்கிப் புரிய வைத்தனர்.

இவற்றைக் கேட்டுத் தெளிவடைந்த ரஜினி ரசிகர்கள், ''எங்கள் தலைவர், நமது நாடு இப்படி இருக்கிறது என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே!'' என்று ஆதங்கப்பட்டனர். ''நீங்கள் சொல்வது சரியானதுதான். எங்களால் முடிந்த உதவிகளை உங்கள் அமைப்புக்குச் செய்கிறோம்'' என்று ஆதரவு தெரிவித்தனர்.

பாபா ரஜினியின் கொள்ளையையும் மோசடிகளையும் சொல்லும் விதத்தில் சொன்ன துண்டுப் பிரசுரமும், தோழர்களின் விளக்கமும் சினிமா போதையில் மயங்கிக் கிடந்த ரஜினி ரசிகர்களைச் சிந்திக்க வைத்துள்ளது. சினிமா பொறுக்கி கலாச்சாரத்தைக் கைவிட்டு இளைஞர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டால், அலிபாபாக்களின் ஆட்டம் அடங்கிவிடும் என்பதில் ஐயமே இல்லை.

தகவல்: பு.மா.இ.மு., சிவகிரி, ஈரோடு.



படிப்பகம்

# முதலாளிகள் அடித்த வங்கிக் கொள்ளை

பொதுச் சொத்தை, மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கும் ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளின் அயோக்கியத்தனம், தண்ணீருக்குள் குசு விடுவதைப் போல அம்பலமாகி விடுகிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகார வர்க்கம் கூடப் புறங்கையை நக்கும் யோக்கிய சிகாமணிகள்தான் என்பதை மக்கள் அறிந்துதான் வைத்திருக்கிறார்கள். ஆனாலும், இந்தியாவில் அதிகாரமிக்க ஒரு கும்பல் அடிக்கும் கொள்ளை, நடத்தும் மோசடிகள் பெரும்பாலும் அம்பலமாவதில்லை. மேலும், அந்தக் கும்பலைச் சேர்ந்த அனைவரும் உழைப்பால் உயர்ந்த உத்தமர்களாக மக்களிடம் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். அந்த உத்தம வேடதாரிகள் வேறு யாருமல்ல. அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும் ஆட்டுவிக்கும் வல்லமை கொண்ட முதலாளிகள்தான்!

இவர்கள் அடித்த கொள்ளையில் ஒரு சிறு துளியை, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு அம்பலப்படுத்தியிருக்கிறது. ''இந்தியாவைச் சேர்ந்த பெரு முதலாளிகள், தொழில் தொடங்குகிறோம் என்ற பெயரில் வங்கிகளிடமிருந்து கடனை வாங்கி விட்டு, அக்கடனைத் திருப்பிச் செலுத்தாமல் ஏப்பம் விட்ட தொகை (31.3.2001 அன்று) 63,883 கோடி ரூபாய். இந்த முதலாளிகள் பொதுத்துறை நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்று, ஏப்பம் விட்ட கடனையும் சேர்த்தால், இந்த வாராக் கடன் (31.3.2001 அன்று) 80,246 கோடி ரூபாயாகும்'' என அந்தச் சங்கம் அம்பலப்படுத்தியுள்ளது. மேலும், ஒரு கோடி ரூபாய் தொடங்கி 1000 கோடி ரூபாய் வரை கடனை வாங்கி விட்டு ஏப்பம் விட்ட நிறுவனங்களின் பட்டியலையும் அச்சங்கம் துணிந்து வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் தொழில் தந்தை டாடா நிறுவனம் தொடங்கி பரலோகம் போய்விட்ட புது முதலாளி அர்சத் மேத்தா வரை அந்தப் பட்டியலில் உண்டு.

''வங்கியில் கடன் வாங்கித் தொடங்கிய தொழில் நட்டமடைந்து விட்டது; அதனால், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போய்விட்டது'' எனப் பல தொழில் அதிபர்கள் யோக்கியவானைப் போல ஜால்ஜாப்பு சொல்கிறார்கள். ஆனால், இப்படி 'நட்டமடைந்துவிட்ட' தொழில் அதிபர்களில் ஒருவரும் கையில் திருவோடு எடுத்துக் கொண்டு தெருவுக்கு வந்துவிடவில்லை. மாறாக, ஆடம்பர பங்களாக்களில் வசிக்கிறார்கள்; சொகுசு கார்களில் பவனி வருகிறார்கள்; வேறு பல தொழில்களை கொழுத்த இலாபத்துடன் நடத்தி வருகிறார்கள்.

✱ ஜெயா - சசி கும்பல் இந்தியன் வங்கிக்குக் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி ஆறு கோடி ரூபாய். ஊழல் வழக்குகளில் இருந்து விடுபட பல கோடி ரூபாய்களை வக்கீல் பீஸாகவும், நீதிபதிகளுக்கு இலஞ்சமாகவும் தாராளமாக அள்ளி விடும் ஜெயா கும்பலுக்கு, இந்த ஆறு கோடி ரூபாய் கடனை வட்டியோடு திருப்பிச் செலுத்த முடியாதா?

✱ எம்.ஜி.ஆர் - ஜெயாவின் பினாமியாக இருந்த சாராய உடையார் குடும்பம் பல்வேறு அரசு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கி 220 கோடி ரூபாய். சாராய உடையார் குடும்பம் வளைத்துப் போட்டுக் கொண்ட பின்னி ஆலை 'நட்டமடைந்திருக்கலாம்'. ஆனால், அவர்கள் குடும்பத்துக்குச் சொந்தமான 'இராமச் சந்திரா மருத்துவக் கல்லூரி' பல்கலைக்கழகமுமாகி, கல்வி வியாபாரத்தில் கொடிகட்டிப் பறக்கிறது. அந்த வருமானத்தில் இருந்து வாங்கிய கடனை நாணயமாகத் திருப்பிச் செலுத்த முடியாதா?

80,000 கோடி வங்கிப் பணத்தை ஏப்பம் விட்ட முதலாளிகளின் பெயரை வெளியிடக் கோரிப் போராடும் வங்கி ஊழியர்.




✱ தமிழ் மக்களுக்கு 'தேச' பக்தி ஊட்டும் படங்களை எடுத்துத் தள்ளும் இயக்குநர் மணிரத்தினத்தின் அண்ணன் ஜீ.வி.யின் கடன் பாக்கி 18 கோடி ரூபாய். நடிகர் விஜய்க்கு சம்பளமாக மட்டும் 2-3 கோடி ரூபாய் கொடுத்து, தமிழன் என்ற படத்தை சமீபத்தில் தயாரித்த ஜீ.வி., பதிமூன்று ஆண்டுகளாக இந்தக் கடனை அடைக்காமல் பாச்சா காட்டுகிறார்.

✱ ''சக்தி குரூப்ஸ்'' என்ற பெயரின் கீழ் பல்வேறு நிறுவனங்களை நடத்தி வரும் ஆன்மீகவாதி பொள்ளாச்சி மகாலிங்கம், வங்கிகளுக்குப் போட்ட நாமத்தின் மதிப்பு 20 கோடி ரூபாய். இந்தக் கடன் திரும்பி வராது எனக் கடன் கொடுத்த வங்கிகள் கட்டம் கட்டி கைகழுவி விட்டன. இந்த 'வாராக் கடனை' அம்பலப்படுத்திப் போராட்டம் நடத்துகிறது சி.பி.ஐ. கட்சியின் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கங்கள் கூட்டமைப்பு. ஆனால், கட்சித் தலைமையோ, கடனை வாங்கி ஏப்பம் விட்ட பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு 'தமிழ்ச் செம்மல்' பட்டம் கொடுத்துப் பாராட்டு விழா நடத்துகிறது.

இப்படி கடன் வாங்கி ஏப்பம் விட்ட தொழில் அதிபர்களின் யோக்கியதையை அம்பலப்படுத்திக் கொண்டே போகலாம். ''வங்கியில் இருந்து கடன் வாங்கி ஒரு தொழிலை ஆரம்பித்து, அதில் கிடைக்கும் இலாபத்தை, அந்தத் தொழிலை விடக் கொழுத்த இலாபம் தரும் பங்குச் சந்தை சூதாட்டம் போன்ற புதுத் தொழில்களில் போட்டு விட்டு, பழைய தொழிலைக் கைகழுவி விடுவது'' என்பதுதான் முதலாளிகளின் தொழில் 'திறமை'. இதனால்தான் பல தொழில்கள் நட்டமடைகின்றன.

இதைவிடப் பெரிய மோசடியிலும் முதலாளிகள் ஈடுபடுவதுண்டு. ''வெறும் லெட்டர் பேடை மட்டும் காட்டி, வங்கிகளில் இருந்து தொழில் கடன் வாங்கி, அதை மூலதனமாகக் கொண்டு, வீட்டு மனை, பங்குச்சந்தை போன்ற சூதாட்டத் தொழில்களை நடத்துவதுதான்'' அந்த மோசடி.

முதலாளிகள் நடத்தும் இம்மோ

www.padippakam.com

சடிக்கு பொதுத்துறை வங்கிகளின் அதிகார வர்க்கமும் உறுதுணையாய் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொன்னால், தமிழகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இந்தியன் வங்கியைத் திவாலாக்கிய பெருமை அந்த வங்கியின் தலைவராக இருந்த, மூப்பனாரின் ஆதரவு பெற்ற கோபாலகிருஷ்ணனைச் சாரும். கோபாலகிருஷ்ணனின் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு ஆமை வேகத்தில் நடந்து வந்தாலும், இந்தியன் வங்கிப் பணத்தை அவர் சூறையாடியதற்குப் பக்கபலமாக இருந்த கோபாலகிருஷ்ணனின் நண்பர் மூப்பனார் உத்தமராகப் பரலோகம் போய் விட்டார்.

31.3.1997 வங்கிகள் - நிதி நிறுவனங்களின் வாராக் கடன் 47,300 கோடி ரூபாயாக இருந்தது. இது, அடுத்த நான்கே வருடங்களில் 31.3.2001-இல் 80,246 கோடியாக, கிட்டதட்ட இரு மடங்காக உயர்ந்து விட்டது. இந்த மொத்த வாராக் கடனில், 191 தொழிலதிபர்கள் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி மட்டும் 23,700 கோடி ரூபாய்; அதாவது, மொத்த வாராக் கடனில், நான்கில் ஒரு பங்குக்கும் மேலான கடனைக் கைபளவேயான ஒரு சிறு கும்பல் ஏப்பம் விட்டுள்ளது.

தொழில் அதிபர்கள் தொழில் தொடங்குவதற்காகக் கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தை, அரசாங்கம் தனியாக அச்சடித்துக் கொடுக்கவில்லை. மாறாக, பொது மக்கள் அரசாங்கத்தை நம்பி வங்கிகளில் போட்ட பணம்தான், இப்படிச் சூறையாடப் பட்டுள்ளது. சுயதொழில் தொடங்க முயலும் படித்த இளைஞர்களுக்கு 25,000 ரூபாய் கடன் கொடுக்க, அவர்களை நாயாய் அலைய விடும் வங்கிகள், தரகுப் பெருமுதலாளிகளுக்கோ கஜானாவையே தூக்கிக் கொடுத்துள்ளன.



'தேச' பக்தி படங்களை எடுத்துத் தள்ளும் மணிரத்தினத்தின் அண்ணன் ஜீ. வெங்கடேஸ்வரனின் கடன் பாக்கி 18 கோடி ரூபாய்.

வங்கிகளில் கடன் பெற முடியாமல், கந்து வட்டிக்குக் கடன் வாங்கி, விவசாயம் செய்து போண்டியாகி, வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க வழியில்லாமல், மானத்திற்குப் பயந்து, ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்; சிறுநீரகத்தை விற்றுக் கடனை அடைத்துவிட்டு, அரைகுறை உடம்போடு வாழ்க்கையை ஓட்டுகிறார்கள் விசைத்தறி தொழிலாளர்கள். ஆனால், 50 கோடி, 100 கோடி, 500 கோடி என வங்கிகளிடமிருந்து கடனை வாங்கி ஏப்பம் விட்ட மோசடிப் பேர்வழிகளோ கொஞ்சம் கூடக் கலக்கமோ, உறுத்தலோ இன்றி, தொழில் அதிபர் என்ற சமூக அந்தஸ்தோடு ஊருக்குள் பவனி வருகிறார்கள்.

ஆத்திர அவசரத்துக்கு வங்கிகளில் நகைக்கடன் வாங்குபவர்கள், நகையை மீட்க முடியாமல் போகும் பொழுது, அவர்களின் பெயர்களைப் பத்திரிகைகளில் கட்டம் கட்டிப் போடும் வங்கி நிர்வாகம், இந்தத் தொழில் அதிபர்களின் பெயர்களை வெளியே விடவே மறுத்து வருகிறது. ''வங்கிகளின் தொழில் கடன் சேவை இரகசியக் காப்பு விதிகளின் கீழ் வருவதால், கடன் வாங்கியவர்களின் பெயர்களை அம்பலப்படுத்தக் கூடாது'' எனக் கூறி, இம்மோசடிப் பேர்வழிகளைச் சட்டப்பூர்வமாகப் பாதுகாக்க முயலுகிறது.

கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கிய விவசாயிகள் கடனைக் கட்ட முடியாமல் போகும்பொழுது, அவர்களின் சொத்து அரசால் ஜப்தி செய்யப்படுகிறது. ஆனால், முதலாளிகளுக்குக் கொடுத்த கடனைத் திருப்பி வாங்க, வங்கி நிர்வாகம் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துகிறது. வங்கிப் பணத்தைத் திருடிய தொழில் அதிபர்களுடன் பேச்சு வார்த்தை

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்

# வங்கிப் பணத்தை ஏப்பம் விட்ட தரகு முதலாளிகளின் சொத்தைப் பறிப்போம்!

## — பு.ஜ.தொ.மு. அறைகூவல்

தரகு முதலாளிகள் தொழில் கடன் என்ற பெயரில் பல ஆயிரம் கோடி ரூபாய் வங்கிப் பணத்தை மோசடி செய்த விவரம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியானவுடனேயே, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி அம்மோசடியை அம்பலப்படுத்தி, ''முதலாளிகள் அடித்த வங்கிக் கொள்ளை'' என்னும் வெளியீட்டைக் கொண்டு வந்தது. அம்மோசடியை மக்கள் மத்தியில் அம்பலப் படுத்தி பிரச்சார இயக்கமும் எடுத்தது. அரசு வங்கிகளைத் தனியார் மயமாக்கி, திருடன் கையிலேயே பெட்டிச் சாவியைக் கொடுக்க அரசு முயன்று வரும் இவ்வேளையில், ''ஒரு இலட்சம் கோடி கடன் பாக்கி - முதலாளிகள் அடித்த வங்கிக் கொள்ளை'' எனும் தலைப்பில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சென்னையில் 17.8.2002 அன்று அரங்கக் கூட்டமொன்றை நடத்தியது.

இந்த அரங்குக் கூட்டத்திற்கு பு.ஜ.தொ.மு.வின் மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையேற்க, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலர் தோழர் சி.ஹெச். வெங்கிடாசலம் மற்றும் பு.ஜ.தொ.மு.வின் மாநிலப் பொருளாளர் விஜயகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

''தனியார் முதலாளிகளின் கைகளில் இருந்த வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னும், அவற்றில் தொழில் கடன் என்ற பெயரில் முதலாளிகள் அடித்து வரும் கொள்ளையையும், அதற்குச் சாதகமாக இருந்து வரும் சட்டங்களையும் அம்பலப்படுத்தி''ப் பேசிய சி.ஹெச். வெங்கிடாசலம், அதற்கு எதிராக வங்கி ஊழியர் சங்கம் நாட்டுப்பற்றோடு போராடி வருவதை விவரித்துக் கூறினார். ''முதலாளிகள் கொடுக்க வேண்டிய 80,000 கோடி ரூபாய் வாராக் கடனும், தனியார்மயமும்தான் அரசு வங்கிகளை அச்சுறுத்தும் அபாயம்'' எனக் குறிப்பிட்ட அவர், இதற்கு எதிராகப் போராடும் வங்கி ஊழியர்கள், தங்களின் போராட்டத்திற்குப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டி வருவதாகவும்; அதற்கு பு.ஜ.தொ.மு. போன்ற தொழிலாளர் அமைப்புகள் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தோழர் விஜயகுமார், ''வங்கிப் பணத்தைக் கொள்ளையடித்த முதலாளிகளைச் சட்டத்தின் மூலம் மட்டுமே தண்டித்து விட முடியாது'' என விளக்கிக் கூறிய பின், ''வங்கி ஊழியர்கள் பொது மக்களுடன் இணைந்து, மோசடி செய்த முதலாளிகளின் சொத்துக்களைப் பறிக்கும் அதிகாரம் கொண்ட மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைக்க முன் வரவேண்டும்'' எனக் குறிப்பிட்டார். 'தேசியம்', 'தேசியமயம்' என்பதெல்லாம் தரகு முதலாளிகளின் நலனை மூடிமறைக்கும் முகமூடிகள்தான் என்பதைப் புரிய வைப்பதாக அமைந்தது இக்கருத்தரங்கு!

- பு.ஜ.தொ.மு., சென்னை.

www.padippakam.com

# வறட்சி தேசியமயம் தண்ணீர் தனியார்மயம்

லெட்சுமி. ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள இப்பேரு எனும் கிராமத்தைச் சேர்ந்த எட்டு வயது சிறுமி. அவளது தந்தை ஒரு ஏழை விவசாயி. தனது துண்டு நிலத்தில் கடலை பயிரிட்டு விலை வீழ்ச்சியால் நொடித்துப் போனவர். கந்து வட்டிக்காரர்களின் அச்சுறுத்தலால், வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் தனது துண்டு நிலத்தையும் இழந்து இன்று கூலி விவசாயியாகப் பரிதவிக்கிறார். ஆனாலும் அவருக்குத் தொடர்ந்து கூலி வேலையும் கிடைப்பதில்லை. ஆந்திர மாநிலத்தின் பெரும் பகுதிகளில் வறட்சி நிலவுவதால் விவசாய வேலைகள் முடங்கி விட்டன. லெட்சுமியால் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. வீட்டில் ஒருவேளை கஞ்சி குடிக்கவே திண்டாடும்போது, லெட்சுமியால் எப்படிப் பள்ளிக்குச் செல்ல முடியும்? லெட்சுமி மட்டுமல்ல; இப்பேரு கிராமத்தைச் சேர்ந்த சிறுவர் - சிறுமிகள் எவரும் பள்ளிப் படிப்பைத் தொடர முடியவில்லை.

இவர்கள் கடந்த இரு மாதங்களாக தமது குடும்பத்தின் வறுமையைப் போக்க வேலைக்குச் செல்கிறார்கள். என்ன வேலை தெரியுமா? பயிர்களைத் தாக்கும் சிவப்பு முடிகொண்ட வெட்டுக்கிளிகளைப் பிடிக்கும் வேலை!

இப்பேரு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள் 'இரக்க' குணம் கொண்டவர்கள். விவசாயிகளுக்கு கூலிவேலை கொடுக்க முடியாத நிலையில், அவர்களின் குழந்தைகளுக்கு வேலை கொடுக்கிறார்கள். அது தான் வெட்டுக்கிளி பிடிக்கும் வேலை. ஒரு கிலோ வெட்டுக்கிளி பிடித்து வந்தால் 10 ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். ஏறத்தாழ 500 முதல் 1000 வெட்டுக்கிளிகள் மற்றும் பூச்சிகள் - வண்டுகளைப் பிடித்தால்தான் ஒரு கிலோதேறும். காலை முதல் மாலை வரை நிலப்பிரபுக்களின் வயல்களில் சுற்றியலைந்து இச்சிறுவர்கள் ரூ. 5 லிருந்து ரூ. 10 வரை சம்பாதிக்கிறார்கள். இந்த அற்பக் கூலியைக் கொண்டு தான் பல விவசாயக் குடும்பங்கள் உயிர் வாழ்கின்றன.

லெட்சுமி அதிகாலையிலேயே கையிலே பையுடன் புறப்பட்டு விடுகிறாள். அவளது பையிலே பாட புத்தகங்கள் இல்லை. ''இது வெட்டுக்கிளி பிடித்துப் போடுவதற்கான பை'' என்று வெகுளித்தனமாகச் சிரிக்கிறாள் அந்த சிறுமி. பூச்சி மருந்து அடிக்கும் செலவை விட, பூச்சி பிடிக்கும் சிறுவர்களுக்குக் கொடுக்கும் கூலி குறைவுதான் என்று எச்சில் ஒழுக சிரிக்கிறார்கள், 'இரக்க' குணம் கொண்ட நிலப்பிரபுக்கள்.

ஆந்திராவில் இப்படி அவலம் தொடரும் போது, ஒரிசாவின் காசியாபூர் மாவட்டத்தில் பட்டினிச் சாவுகள் தொடர்கின்றன. கடந்த ஆண்டில் மாங்கொட்டை கஞ்சி குடித்து நஞ்சாகி மாண்டு போன ஒரிசா மக்களுக்கு இவ்வாண்டிலும் விடிவு கிடைக்கவில்லை. இராஜஸ்தான் மாநிலத்தில் பட்டினியால் பரிதவிக்கும் மக்களுக்கு குடிக்கக்கூட தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாமல் கால்நடைகள் மாண்டு போவது அம்மாநிலத்தில் அதிகரித்து வருகிறது. கோதுமைக் களஞ்சியமான பஞ்சாபில் நிலங்கள் பாளம்பாளமாக வெடித்துக் கிடக்கின்றன. வறட்சி - பட்டினியால் பரிதவிக்கும் ம.பி., மகாராஷ்டிரா, கர்நாடகா மக்கள் பிழைக்க வழிதேடி நகரங்களுக்கு ஓடுகிறார்கள். தமிழகத்தின் 12 மாவட்டங்களில் வறட்சியும் பஞ்சமும் தலைவிரித்தாடுகிறது.

நாடெங்கும் கொடிய வறட்சி; பஞ்சம் - பட்டினிச் சாவுகள். வெறிச்சோடி கிடக்கும் கிராமங்கள்; கருகி நிற்கும் பயிர்கள்; வெடித்து கிடக்கும் விளைநிலங்கள். காற்றிலே சிக்கிய சருகுபோல பிழைப்புக்காக அலையும் கூலி விவசாயிகள்; கடன் சுமை தாளாமல் கந்துவட்டிக்காரர்களிடம் தமது துண்டு நிலத்தைப் பறிகொடுத்து விட்டுப் பரிதவிக்கும் சிறு விவசாயிகள் - என நாடு முழுவதும் அவலங்கள்.

இது இயற்கையின் சீற்றம்; பருவ மழை பொய்த்துப் போனதால் ஏற்பட்ட கோரமான விளைவு என்று ஆட்சியாளர்கள் காரணம் கூறுகிறார்கள். நாட்டின் 593 மாவட்டங்களில் 321-இல் போதுமான மழை பெய்யவில்லை. கடந்த நூறு ஆண்டுகளில் கண்டிராத அளவுக்கு மழை பற்றாக்குறையின் அளவு 48 சதவீதமாக அதிகரித்து விட்டது; பூமியின் வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதுதான் இதற்குக் காரணம் என்கிறார்கள் வானியல் ஆய்வாளர்கள். வறட்சியால் ஏற்பட்டுள்ள உற்பத்தி வீழ்ச்சியும் பொருளாதார சிக்கல்களும் தற்காலிகமானவை; மழை பெய்து விவசாய வேலைகள் தொடங்கி விட்டால் நிலைமை சீராகிவிடும்; 6 கோடியே 30 இலட்சம் டன் உணவு தானியங்கள் கிடங்குகளில் உள்ளன; எனவே இந்த தற்காலிக நெருக்கடியை எளிதில் சமாளித்துவிட முடியும் என்கிறார்கள் பொருளாதார குரப்புலிகள்.

இவையெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். மழை பெய்தால் நிலைமை சீராகிவிடும் என்கிறார்களே, அது உண்மையா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் வறட்சி

**வறட்சியின் கோரமுகம்: பண்ணையார்களின் நிலத்தில் வெட்டுக்கிளி, பூச்சிகளைப் பிடித்து எடைபோட்டுக் காட்டி கூலி பெறும் சிறுவர்கள்.**



www.padippakam.com

என்பது இந்த பருவத்தில்தான் ஏற்பட்டுள்ளது. அதற்கு முந்தைய பருவங்களில் இந்த நிலைமை இல்லை. ஆனாலும் கடந்த பத்தாண்டுகளாக கூலி ஏழை விவசாயிகள் அரைப்பட்டினியும் முழு ஏழ்மையுமான நிலையில்தான் இருந்தனர்.

கடந்த ஆண்டில் இராஜஸ்தான் மாநிலத்தில் பழங்குடி மக்கள் தமது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் வீதம் சுழற்சி முறையில் அன்றாடம் பட்டினி இருப்பது என்ற முறையை மேற்கொண்டனர். எஞ்சியவர்கள் ஒருவேளை உணவு உட்கொண்டு வேலைக்குச் சென்றனர். ஒரிசாவில் மாங்கொட்டைக் கஞ்சி குடித்து பட்டினியைப் போக்க முயன்ற விவசாயிகள், தமது அன்புக் குழந்தைகளை கொத்தடிமைகளாக விற்கும் அவலம் தொடர்ந்தது. இதர மாநிலங்களில் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கடனாளியாகி பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொள்ளும் கொடுமை பற்றிப் படர்ந்தது. கடந்த பத்தாண்டுகளில் கிராமப்புற வேலை வாய்ப்பு வளர்ச்சி வீதம் 0.67% ஆகச் சுருங்கி, 1947-க்குப் பிறகு உள்ள வேலை வாய்ப்பு வளர்ச்சியில் மிகக் குறைந்த புள்ளி விபரம் இதுதான் என்ற 'சாதனை'யையும் ஏற்படுத்தியது.

பின்தங்கிய - வறண்ட பகுதிகள் மட்டுமல்ல; வளமான பகுதிகளிலேயே விவசாயிகள் கடந்த பத்தாண்டுகளில் நொடித்துப் போனார்கள். தாராளமய - உலகமயக் கொள்கையால் தேயிலை, கரும்பு, தென்னை, கடலை, பருத்தி விவசாயிகள் விலை வீழ்ச்சியால் போண்டியானார்கள். கடன்சுமை தாளாமல் தற்கொலைக்குத் தள்ளப்பட்டார்கள். நிலத்தை கந்துவட்டிக்காரர்களிடம் பறிகொடுத்து பலர் ஓட்டாண்டியானார்கள். அதற்கு வறட்சி காரணமல்ல. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் நாட்டு விரோத - மக்கள் விரோதக் கொள்கைகளே காரணம்.



**வெடித்துக் கிடக்கும் விளைநிலங்கள்; காற்றிலே சிக்கிய சருகு போல் பிழைப்புக்காக அலையும் கூலி விவசாயிகள்.**

இந்த நாசகாரக் கொள்கைதான் விவசாயத்தை நாசமாக்கி விவசாயிகளைச் சூறையாடி வருகிறது. வறட்சியானது இதை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளது. எனவே இன்றைய வறட்சியும் பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் அவலங்களும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கொடிய விளைவுகள் அல்ல; மழை வந்தால் தீர்ந்து விடும் பிரச்சினையுமல்ல. இது தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் நாட்டை அடிமைப்படுத்தி வரும் கேடுகெட்ட கொள்கையால் ஏற்பட்டுள்ள பேரழிவு.

இப்பேரழிவிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்க எந்தவொரு ஓட்டுக் கட்சியும் தயாராக இல்லை. ஏகாதிபத்தியங்களின் கட்டளைப்படி நாட்டை அடிமைப்படுத்தி வரும் ஆட்சியாளர்களுக்கு விவசாயிகள் மீது அக்கறையுமில்லை. காவிரியில் நீரில்லையா? நெல் சாகுபடி செய்வதைக் கைவிட்டு மாற்றுப் பயிர் செய்யலாம்; காய்கறிப் பண்ணை, இறால் பண்ணை அமைக்கலாம் என்கிறார்கள். வறட்சியான பகுதிகளில் மலர் பண்ணை வைக்கலாம்; ''மெடிசின் காய்'' எனும் நச்சு மருந்து செடியைப் பயிரிட்டுக் கொடுத்து ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்; தரிசு நிலங்களை பன்னாட்டுக் கம்பெனிகளிடம் குத்தகைக்கு விடலாம் என்று ஆலோசனை கூறுகிறார்கள். அதற்கான திட்டங்களையும் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அப்படியானால் விவசாயமும் விவசாயிகளும் என்னாவது? ''இதனால் விவசாயிகளுக்கு தற்காலிகமாகப் பாதிப்புகள் ஏற்படலாம்; ஆனால் நுகர்வோர் அதிகரிப்பார்கள்; வர்த்தகமும் அந்நியச் செலாவணியும் பெருகும்'' என்று விவசாயத்தையே நாசமாக்கும் கொள்கையை நியாயப்படுத்துகிறார், உணவு அமைச்சர் அஜித்சிங்.

ஆனால் விவசாயம் என்பது வெறும் உணவுப் பொருள் உற்பத்தி அல்ல; அது நுகர்வோருக்கான சந்தையுமல்ல. அது கோடிக்கணக்கான விவசாயிகளின் வாழ்வுக்கான ஆதாரம். விவசாயிகளின் வாழ்வைப் பறித்து விட்டு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து விட்டோம் என்றால், அதைவிட வக்கிரம் எதுவும் இருக்க முடியாது.

நாட்டுப்புற ஏழை மக்களுக்கு இன்று வேலையும் வருவாயும் அவசியமாக உள்ளது. ஆனால் பெரும்பாலான மாநில அரசுகள், ''வேலைக்கு உணவு'' திட்டத்தைக் கூட செயல்படுத்தவில்லை. அரசின் உணவு தானியக் கிடங்குகளிலோ 6 கோடியே 30 இலட்சம் டன் உணவு தானியங்களில் நிரம்பி வழிகிறது. இருப்பினும் ஏழைகளால் உணவு தானியங்களை வாங்க முடிவதில்லை. கடந்த ஆண்டில் ஆந்திரா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் பட்டினியால் பரிதவித்த விவசாயிகள், அரசின் உணவு தானியக் கிடங்குகளை முற்றுகையிட்டு வேலைக்கு உணவு திட்டத்தைச் செயல்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனாலும் அரசாங்கம் இத்திட்டத்தைச் செயல்படுத்த முன் வரவில்லை.

மாறாக, உணவுக் கிடங்குகளை முற்றுகையிட்ட விவசாயிகள் 'தீவிரவாதிகள்' என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையிடப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான போலீசார் துப்பாக்கிகளுடன் கிடங்குகளில் காவலுக்கு நிறுத்தப்பட்டார்கள். கிடங்குகளில் நிரம்பி வழிந்து உணவு தானியங்கள் கெட்டழுகிப் போனாலும், அதை பட்டினியால் பரிதவிக்கும் விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடாது என்பதுதான் ஆட்சியாளர்களின் புதிய பொருளாதாரக் கொள்கை!

தனியார்மயம் - தாராளமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு விவசாயிகளை மரணக் குழியில் தள்ளிவரும் ஆட்சியாளர்கள், இப்போது நிலப்பிரபுக்கள், தரகுப் பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்காக அடுத்த தாக்குதலை ஏவத் தொடங்கி விட்டார்கள். அதுதான் தண்ணீரைத் தனியார்மயமாக்கும் கொள்கை!

உலக வங்கியும், ஐ.எம்.எஃப்பும் பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் இக் கொள்கையைப் பலநாடுகளிலும் திணித்து வருகிறது. கடந்த 2000-வது ஆண்டில், ஐ.எம்.எஃப்.பிடம் கடன் பெற்ற 12 நாடுகளில், தண்ணீரைத் தனியார்மயமாக்க வேண்டும் அல்லது வாங்கிய கடன் அனைத்தையும் வட்டியுடன் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் செலுத்த வேண்டும் என்று ஐ.எம்.எஃப் நிபந்தனை விதித்தது. ஐ.எம்.எஃப்.பின் இரும்புப் பிடியில் சிக்கிக் கொண்ட பல நாடுகள் படிப்படியாகத் தண்ணீரைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் தாரை வார்த்துவிட்டு தடுமாறி நிற்கின்றன.

அந்த வழியில் இப்போது இந்திய ஆட்சியாளர்களும் ஆறுகள், ஏரிகள், குளங்களைத் தனியாரின் பொறுப்பில் ஒப்படைக்கக் கிளம்பி விட்டனர். ''ஹைடெக்'' முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் ஆந்திர மாநில அரசு இதை ஏற்கனவே


படிப்பகம்

www.padippakam.com

செயல்படுத்தத் தொடங்கிவிட்டது. ஆந்திராவில் அண்மைக் காலத்தில் தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. தண்ணீர் பயன்படுத்துவோர் என்றால், அது ஆறுகள், குளங்கள், ஏரிகளிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்துவோராவர். இவர்கள் சங்கங்களாக அமைக்கப்பட்டு, அச்சங்கங்களுக்கு முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகிகளின் பொறுப்பில் நீர்ப்பாசனம் ஒப்படைக்கப்படும். இவர்கள் ஆறுகள் - ஏரிகளில் மராமத்துப் பணிகளைச் செய்து அரசுக்கு வரி செலுத்த வேண்டும். அதற்கான செலவுகளை ஈடு செய்ய சங்க உறுப்பினர்களான விவசாயிகளிடம் கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம்.

சங்கத்தில் உறுப்பினராக இல்லாத ஒரு ஏழை விவசாயியோ, அல்லது முறையாக கட்டணம் செலுத்தாத விவசாயியோ தண்ணீரைப் பயன்படுத்த முடியாது; தனது நிலத்தில் விவசாயமும் செய்ய முடியாது. நொடித்துப் போன ஏழை விவசாயிகள், தமது நிலத்தை பெருநிலப்பிரபுக்களிடம் அடிமாட்டு விலைக்கு விற்று விட்டு விவசாயத்தை விட்டே வெளியேற வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்படும். ஆனாலும் இவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, எல்லா விவசாயிகளுக்கும் சம உரிமை உள்ள சங்கம் தான் இது என்ற மாய்மாலங்களுடன் தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் வேகமாகப் பரவி வருகின்றன. கூட்டுறவு சங்கங்களைப் போல இவற்றை முறைப்படுத்தி இயக்க ஆந்திர மாநில அரசு சட்ட விதிமுறைகளை வகுத்துள்ளதோடு, செப்டம்பர் மாதத்தில் மொத்தமுள்ள 10,292 சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தத் தீர்மானித்துள்ளது. தேர்தலுக்குப் பின்னர், இச்சங்க நிர்வாகிகளின் பொறுப்பில் நீர்ப்பாசனம் மற்றும் மராமத்துப் பணிகள் ஒப்படைக்கப்படுவதோடு, இவர்களது பகுதியில் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் - ஏரிகள் நிறுவிக் கொள்ளவும் அங்கீகாரமும் வழங்கப்படும்.

ஒரிசாவில் இக்கொள்கை வேறொரு வழியில் செயல்படுத்தப்படுகிறது. ஆறுகள் - ஏரிகள், குளங்களை உள்ளூர் தண்ணீர் பஞ்சாயத்தாரிடம் அரசு குத்தகைக்கு விடும் நடைமுறை தொடங்கியுள்ளது. கிராமப் பஞ்சாயத்துப் போல, தண்ணீர் பஞ்சாயத்தார் கூடி விவசாயிகளிடம் கப்பம் வசூலிப்பது, அபராதம் விதிப்பது, தகராறுகளைத் தீர்த்து வைப்பது ஆகியவற்றைச் செய்வர். இதில் வரும் தாவாக்களை அரசாங்கத்திடமோ, நீதிமன்றத்திடமோ பாதிக்கப்பட்ட விவசாயி முறையிடக் கூட முடியாது.

சுருக்கமாகச் சொன்னால், தரகுப் பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்துக்கும் பகற் கொள்ளைக்குமான ஏற்பாடுதான் இது. தமது வாழ்வுக்கான ஒரே ஆதாரமாகிய விவசாயத்தை விட்டு விவசாயிகளை வெளியேற்றி விட்டு, நில உச்சவரம்புச் சட்டத்தை அடியோடு ரத்து செய்து விட்டு நவீன ''ஜமீன்தாரி'' முறையை மீண்டும் நிலைநாட்டும் சதித்திட்டமே இது. ஆந்திரா, ஒரிசா மட்டுமல்ல; இன்னும் சில மாநிலங்களும் தண்ணீரைத் தனியாரிடம் தாரை வார்க்க முயற்சித்து வருகின்றன. மைய அரசும் நாடாளுமன்றத்தில் இதற்கான சட்ட மசோதாவைக் கொண்டு வர ஆலோசித்து வருகிறது. தரகுப் பெரு முதலாளிகள் சங்கமோ இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களை - அதாவது தனியார்மயமாக்கலை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை விடுக்கின்றனர். ''உலகம் பிறந்தது எனக்காக! ஓடும் நதிகளும் எனக்காக!'' என்று உல்லாசமாகப் பாடுகின்றனர்.

விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கும் இக்கொள்கையைப் பற்றி எந்தவொரு முதலாளித்துவப் பத்திரிகையும் விவசாயிகளுக்கு உணர்த்தவில்லை. மாறாக, ''லக்மே இந்தியா'' எனும் அழகு சாதனப் பொருள் நிறுவனம் ஒரு வாரத்துக்கு நடத்திய அழகிப் போட்டி - பேஷன் ஷோ பற்றியும், சினிமா நடிகர் - நடிகைகள் பற்றியும் பளபளப்பான தாள்களில் பரபரப்பாக படம் பிடித்து எழுதி தமது 'சமூக உணர்வை' வெளிச்சம் போட்டுக் காட்டின. ''தரகுப் பெருமுதலாளிகளுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் உடனடியாக என்னை சந்திக்கலாம்; அவர்களுக்கு உதவி செய்ய எப்போதும் நான் காத்திருக்கிறேன்'' என்கிறார் நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங். ஆனால் இந்நாட்டின் கோடானுகோடி விவசாயிகள் நிதியமைச்சரைச் சந்திக்கவோ, நெருங்கவோ முடியாது. எந்த அமைச்சரும் விவசாயிகளை ஏறெடுத்துப் பார்ப்பதுமில்லை.

விவசாயிகளின் வாழ்வைப் பிரதிபலிக்கும் பத்திரிகையும் இல்லை. அவர்களின் நலன் காக்கும் அமைச்சருமில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, விவசாயிகளின் கரங்களில் அரசியல் அதிகாரமும் இல்லை. இதனால்தான் அரசியலதிகாரத்தைத் தமது கையில் வைத்துள்ள ஆட்சியாளர்களான நிலப்பிரபுக்களும் தரகுப் பெருமுதலாளிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் தமது கொள்ளையையும் ஆதிக்கத்தையும் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

முடியாது; இனியும் அனுமதிக்க முடியாது; விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கி வரும் இக்கொள்ளையர்களின் ஆட்சி நீடிக்க அனுமதிக்கவும் கூடாது. இந்நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளுக்கு நிலமும் அரசியல் அதிகாரமும் வேண்டும். அதைப் புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டு போராடுவதன் மூலமே சாதிக்க முடியும்.

● இரணியன்

## அரசு கல்லூரிகள் வணிகமயமாக்கப்படுவதை எதிர்த்து பு.மா.இ.மு. ஆர்ப்பாட்டம்

தமிழகத்தில் உள்ள 67 அரசு கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதன் மூலம் கல்வியை வியாபாரமாக்கியுள்ளது தமிழக அரசு. ''அரசு மானியங்களை நிறுத்து! சேவைத் துறைகளை இழுத்து மூடு'' என்று உலக வங்கி போடும் உத்தரவுகளுக்குச் சுழன்றாடுகிறார் பாசிச ஜெயா. இதன் விளைவாக பெயரளவில் கிடைத்து வந்த கல்வி கற்கும் உரிமையும் உழைக்கும் வர்க்கத்திடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. இனி காசிருந்தால்தான் கல்வி என்ற நிலை உருவாகியுள்ளது.

பாசிச ஜெயா அரசின் இந்நடவடிக்கையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் போராடி வருகின்றனர். புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் தாங்கள் செயல்படும் பகுதிகளில் இப்போராட்டத்துக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர்.

✱ 19.08.02 அன்று திருவாரூர் திரு.வி.க. அரசு கலை கல்லூரி முன்பு பு.மா.இ.மு. கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் பாரிவேல் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் மட்டுமின்றி ஆசிரியர்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

✱ 21.08.02 அன்று தர்மபுரியில் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர். வழக்கமாய் வகுப்புகளைப் புறக்கணித்தவுடன் மாணவர்கள் வீட்டுக்கோ, திரைப்படத்துக்கோ சென்று பொழுதைக் கழிக்கத் திட்டமிடுவார்கள். இம்முறை பு.மா.இ.மு. ஏற்பாடு செய்திருந்த வாயிற் கூட்டத்தில் அனைத்து மாணவர்களும் இறுதிவரை கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

கல்வி தனியார்மயமாவதை, வணிகமயமாவதை வெறும் துறை சார்ந்த போராட்டமாகக் குறுக்கி விடாமல், பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவு மக்களுடன் இணைந்து போராடுவதன் மூலமே தடுக்க முடியுமென்பதை விளக்கும் விதமாக தோழர்களின் உரை அமைந்திருந்தது.

செய்தி: பு.மா.இ.மு., தருமபுரி, வேதாரண்யம் கிளைகள்

www.padippakam.com

17-ஆம் பக்கத் தொடர்ச்சி

நடத்துவது காரியச் சாத்தியமானது என்றால், சந்தன மரத் திருடன் வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கூட ஒரு "செட்டில்மெண்டு"க்கு வரலாம்.

கடன் வாங்கிய தொழில் அதிபர்கள் வங்கி நிர்வாகத்தாலேயே பாதுகாக்கப்படுவது ஒருபுறமிருக்க, சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டும் அவர்கள் தப்ப முயலுகிறார்கள்.

✱ 36 கோடி ரூபாய் கடன் வாங்கி, கிங் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் தி.மு.க.வைச் சேர்ந்த மைய அமைச்சர் டி.ஆர். பாலு, "கிங் கெமிக்கல்ஸ் என் குடும்ப நிறுவனமில்லை. 38,000 பங்குதாரர்களைக் கொண்டிருக்கும் ஒரு பப்ளிக் லிமிடெட் நிறுவனம். நானும் அதில் ஒருவன். அவ்வளவுதான்" என்கிறார்.

✱ 10.3 கோடி ரூபாய் கடன் வாங்கி ஏப்பம் விட்ட லெதர்மேன் ஃபேப்ரிக் என்ற நிறுவனத்தின் முக்கிய பங்குதாரரான காங்கிரசு கட்சியைச் சேர்ந்த இரா. அன்பரசு, "நான் அந்த நிறுவனத்தின் கௌரவத் தலைவர்தான்; கம்பெனி நஷ்டத்தில் மூடப்பட்ட பிறகு, அதன் கணக்கு வழக்குகளைப் பார்க்கும் சமயத்தில், லிக்விடேட்டர் (நிறுவனத்தின் சொத்து மதிப்பு மற்றும் நட்டத்தை ஆய்வு செய்ய நியமிக்கப்படும் அரசு அதிகாரி) என்னை அதிலிருந்து விடுவித்து விட்டார். வங்கியின் கடனைச் செலுத்தாதவர்கள் பட்டியலில் இருந்து எனது பெயரை நீக்கச் சொல்லி நீதிமன்றத்துக்கு ஒரு மனுவை அனுப்பியிருக்கின்றேன்" என்கிறார்.

முதலாளிகளுக்குச் சாதகமான இப்படிப்பட்ட ஓட்டைச் சட்டங்களை வைத்துக் கொண்டு, கடன் வாங்கி மோசடி செய்த தொழில் அதிபர்களிடமிருந்து பணத்தையும் வசூலிக்க முடியாது; அவர்களைத் தண்டிக்கவும் முடியாது. இன்னும் சொல்லப் போனால், இந்த முதலாளிகளின் மீது சட்டப்படியே குற்ற வழக்கு தொடர முடியாது. சிவில் வழக்குதான் தொடர முடியும்.

இதனால், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு, இத்தொழில் அதிபர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர ஏதுவாகச் சட்டத் திருத்தம் கொண்டுவரப் படவேண்டும் எனக் கோரி வருவதோடு, வாராக் கடனால் அரசு வங்கிகள் திவாலாகி விடும் அபாயத்தைப் பொது மக்களிடம் எடுத்துக் கூறும் இயக்கத்தையும் நடத்தத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் பா.ஜ.க. அரசு தொழில் அதிபர்களிடமிருந்து கடனை வசூலிக்க ஒரு தனி நிறுவனத்தை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. இந்தக் கடன் வசூலிக்கும் நிறுவனத்திற்குத் தேவையான மூலதனத்தை வங்கிகள் போட, அதன் நிர்வாகம் தனியாரின் கையில் இருக்குமாம்! இந்த ஏற்பாடு, பொது மக்களின் பணத்தைத் தனியார் அனுபவிக்க இன்னுமொரு வாய்ப்பு என்பது ஒருபுறமிருக்க, கடன் வசூலிக்கும் நிறுவனத்தின் நிர்வாகம் தனியாரின் கையில் இருப்பது, வேலிக்கு ஓணான் சாட்சி என்ற கதையாகத் தான் முடியும்.

மேலும், இந்த வாராக் கடனை வசூலிப்பதற்காகவே, 'நிதிச் சொத்துக்களைப் பங்கு பத்திரங்களாக மாற்றுதல் மற்றும் மறுசீரமைப்புச் சட்டம்' கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. "ஆட்டோ வாங்குவதற்காகக் கடன் வாங்குபவரையும், கார்ப்பரேட் (பெரிய தொழில் நிறுவன அதிபர்கள்) கடனாளியையும் இந்தச் சட்டம் சமமாகப் பார்க்கிறது" என்கிறார் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் இயக்குநர் கல்பனா. இச்சட்டத்தை ஏவிவிட்டு கடனைக் கட்டாத ஆட்டோ ஓட்டுநரைத் தண்டித்து விடலாம். ஆனால், ஜெயலலிதாக்களையும், பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றவர்களையும் தண்டித்துவிட முடியுமா என்பதுதான் கேள்வி!

"மக்கள் கூடும் பொது இடங்களில் ஜேப்படி திருடர்களின் படங்கள், 'திருடர்கள், ஜாக்கிரதை' என்று போட்டு அடையாளம் காட்டப்பட்டிருக்கும். அதுபோல, தொழில் தொடங்குகிறோம் என்ற போர்வையில் வங்கிகளில் இருந்து கடனை வாங்கிவிட்டு ஏப்பம் விட்ட மோசடித் தொழில் அதிபர்களின் படங்களைப் பொது இடங்களில் ஒட்டி அம்பலப்படுத்த வேண்டும். வங்கி ஊழியர்கள் பொது மக்களுடன் இணைந்து மக்கள் மன்றங்களைக் கட்டி, இந்த முதலாளிகளின் பங்களாக்களை முற்றுகையிட்டு, அவர்களை அவமானப்படுத்த வேண்டும். அவர்கள் கருப்பாகவும், வெள்ளையாகவும் சேர்த்து வைத்துள்ள சொத்துக்களை, வங்கி கடனுக்கு ஈடாக மக்கள் மன்றங்களின் மூலம் கைப்பற்ற வேண்டும்"

நடுத்தர வர்க்கமாக இருக்கும் வங்கி ஊழியர்களை இப்போராட்ட முறைகள் திடுக்கிட வைக்கலாம். இப்போராட்ட முறைகள் சட்ட விரோதனமானதாக இருக்கலாம். ஆனால், போராடும் வங்கி ஊழியர்களுக்கோ, வங்கிகளில் பணத்தைப் போட்டிருக்கும் மக்களுக்கோ விரோதமானதல்ல.

முதலாளிகள் சட்ட விரோதமான வழிகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, வங்கிகளில் உள்ள பொதுமக்களின் பணத்தைச் சூறையாடுவார்களாம். ஆனால், அவர்களைத் தண்டிக்க மட்டும் சட்டப்பூர்வ வழிகளில்தான் நடக்க வேண்டுமாம் என்பதில் எந்தவிதமான நியாயமும் இல்லை. அரசு வங்கிகளைத் தனியார்மயமாக்குவதன் மூலம் இத்திருடர்களின் கையிலேயே பெட்டிச் சாவியைக் கொடுக்கத் திட்டம் போடுகிறது அரசு. இந்த நிலையில், வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும் என்பதுபோல நடந்து கொண்டால்தான், இந்தப் பிரச்சினையில் நியாயம் கிடைக்கும்.

● குப்பன்

## நெடுஞ்சாலை சீரமைக்காததைக் கண்டித்து தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்

வேதாரண்யம் - திருத்துறைப் பூண்டி நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் எவரும் நிம்மதியாக ஊர் போய்ச் சேர முடியாது. உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள் இச்சாலையில் உயிரோடு போய்ச் சேருவார்களா என்பதும் சந்தேகம்தான். காரணம் இச்சாலை மக்களைக் காவு கொள்ளுமளவிற்குக் குண்டும் குழியுமாகச் சீரழிந்து உள்ளது.

குண்டும் குழியுமாகக் கிடக்கும் நெடுஞ்சாலையைச் சீரமைக்காத அரசைக் கண்டித்து விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் தொடர் முழக்க கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

21.08.02 அன்று காலை 10 முதல் மாலை 6 மணி வரை தாணிக்கோட்டகம் கடைத்தெருவில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர். கு. கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். திரளான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

கிராம மக்களுக்குச் சாலை முதலான அடிப்படை வசதிகளைக்கூடச் செய்ய மறுத்துத் திட்டமிட்டுக் கிராமப் புறங்களைப் புறக்கணிக்கின்றன மத்திய மாநில அரசுகள். அதேநேரம் தனியார் முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் காலில் விழுந்து அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கின்றன. முக்கியமான நெடுஞ்சாலைகளையே தனியாருக்கு விற்றும், பிளாக் - தண்டர் போன்ற பொழுது போக்கு இடங்களுக்காக பல கோடி ரூபாய் மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்துச் சாலையை அழகுபடுத்தியும் வருகின்றன. இந்நிலையில் போராடாமல் இருந்தால் இருக்கும் வசதிகளும் பறிக்கப்படும் என்பதை விளக்கி தோழர்கள் உரையாற்றினர்.

தகவல்:
வி.வி.மு. - பு.மா.இ.மு.,
திருத்துறைப்பூண்டி - வேதாரண்யம்.

www.padippakam.com

## உரிமையியல் சட்டத் திருத்தம்:

# பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாகச் சட்ட மறுவார்ப்பு

உரிமையியல் (சிவில்) சட்டத் திருத்த மசோதா, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எவ்விதக் கருத்துப் பரிமாற்றமுமின்றி நிறைவேற்றப்பட்டுக் கடந்த ஜூலை முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இதை உடனடியாக தமிழகத்தில் பாசிச ஜெயா அரசு செயல்படுத்தக் கிளம்பி விட்டது. மக்கள் விரோத, கொடிய இச்சட்டத் திருத்தத்தை எதிர்த்து தமிழகமெங்கும் வழக்கறிஞர்கள் போராடி வருகிறார்கள். வழக்குகளை விரைவாக முடிப்பதற்காகவே இச்சட்டத் திருத்தம் என்கிறது மைய அரசு. இல்லை; இது மக்களை நீதிமன்றங்களின் பக்கமே நெருங்க விடாமல் செய்து, ''லோக் அதாலத்'' என்னும் கட்டைப் பஞ்சாயத்து நீதிமன்ற முறையை நிலைநாட்டும் செயல் என்று வழக்கறிஞர்கள் அம்பலப்படுத்துகின்றனர்.

இதைவிட இன்னுமொரு முக்கியமான காரணத்துக்காகவும் நோக்கத்திற்காகவும் இச்சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே இருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டு, தற்போதைய அரசும், ஆளும் வர்க்கங்களும் செயல்படுத்தி வரும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்னும் புதிய பொருளாதாரக் கொள்கையை மேலும் தீவிரமாகச் செயல்படுத்துவது எளிதாக இல்லை. பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்குப் பொருத்தமாக அரசியலமைப்புச் சட்டத்தையே மறுவார்ப்பு செய்வது அவர்களுக்கு அவசியமாக உள்ளது. இதற்கான தேவைகளின் அடிப்படையில் சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்கள், கம்பெனி சட்டங்கள் மற்றும் தொழிற்சங்கச் சட்டங்களையும் கூட மாற்றியமைப்பது ஆட்சியாளர்களுக்கு அவசியமாக உள்ளது.

இந்த அடிப்படையில், சிவில் சட்டத்திருத்தம் என்பது இன்றைய நீதித்துறையின் கட்டுமானத்தையே முழுமையாக மாற்றியமைக்கும் சதிச் செயலாகும். நீதித்துறையின் நடைமுறைகள் - விதிகள் - சட்டங்கள் - செயல்பாடுகள் - தீர்ப்பு வழங்கும் முறைகள் அனைத்தையுமே தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கைக்கேற்ப மறுவார்ப்பு செய்யும் நடவடிக்கையே ஆகும்.

குறிப்பாக, இந்தியாவில் முதலீடு செய்துள்ள பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீடு துறைகளில் நுழைந்துள்ள அந்நிய நிதி நிறுவனங்களின் மீதான வழக்குகள் - தாவாக்களை நீதிமன்றத்துக்கு வெளியே கட்டைப் பஞ்சாயத்து முறையில் தீர்வு காண்பதற்கு ஏற்ற வகையில் இச்சட்டத் திருத்தமானது சாமானிய மக்களுக்குச் சட்டப்பூர்வமாக நிவாரணம் கிடைக்கக் கூட வழியில்லாமல் செய்து விட்டது. தமிழகத்தில் நீதிமன்றக் கட்டணங்களைத் தடாலடியாக உயர்த்தப்பட்டிருப்பதும் அவர்களை நீதிமன்றத்தின் பக்கமே நெருங்க விடாமல் செய்துவிடும். வழக்கறிஞர்களுக்கு இனி நீதிமன்றங்களில் வேலையில்லை என்பதாக நீதிமன்ற நடைமுறைகளும் மாற்றப்பட்டுள்ளன.

இச்சட்டத் திருத்தம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் சென்னை - பாண்டிச்சேரி கீழமை நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளரும், வழக்கறிஞர்களின் போராட்டத்தை வழி நடத்தி வருபவருமான ஈரோட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் திருமலைராஜன் அவர்களிடம் விளக்கம் கேட்டோம். அவருடனான உரையாடலின் சாரத்தை இங்கே தொகுத்தளிக்கிறோம்.

*''இந்த சட்டத் திருத்தத்தில் நிறைய பிரச்சினைகள் உள்ளன. இச்சட்டத் திருத்தம் வழக்கறிஞர்களை விட, பொதுமக்களைத்தான் அதிகமாக பாதிப்புக்குள்ளாக்கும். குறிப்பாக, சாமானிய மக்கள் இனி நீதிமன்றங்கள் பக்கமே வர முடியாது.*

*பிரிவு 26-இன் கீழ் வாதியானவர், வழக்கு தாக்கல் செய்யும் போதே அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டும் என்கின்றனர். பிரிவு 27-இன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் பிரதிவாதிக்கு சம்மன் அனுப்ப வேண்டும் என்கின்றனர். 60 நாட்களுக்குள் அவர் எல்லா ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டுமாம்!*

*நமது நாட்டில் கிராமப்புற சாமானிய மக்கள் எந்த சொத்துக்கும் முறையான ஆவணங்களை வைத்திருப்பதில்லை. 60 நாட்களுக்குள் அவர்கள் கிராம அதிகாரி, தாசில்தார் ஆகியோரிடம் சொத்து சம்பந்தமான ஆவணங்களைத் தயார் செய்து வாங்கி அவர்களால் எப்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும்? உரிய காலத்திற்குள் அவற்றைத் தாக்கல் செய்ய முடியாவிட்டால், வழக்கு தள்ளுபடி ஆகிவிடும். 60 நாட்களுக்குப் பிறகு தாமதமாக அவை கிடைத்தாலும் அதை வழக்கில் இணைத்து ஆதாரம் காட்ட முடியாது. இது ஒரு விதிமுறை; இதற்காக ஒரு தீர்ப்பு மறுக்கப்படும் என்றால் அது எப்படி நியாயமானதாகும்?*

*வழக்குகளை விரைவாக முடிப்பதற்காகவே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் காரணம்*

**வழக்கறிஞர் திருமலைராஜன்**



*கூறுகின்றனர். விரைவாக முடிப்பதற்கு வழக்கறிஞர்களாகிய நாங்கள் எதிரிகளல்ல.*

*2001-ஆம் ஆண்டு வரை மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைக்கு வந்த வழக்குகளில் பெரும்பாலானவை முடிக்கப்பட்டுள்ளன. ஒரு சில மாவட்டங்களில் தான், அதுவும் 4 வருடத்திற்குள்ளான வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன. கீழமை நீதிமன்றங்களில், விசாரணைக்கு வந்த அடுத்த மாதத்திலேயே வழக்குகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 1995-ஆம் ஆண்டுக்கு முந்தைய வழக்குகள் 1% நிலுவையில் இருந்தாலே அதிசயம். நீதிமன்றத்துக்கு வரும் வழக்குகளில் பெரும்பாலானவை அரசு அதிகாரிகள், ஆணைகள் மீதான வழக்குகளாகவே உள்ளன. தேங்கிக் கிடக்கும் வழக்குகளில் எதிர்க்கட்சியாக இருப்பது அரசாங்கம்தான். அரசாங்கம் ஒழுங்காக வழக்கை நடத்தினாலே பெரும்பாலான வழக்குகள் பைசல் ஆகிவிடும்.*

*இது மட்டுமின்றி கீழமை நீதிமன்றங்களில் சரியான எண்ணிக்கையில் நீதிபதிகளை நீதித்துறை நியமிப்பது இல்லை. நியமிக்கப்பட்ட நீதிபதிகளின் தேர்வும்*


படிப்பகம்

www.padippakam.com

சரியில்லை. விரைவு நீதிமன்றங்களின் நீதிபதிகளில் 75% பேர் இலஞ்ச - ஊழல் பேர்வழிகள். உயர்நீதி மன்றத்தில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையும் குறைவு. அவர்களும் மாலை 3.30 மணிக்கு மேல் நீதிமன்றத்தில் இருப்பது இல்லை. உயர் நீதி மன்ற நீதிபதிகளில் பெரும்பாலோர் அரசியல் கட்சிகளுக்கு வேண்டப்பட்டவர்களாகவே நியமிக்கப்படுகின்றனர். உயர்நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும் இலட்சக்கணக்கான வழக்குகள் தேங்கி நிற்கின்றன. 12 வருடங்களாகியும் பல வழக்குகள் கீழ் கோர்ட்டுகளிலிருந்து மேல்கோர்ட்டிற்கு எடுத்து நடத்தப்படாமலேயே உள்ளது. இதற்கு வழக்கறிஞர்கள் காரணமல்ல. இந்நிலையில் கீழமை நீதிமன்றங்களுக்கு மட்டும் வழக்குகளை விரைவாக முடிக்கச் சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளனர். உயர் நீதி மன்றத்திலும் உச்சநீதி மன்றத்திலும் வழக்குகளை விரைவாக முடிக்க வேண்டாமா? அங்கு மட்டும் ஏன் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வரவில்லை?

நீதித்துறைக்கு ஒதுக்கும் நிதியை அரசு படிப்படியாகக் குறைத்து வருகிறது. பட்ஜெட்டில் 1% அளவுக்குக் கூட நீதித்துறைக்கு ஒதுக்குவதில்லை. சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் கிராமப்புற கட்டைப் பஞ்சாயத்து பாணியில் லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) திற்கு அதிகாரத்தைக் கொடுப்பதுதான் இச்சட்டத்திருத்தத்தின் நோக்கமாக உள்ளது. இதன் மூலம் சிவில் நீதிமன்றங்களின் அதிகாரம் படிப்படியாகப் பறிக்கப்பட்டு விடும்.

இந்த லோக் அதாலத், புதிய சட்டத் திருத்தத்தின் படி நிரந்தர லோக் அதாலத் -ஆக மாற்றப்பட்டுள்ளது. இந்த லோக் அதாலத் நீதிமன்றம், ஒரு மாவட்ட நீதிபதியையும் (அவர் ஓய்வு பெற்றவராகவும் இருக்கலாம்) இரண்டு உறுப்பினர்களையும் கொண்டது. இவ்விருவரும் அரசாங்கத்தின் மரியாதைக்குரியவர்கள் என்று சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதால், இவர்கள் பெரும்பாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். அவர்களுக்கு எந்தச் சட்ட அறிவும் தேவையில்லை. இந்த லோக் அதாலத்திற்கு சிவில் சட்டங்களும் சாட்சிய சட்டங்களும் கிடையாது. இந்த லோக் அதாலத், மெஜாரிட்டி அடிப்படையில் - அதாவது மூவரில் இருவரது கருத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும். அதுவே இறுதியானது; மேல் முறையீடும் கிடையாது.

இன்றைய சமூக சூழ்நிலையில் நீதித் துறைக்கு வெளியில் உள்ள இருவரது கருத்தின் அடிப்படையில் தீர்ப்பு என்றால், நீதிபதி ஓரங்கட்டப்பட்டு, இது

## போராடும் வழக்கறிஞர்கள் மீது அரசு—நீதிபதி—போலீசின் கூட்டுத் தாக்குதல்

சிவில் சட்டத் திருத்தத்தை எதிர்த்து கடந்த ஒன்றரை மாத காலமாக தமிழகமெங்கும் வழக்கறிஞர்கள் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இதுதவிர உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மனிதச் சங்கிலி முதலான போராட்டங்கள் மூலமாகவும் இச்சட்டத்தை எதிர்த்து வந்துள்ளனர்.

இந்நிலையில் போராட்டம் என்ற பெயரில் வழக்கறிஞர்கள் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தால், அவர்கள் பங்கேற்கும் வழக்குகளில் அவர்கள் ஆஜராகாத நிலையில் எக்ஸ் பார்ட்டி தீர்ப்போ, அல்லது வழக்கை டிஸ்மிஸ் செய்யும் உத்தரவோ வழங்கலாம் என்று சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி சுபாஷண் ரெட்டி அனைத்து மாவட்ட நீதிமன்றங்களுக்கும் ஓர் அதிரடி உத்தரவை கடந்த ஆகஸ்ட் 12-ஆம் தேதியன்று பிறப்பித்துள்ளார். இதன்படி மாவட்ட நீதிமன்றங்களும் அதிரடித் தீர்ப்புகளை எழுதத் தொடங்கியதும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வழக்கறிஞர்கள் கொந்தளித்தனர்.

ஆகஸ்ட 16-ஆம் தேதியன்று சென்னையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து திரண்டு, சிவில் சட்டத் திருத்தத்தை எதிர்த்தும், தலைமை நீதிபதியின் அதிரடி உத்தரவைத் திரும்பப் பெறக் கோரியும் ஆர்ப்பாட்டம் பேரணி நடத்தி, ஆளுநரிடம் மனு கொடுத்து முறையிட்டனர். ஆனாலும் ஆளுநரோ, அரசோ, தலைமை நீதிபதியோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் திருச்சி மாவட்ட வழக்கறிஞர்கள், நீதிமன்றங்களின் கதவுகளை இழுத்து மூடி கதவடைப்புப் போராட்டத்தை ஆகஸ்ட் 21 அன்று தொடங்கி வைத்தனர். இப்போராட்டம் பின்னர் மதுரை, நெல்லையிலும் பற்றியது. நீதிமன்றங்கள் நிலைகுலைந்து போயின. இதைக் கண்டு பீதியடைந்த திருச்சி முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி, வழக்கறிஞர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகவும், தமது கடமையைச் செய்ய விடாமல் நீதிபதிகளைத் தடுத்ததாகவும், சட்ட விரோதமாக நீதிமன்றத்தில் கூடி முழக்கமிட்டதாகவும் குற்றம் சாட்டி திருச்சியில் 50 வழக்கறிஞர்கள் மீது போலீசை ஏவி வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளார்.

இதே நேரத்தில், தமிழகம் முழுவதுமுள்ள நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யும்போது ஒட்டப்படும் ஸ்டாம்பு கட்டணத்தை அவசர சட்டம் மூலம் ஜெயா அரசு தாறுமாறாக உயர்த்தியது. குறைந்தது 5 மடங்கு முதல் 50 மடங்கு வரை இக்கட்டண உயர்வு அதிகரித்துள்ளது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல, போராடும் வழக்கறிஞர்களிடம் இது அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

வழக்கறிஞர்களுக்கு எதிராக அரசும் நீதிபதிகளும் போலீசும் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளனர். நீதிமன்றங்கள் இப்போது போலீசு நிலையங்களாகக் காட்சியளிக்கின்றன. வழக்கறிஞர்களின் போராட்டத்தை ஆதரித்து சுவரொட்டிகள் ஒட்டியதற்காக புரட்சிகர - ஜனநாயக அமைப்புகளின் முன்னணியாளர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

சிவில் சட்டத் திருத்தத்தையும், நீதிமன்ற கட்டண உயர்வையும் எதிர்த்து வழக்கறிஞர்கள் நடத்திவரும் போராட்டத்தை, ஏதோ சுயநல அடிப்படையிலான போராட்டமாக மாய்மாலம் செய்து, மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி ஒடுக்கி விடத் துடிக்கிறது தமிழக அரசு. கருங்காலிகளை உருவாக்கிச் சீர்குலைக்கவும் முயற்சிக்கிறது. எனவே, வழக்கறிஞர்கள் தமது நியாயமான போராட்டத்தை துறைசார்ந்த போராட்டமாகச் சுருக்கி விடாமல், மக்களுக்கு உண்மைகளைப் புரிய வைத்து அவர்களது உறுதியான ஆதரவோடு, தனியார்மயம் - தாராளமயம் எனும் மறுகாலனி ஆதிக்கக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டமாக விரித்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியது இன்றைய அவசர அவசியமாக உள்ளது.

●○●

சிவில் சட்டத் திருத்தத்தை எதிர்த்து திருச்சியில் நீதிமன்றத்தை இழுத்து மூடும் கதவடைப்புப் போராட்டத்தில் வழக்கறிஞர்கள்.



www.padippakam.com


முழுக்கவும் கட்டைப் பஞ்சாயத்து நீதியாக மாறிவிடும். பணம் படைத்தவர்கள், லோக் அதாலத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களை - அதாவது 2 பேரை பணத்தால் சரிகட்டி, அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பைப் பெறமுடியும்.

புதிய சட்டத் திருத்தம் மூலம் நீதிபதி முன்னிலையில் நடைபெற்று வரும் சாட்சிகள் விசாரணையும், வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணையும் அடியோடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நீதி நிலைநாட்டப்பட்டால் மட்டும் போதாது; அது வெளிப்படையாக, நிலைநாட்டப்பட வேண்டும் என்பது நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். ஆனால், புதிய சட்டத் திருத்தத்தால் நீதிமன்ற சாட்சி விசாரணையும் வழக்கறிஞரின் வாதமும் மறுக்கப்பட்டு, நியாயமான வெளிப்படையான நீதி புறக்கணிக்கப்படுகிறது.

இச்சட்டத் திருத்தத்தின் மூலம் பெரு முதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் சாதகமான சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் வழக்குகளை விரைவாக முடித்துக் கொடுப்பதற்காக இதுபோன்ற லோக் அதாலத்-கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளன. அங்கு குறுக்கு விசாரணை சட்டம் எல்லாம் கிடையாது. அமெரிக்க வழக்கறிஞர்களுக்கு குறுக்கு விசாரணை செய்யவும் தெரியாது. விரைவாகத் தீர்ப்பு வழங்குவது என்ற பெயரில் அதே பாணியில் இச்சட்டத் திருத்தத்தைச் செய்துள்ளனர்.

இச்சிவில் சட்டத் திருத்தம் மட்டுமின்றி, அடுத்த கட்டமாக வழக்கறிஞர் சட்டத் திருத்தத்தையும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திருத்தத்தையும் கொண்டு வர உள்ளனர். ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்கு முன்பு, அன்றைய சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி கொண்டுவந்த உரிமையியல் நடைமுறைச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து டெல்லியில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினோம். அதைத் தொடர்ந்து இச்சட்டத் திருத்தங்களை அமல்படுத்துவதை மைய அரசு நிறுத்தி வைத்தது. இப்போது மீண்டும் அச்சட்டத் திருத்தத்தை வஞ்சகமாக அமல்படுத்த சட்ட அமைச்சர் அருண் ஜெட்லி தீவிரமாக உள்ளார். வழக்கறிஞர்கள் மட்டுமின்றி, மக்களின் உரிமைகளைப் பறிக்கும் இச்சட்டத்திருத்தங்களை ரத்து செய்யும் வரை எங்கள் போராட்டம் ஓயாது.''

தொகுப்பு: பு.ஜ. செய்தியாளர்கள்
மற்றும் மனித உரிமை பாதுகாப்பு
கவுன்சில், திருச்சி மாநகர் மாவட்டம்.

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

**சி.**பி.(எம்) கட்சி தேய்ந்து வருகிறது என்பதை நேரடியாகவும், அக்கட்சி முட்டுச் சந்தில் சிக்கித் திணறுகிறது என்பதை மறைமுகமாகவும் ஐதராபாத் மாநாட்டில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

குறிப்பாக, இந்தி பேசும் மாநிலங்களில் கட்சி மற்றும் மக்கள் திரள் அமைப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டிருக்கிறது. கட்சிக்குத் தேர்தல்களில் வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கட்சி மற்றும் மக்கள் திரள் அமைப்புகளின் உறுப்பினர் தொகையில் பாதி அளவுக்குக் கூடத் தேர்தல்களில் சி.பி.(எம்) கட்சி வாக்குகளைப் பெறுவதில்லை. முன்பு சில மாநிலங்களில் தனித்துப் போட்டியிட்டு, தனது சொந்த பலத்தில் ஒரு சில தொகுதிகளில் வெற்றி பெற்று வந்தது போய், இப்போது, எந்தத் தொகுதியிலும் அங்கு வெற்றிபெற முடியவில்லை என்று வெதும்புகிறார், சுர்ஜித்.

அக்கட்சி தனது முக்கியமான அரசியல் செயல்பாடு என்று கருதும் தேர்தல் இயக்கத்தின் போது கூட கட்சி உறுப்பினர்களில் ஒரு பிரிவு, சில சமயம் ஒட்டு மொத்தகிளையே செயல்படுவதில்லை. மக்கள் திரள் அமைப்பு உறுப்பினர்கள் கட்சியின் அரசியல் நிலைப்பாடுகளை ஏற்பதில்லை. பொருளாதாரவாதமும் நாடாளுமன்றவாதமும்தான் இதற்குக் காரணம் என்பதையும் சுர்ஜித் ஒப்புக் கொள்கிறார்.

இந்தக் குறைபாடுகளைக் களைவதற்காக அக்கட்சி முன்வைத்துள்ள வழிமுறைகளையும், அரசியல் தீர்வுகளையும் கவனிக்கும் போது சி.பி.(எம்) கட்சி ஒரு முட்டுச் சந்தில் சிக்கித் திணறுவது தெரிகிறது.

மக்கள் ஜனநாயகத்தை நிறுவி, சோசலிசத்துக்கு மாறிச் செல்வதை அமைதி வழியில் சாதிக்க முயலுவதாக சி.பி.(எம்) கட்சித் திட்டம் கூறுகிறது. சக்தி வாய்ந்த மக்கள் திரள் புரட்சிகர இயக்கம், மற்றும் நாடாளுமன்ற - நாடாளுமன்றம் அல்லாத போராட்ட வடிவங்கள் மூலமாக பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்பைக் கடந்து இம்மாற்றங்களைக் கொண்டு வரப் போவதாகவும் அக்கட்சித் திட்டம் கூறுகிறது.

ஆனால், இம்மூன்று வழிவகைகளும் சி.பி.(எம்) கட்சிக்கு அடைக்கப்பட்டு விட்டன. மக்கள்.திரள் இயக்கங்கள் பொருளாதாரவாதத்துக்குள் சிக்கி இருப்பதாக சுர்ஜித்தே ஒப்புக் கொண்டுள்ளார். மக்கள் திரள் அமைப்புகள் தத்தமது கோரிக்கைகள் தவிர, உலகமயமாக்கம் - தனியார்மயம் - தாராளமயம் அடிப்படையிலான புதிய பொருளாதாரக் கொள்கையினால் பாதிக்கப்படும் துறைசார் பிரச்சினைகள் மீது போராடும்படி சி.பி.(எம்) கட்சியினால் அழைக்கப்படுகின்றன. ஆனால், சி.பி.(எம்) கட்சியின் இந்த முயற்சி கருவிலேயே சிதைவடைந்து விட்டது.

சுர்ஜித் ஐதராபாத் மாநாட்டில் ஒப்புக் கொண்டதைப் போல, சி.பி.(எம்) கட்சி ஆளும் / ஆண்ட மாநிலங்களில்தான் சுமார் 80 சதவீத மக்கள் திரள் அமைப்பு உறுப்பினர்கள் உள்ளனர். பிற மாநிலங்களில் அவற்றின் பலம் சரிந்து வருகிறது. அக்கட்சி ஆண்ட / ஆளும் மாநிலங்களில் நீண்டகாலமாகப் பொருளாதாரவாத அடிப்படையிலான போராட்டங்களை மட்டுமே நடத்தி வந்ததால், மக்கள் திரள் அமைப்பினரிடையே முதலாளித்துவ சுயநல, பிழைப்புவாத சிந்தனை ஆழமாகவே வேரூன்றியிருக்கிறது. மேலும், இதனால் ஒவ்வொரு பிரிவுக்கும் எதிரான மற்ற பிரிவினரின் வெறுப்பு வளர்ந்து, எதிர்விளைவு மேலோங்கி விட்டது. சமீபத்தில் கேரளாவில் சி.பி.(எம்) கட்சி நடத்திய பல தொழிற்சங்கவாதப் போராட்டங்கள் மக்கள் எதிர்ப்பு காரணமாகப் பிசுபிசுத்துப் போனதே இதற்குச் சான்று.

அக்கட்சி ஆளும் கட்சியாக இருக்கும் போது, அரசுக்கு எதிரான சதியென்று சித்தரிக்கப்பட்டு மக்கள் திரள் இயக்கங்கள் முடக்கப்பட்டு, போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்பட்டு வருகிறது. கட்சி மூலமாகவும் ஆட்சியாளர்கள் மூலமாகவும் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் பிழைப்புவாதத்தில் அணிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக சி.பி.(எம்) கட்சி முக்கியத்துவம் கொடுத்து நடத்தும் மக்கள் திரள் இயக்கம் மைய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிரானதுதான். ஆனால், இந்த இயக்கம் தொடங்கப்பட்ட உடனே கருச்சிதைவு அடைந்து விட்டது. ஏனென்றால், மைய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகப் போராடும் தார்மீக உரிமையை அக்கட்சி இழந்து விட்டது. அக்கட்சி ஆளும் மாநிலங்களில் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தானே அம


படிப்பகம்

www.padippakam.com

ல்படுத்துகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து மூன்று ''பாரத பந்த்''களை நடத்திய சி.பி.(எம்) தலைமையிலான இடதுசாரிகள், 1993 ஆகஸ்ட்-15 இல் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை அறிவித்து திடீரென அதைக் கைவிட்டனர்.



சி.பி.எம். கட்சியின் எம்.பி. சோம்நாத் சட்டர்ஜி (இடது) கொடுத்த விருந்தில் ஜோதிபாசுவும், சோனியாவும் ஐக்கிய முன்னணி செயல் தந்திரம் குறித்து ஆலோசனை நடத்துகிறார்களா?

மத்தியில் இடதுசாரிகளின் ஆதரவு பெற்ற கூட்டணி ஆட்சி ஏற்பட்டபின் புதிய பொருளாதாரக் கொள்கையை அமலாக்குவதற்குத் ''துணை நின்றது''! மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பிறகு, இது குறித்து இரட்டை வேடம் போடுகிறது. அதாவது ஒவ்வொரு துறையிலும் அடையாள எதிர்ப்பு மட்டுமே காட்டிவிட்டு மௌனமாகி விடுகிறது. அவ்வப்போது நாடு தழுவிய போராட்டம் நடத்தப் போவதாகச் சவடால் அடிக்கிறது. சி.பி.(எம்) கட்சியின் ஆட்சி நடக்கும் மாநிலங்களிலும், அக்கட்சியினால் சோசலிச நாடுகள் என அறிவிக்கப்பட்ட சீனா, வியத்நாம் போன்றவையும் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுள்ள நிலையில், அதற்கு எதிராகப் போராடுவதற்கான தார்மீக உரிமையை இழந்து நிற்கிறது. எனவே, வெற்றுச் சவடால், கண் துடைப்பு - அடையாள போராட்டங்கள் மட்டுமே நடத்துகிறது.

மேற்கு வங்கம், திரிபுரா, கேரளாவைப் போல, முதலில் முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சிகளை உள்ளடக்கிய நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்களுக்கான ஒரு பரந்து - விரிந்த ஐக்கிய முன்னணி அமைப்பது; காலப் போக்கில் இத்தகைய ஐக்கிய முன்னணிகளின் இடத்தில் இடதுசாரி - ஜனநாயக சக்திகளின் முன்னணியைக் கட்டியமைப்பது. இதையே மக்கள் ஜனநாயக முன்னணியாக வளர்த்தெடுப்பது என்பதுதான் சி.பி.(எம்) கட்சிக்கு நம்பூதிரி ஜோதிபாசு - சுர்ஜித் வகுத்தளித்த உத்தி.

1976-77 அவசரநிலை பாசிச ஆட்சிக்குப் பிறகு கூடிய ஜலந்தர் கட்சிக் காங்கிரசில், இந்திரா காங்கிரசின் ஒரு கட்சி எதேச்சதிகாரத்தை எதிர்த்து பரந்து விரிந்த தேர்தல் ஐக்கிய முன்னணியும், போராட்டங்கள் மூலம் இடதுசாரி ஜனநாயக முன்னணியும் அமைப்பது என்று சி.பி.(எம்) கட்சி முடிவு செய்தது. அதன்பிறகு எதேச்சதிகாரத்தோடு, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். வகுப்புவாதத்தை எதிர்ப்பதாக சி.பி.(எம்) முடிவு செய்தது. இப்போது வகுப்புவாதம்தான் பிரதான எதிரி என்று கணித்து, அதற்கேற்ப கூட்டணிகள் அமைக்க முயலுகிறது.

ஆனால், நடைமுறையில் செய்வதோ நாற்காலி எண்ணிக்கைகளை வைத்து சந்தர்ப்பவாதக் கூட்டுகள் அமைப்பதுதான். எதேச்சதிகாரத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு பா.ஜ.க.வுடன் மறைமுகக் கூட்டு வைத்துக் கொண்டது. அதேபோல பா.ஜ.க.வை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு காங்கிரசுடன் மறைமுகக் கூட்டு வைத்துக் கொள்கிறது.

கடந்த 25 ஆண்டுகளாக சி.பி.(எம்) கட்சி பின்பற்றிய ஐக்கிய முன்னணிச் செயல்தந்திரம் எப்படிப் படுதோல்வி அடைந்தது என்பதைப் பின்வருமாறு சுர்ஜித் தொகுக்கிறார்:

''சில நோக்கங்களைச் சாதிப்பதற்கும், பிற கட்சிகளைப் பின்தொடரும் மக்கள் திரளிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஐக்கிய முன்னணி செயல்தந்திரங்கள் அவசியமானவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மிகவும் கவலைக்குரிய விசயம் என்னவென்றால், நாம் நெடுங்காலமாக ஐக்கிய முன்னணி செயல்தந்திரத்தையும், முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சிகளோடு தேர்தல் உடன்பாடுகள் வைப்பதையும் பயன்படுத்தி வந்த போதும், நாம் எவ்வித முன்னேற்றத்தையும் காணவில்லை'' என்கிறார் சுர்ஜித்.

குறிப்பாக, இந்த அம்சம் குறித்து சுர்ஜித் மிகவும் சிரமப்பட்டு விவரித்தார் என்கிறது, சி.பி.(எம்) கட்சிப் பத்திரிக்கை. ''ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் கட்சியின் தேர்தல் செயல்பாடு குறித்த புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டி, நமது மக்கள் திரள் பலம் எவ்வாறு சரிந்து போயுள்ளது என்பதை அரசியல் - அமைப்பு அறிக்கை சுத்திக் காட்டுகிறது. அசாம், பீகார், உ.பி., ஒரிசா, கர்நாடகா பற்றியும் கூட இவ்வாறுதான் கூறமுடியும்.''

இந்த ஐக்கிய முன்னணி செயல்தந்திரம் எந்த அளவு முதலாளிகள் - நிலப்பிரபுக்கள் கட்சிகளுக்குப் பயன்பட்டன என்பதை சுர்ஜித்தே விளக்குகிறார். ''ஆனால், இந்த செயல்தந்திரத்தை அமலாக்கிய விதம் நமக்கு எவ்விதப் பலனும் அளிப்பதாக இல்லாமற் செய்துவிட்டது. எடுத்துக்காட்டாக, அசாமில், நாம் அசாம் கன பரிசத் அரசாங்கத்தில் சேரவில்லை ஆனாலும் அந்த அரசாங்கத்தோடு சமப்படுத்தி, அதன் எல்லா தவறுகளுக்கும் நாம் குறை கூறப்பட்டோம். நமது தன்னிலையையும் அடையாளத்தையும் நாம் இழந்தோம். நமது மக்கள் திரள் ஆதாரம் கரைந்து போனது. மேலும், மாநிலத்தில் நமது பலவீனமான நிலை காரணமாக நம்மை ஏய்த்து விட்டு, பா.ஜ.க.வின் பக்கம் தாவுவதில் மகந்தாவுக்கு ஒரு பிரச்சினையும் எழவில்லை. இம்மாதிரியான விசயங்கள் பீகார், தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் பிற சில மாநிலங்களிலும் நிகழ்ந்தன'' என்கிறார் சுர்ஜித்.

இப்படிச் சொல்லும் சுர்ஜித்தான் மத்தியிலும் மாநிலங்களிலும் தேர்தல் கூட்டணிகள் அமைவதற்கு தரகு வேலை செய்வதை முழு நேரப் பணியாகச் செய்து வருகிறார். வகுப்புவாத பா.ஜ.க. எதிர்ப்பு - மதச்சார்பற்ற கூட்டணி என்கிற பெயரில் போயஸ் தோட்டத்து விருந்துக்குத் தவறாமல் போய் வருகிறார். அடிப்படையில் இந்துமதவெறி பாசிச ஜெயாலலிதா மீண்டும் ஆட்சிக்கு வருவதற்குப் பல்லக்குத் தூக்கினார். பதவிக்கு வந்த ஒரு சில வாரங்களிலேயே பா.ஜ.க.வின் பக்கம் தாவிய ஜெயலலிதா, பரந்துபட்ட மக்கள் மீது பல்வேறு வகையிலும் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டார். ஜெயலலிதாக்கள் ஆட்சிக்கு வருவதற்குத் துணைபோவதும், பிறகு மக்கள் விரோத பிற்போக்கு ஆட்சி நடத்துவதாகக் கூறி மாற்று அணி அமைப்பதும் இவர்களின் வாடிக்கையாகிவிட்டது.

''பிற அரசியல் கட்சிகள் சந்தர்ப்பவாதிகளாக இருக்கின்றன; நாங்கள் என்ன செய்வது?'' என்று தட்டிக் கழிக்கிறது சி.பி.(எம்) கட்சி. இதைக் கூடச் சரியாகக் கணிக்க முடியாத கட்சிக்கு மக்கள் ஏன் ஆதரவளிக்க வேண்டும்? பிற கட்சிகளின் கீழ் உள்ள மக்களை வென்றெடுப்பதற்காகவே தேர்தல் கூட்டணிகள் அமைப்பதாக சி.பி.(எம்) கட்சி கூறுகிறது. ஆனால், நடப்பது என்னவென்று ஐதராபாத் மாநாட்டுப் பிரதிநிதிகளே பின்வருமாறு கூறுகின்றனர்.

''பலமிக்க மூன்று மாநிலங்களுக்கு


படிப்பகம்

www.padippakam.com

வெளியே கட்சியின் பலத்தையும் செல்வாக்கையும் அதிகப்படுத்த இயலாமற் போவது மற்றும் இந்தி பேசும் சில மாநிலங்களில் அவை குறைந்து வருவது குறித்து பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்; அதன் மீது விவாதத்தின் கவனம் குவிக்கப்பட்டது. பல மாநிலங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் தமது சொந்த மாநில அனுபவங்களில் இருந்து, ஐக்கிய முன்னணி செயல் தந்திரம் குறித்து அறிக்கையில் கூறப்பட்டிருப்பதை ஏற்றனர். அதாவது கட்சி சுயேச்சையான நடவடிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் கவனம் செலுத்தவில்லை என்றனர். இதன் விளைவாக ஐக்கிய முன்னணி செயல் தந்திரத்தின் மூலம் கட்சியும் இயக்கமும் பயன்பெற முடியாமற் போனது; சில சமயம் நமது கட்சியின் உழைப்பால் முதலாளிகளின் கட்சிகள்தாம் ஆதாயம் அடைந்தன. ஒரு ஐக்கிய முன்னணியின் வளர்ச்சி நோக்கத்திற்கு கீழ்படியும் வகையில் கட்சியை வளர்க்கும் நோக்கத்தை வைக்கும் போக்கு குறித்து பல பிரதிநிதிகளும் விமர்சித்தனர்'' என்கிறது கட்சி ஏடு.

முற்றிலும் பிழைப்புவாத ஓட்டுக் கட்சியாகச் சீரழிந்து விட்ட சி.பி.(எம்) கட்சி, ''அன்னை சோனியாவின் ஆதரவு பெற்ற வேட்பாளர்...'' என்றும் ''புரட்சித் தலைவியின் ஆசி பெற்ற வேட்பாளர்...'' என்றும் வெட்கமின்றி பிரச்சாரம் செய்கின்றனர். இந்த உண்மையை தமது வழக்கமான சொல் அகங்காரத்துடன் பின்வருமாறு சுர்ஜித் கூறுகிறார்.

''மொத்தத்தில், ஐக்கிய முன்னணி செயல் தந்திரத்தை முக்கியமாகத் தேர்தல் வட்டத்துக்குள் சுருக்கி விட்டோம்; மக்கள் திரள் பிரச்சினைகள் மீது கூட்டுப் போராட்டங்கள் நடத்துவதற்காக ஐக்கிய முன்னணிகளை வளர்ப்பதற்கு முக்கியமளிக்கவில்லை. தேர்தல் உடன்பாடுகள் பலவற்றை ஏறக்குறைய நிரந்தரமான கூட்டுகள் என்று கருதினோம். பிற கட்சிகள் நமது கூட்டணியினர் என்ற போதும், அவற்றிலிருந்து நமது நிலைப்பாட்டை வேறுபடுத்திக் கொள்ள இயலாமலிருக்கிறோம். ஒரு கூட்டுக் கிளர்ச்சி அல்லது தேர்தல் பிரச்சார இயக்கம் முடிவடைந்ததும், நமது வேலையை நிறுத்திவிட்டோம். பிற கட்சி அணிகளுடனும், அவற்றைப் பின்பற்றும் மக்கள் திரளுடனும் உள்ள தொடர்பையும் விவாதத்தையும் பராமரிக்கத் தவறிவிட்டோம். இவை, கடந்த 20 ஆண்டுகளில் ஐக்கிய முன்னணி செயல்தந்திரத்தை அமலாக்கிய வகையில் சில பெரும் குறைபாடுகள்.''

சோனியா, ஜெயலலிதா, லல்லு, முலயம், சரத்பவார், சந்திரபாபு நாயுடு கட்சிகளுடன் தேர்தல் கூட்டுகள் வைத்துக் கொண்டு, கூட்டுப் போராட்டங்கள், கிளர்ச்சிகள், அக்கட்சிகளின் பிழைப்புவாத அணிகளுடன் அரசியல் விவாதங்கள் நடத்துவது என்றெல்லாம் ஆகாயக் கோட்டை கட்டுகிறார், சுர்ஜித்.

ஆனாலும், இங்கே சுர்ஜித்தும், மாநாட்டுப் பிரதிநிதிகளும் கட்சியின் கடந்த காலத் தவறுகள், பலவீனங்கள் குறித்து மனந்திறந்து விவாதிக்கும்போது, விரைவில் அவற்றைக் களைந்து, முன்னேறுவார்கள் என்று நம்பிக்கை வைக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இவ்வளவு ஒப்புதல் வாக்கு மூலங்களுக்குப் பிறகும் சி.பி.(எம்) தலைமை முன் வைக்கும் தீர்வுகளில் எதுவுமே புதியவை கிடையாது.

முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவக் கட்சிகளுடன் ஐக்கிய முன்னணி, பிறகு இடதுசாரி ஜனநாயக முன்னணி; அதையே மக்கள் ஜனநாயக முன்னணியாக மாற்றுவதுதான் அக்கட்சி வகுத்துக் கொண்ட ''புரட்சிப் பாதை''. இந்தப் பாதையின் முதற்படியிலேயே திரும்பத் திரும்ப சறுக்கி பின்னடைந்து வருகிறது சி.பி.(எம்) கட்சி. இதற்கான காரணமாக, தனித்துவமான போராட்டங்களை நடத்தத் தவறிவிட்டது, அணிகளின் சித்தாந்த மட்டம் வளரவில்லை என்பதை இந்தப் ''புரட்சிப் பாதை'' வகுக்கப்பட்ட காலத்திலிருந்து அடுத்தடுத்த மாநாடுகளில் அலசப்பட்டு வருகிறது. ஆனாலும் விடிவோ, முன்னேற்றமோ ஏற்படவில்லை. தொடர்ந்து சரிவுதான்.

''ஒரு இடதுசாரி - ஜனநாயக முன்னணியை அமைத்து பிறகு அதை மக்கள் ஜனநாயக அணியாகக் காலப்போக்கில் மாற்றுவது என்கிற வழிகாட்டுதலை ஜலந்தர் காங்கிரசு கொடுத்தது. ஆனால், இடதுசாரி - ஜனநாயக முன்னணியைக் கட்டியெழுப்புவதில் எந்தவித முன்னேற்றத்தையும் எட்டவில்லை.''

''இது, பகுதிக் கோரிக்கைகள் மீதான போராட்டங்களைத் தொடுத்துத் தக்க வைத்துக் கொள்வதன் மூலம், நமது சுயேச்சையான நடவடிக்கைகளை வளர்ப்பது குறித்த இன்னொரு பலவீனத்தை நம்முன் நிறுத்துகிறது. ஆனால் உண்மை என்னவென்றால், அனைத்திந்திய மற்றும் மாநில அளவிலான போராட்ட அறைகூவல்கள் கூடச் சடங்குத்தனமாகவும், அடையாளமாகவும் தான் அமலாக்கப்படுகின்றன'' என்று கூறும் சுர்ஜித், அதற்கான அடிப்படைக் காரணம் பற்றி எதுவும் கூறாமல் பின்வரும் தீர்வை முன்வைக்கிறார்.

''மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கையிலெடுத்து, நீடித்த போராட்டங்களைத் தொடுப்பதற்கு, உள்ளூர் மற்றும் மாவட்ட அளவில் கட்சி யூனிட்டுகளை மறு ஒழுங்கமைப்பது அவசியம். இதற்காக உள்ளூர் அளவில் அணிகளின் முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விடுவது அவசியம். இதோடு, மக்களை வென்றெடுக்கும் பொருட்டு நீடித்த அரசியல் வேலையும் சித்தாந்த போதனையும் அவசியம்'' என்கிறார் சுர்ஜித். இப்படிப்பட்ட தீர்மானம் சி.பி.(எம்) கட்சிக்குப் புதிதல்ல.

இவ்வாறு உள்ளூர் அணிகளின் குறைபாடுகள்தான் காரணம் என்று 'பழி போட்டுத் தப்பித்துக் கொள்ளும் சி.பி.(எம்) தலைமை, தன் பங்கிற்கு, மீண்டும் அதே ஐக்கிய முன்னணிச் செயல் தந்திரம் என்கிற சந்தர்ப்பவாத அரசியல் நடத்தக் கிளம்பியுள்ளது.

''முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சிகளுடன் ஒரு பலவீனமான நிலையிலிருந்து ஐக்கிய முன்னணிகள் அமைப்பதற்கு நாம் போகிறோம்; இதனால் அவர்களின் நிபந்தனைகளை ஏற்கும்படியும், சில சமயம் நமது சொந்த அணிகளையே இழக்கும்படியும் நிர்பந்திக்கப்படுகிறோம். இவ்வாறான ஒரு சூழ்நிலையில், நாம் வர்க்கக் கூட்டணியாகிய இடதுசாரி - ஜனநாயக முன்னணியை அமைக்க முடியாது. அதைவிட மேலான ஒரு மக்கள் ஜனநாயக முன்னணியாக அதை மாற்றுவதும் நாட்டில் ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியைச் சாதிப்பதும் முடியாது'' என்று முடிவு கூறும் சுர்ஜித் ஒரு கேள்வி எழுப்புகிறார்.

''ஒரு இடதுசாரி - ஜனநாயகக் கூட்டணி அமைப்பது ஒரு உடனடி எதிர்கால சாத்தியமே இல்லை எனில், இன்றைய சவாலை நாம் எதிர்கொள்வது எப்படி?'' என்பதுதான் அந்தக் கேள்வி. அதற்கு அவரே கூறும் பதில் சி.பி.(எம்) கட்சி ஒரு முட்டுச் சந்தில் சிக்கித் திணறுவதையே காட்டுகிறது. அதாவது ''காங்கிரசைத் தோற்கடிப்பது, பா.ஜ.க.வை தனிமைப்படுத்துவது என்கிற முழக்கத்தை, 1978-இல் நடந்த 13-வது கட்சி காங்கிரசு (ஜலந்தர்) கொடுத்தது. ஆனால் உண்மையில் நடந்ததோ, அப்போதிருந்த பா.ஜ.க. பலம் கூடி வந்து 16-ஆவது கட்சி காங்கிரசின்போது மத்தியில் ஆட்சியையே பிடித்து விட்டது'' என்று புலம்புகிறார் சுர்ஜித்.

இறுதியில் ''இன்றைய சவாலை எதிர்கொள்வதற்கு மூன்றாவது மாற்றை உருவாக்கவேண்டியது அவசியம்; அதற்காக நான்கு இடதுசாரி கட்சிகள் தவிர முலயம், தேவே கவுடா தலைமையிலான கட்சிகள் சேர்ந்து மக்கள் முன்னணி அமைத்துள்ளன; அது சூழ்நிலைமைகளின் தேவையைப் பகுதி அளவே சந்திக்கும்; அதை மேலும் உறுதிப்படுத்துவது அவசியம்'' என்கிறார்.

இப்படி ஒரு தீர்வு முன்வைக்கப்பட்ட மூன்று மாதத்துக்குள் இதே சுர்ஜித் அறிவித்தார் - ''மக்கள் முன்னணி கலைந்தது!'' மீண்டும் நம்பகமான தேர்தல் கூட்டாளிகளைத் தேடிப் பிடிக்கும் வேலையில் இறங்கிவிட்டார்கள் சுர்ஜித்தும் - ஜோதிபாசுவும். அதாவது, மீண்டும் வேதாளத்தைத் தேடி, உருவிய வாளோடு, இருட்டில் புறப்பட்டு விட்டார்கள் நவீன விக்கிரமாதித்தர்கள்! முடிவது - இத்தொடர் மட்டும்தான்!

● முற்றும் ●



படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

★ ''மக்களைக் கொள்ளையடிக்கும் பயங்கரவாத மருத்துவர்களைத் தண்டிப்போம்!'' என்ற முழக்கத்துடன் வி.வி.மு.வினர் நடத்திய பிரச்சார இயக்கமும் ஆர்ப்பாட்டமும் மிக அவசியமான, முன்னுதாரணமிக்க போராட்டமாகும். குறிப்பாக, நாங்கள் வாழும் வேதாரண்யத்தில் அரசு மருத்துவ மனைகளின் நிலைமை படுமோசமாக உள்ளது. ஊழியர்கள் அனைவரும் கட்டாயமாக கையூட்டு பெறுவது, குடிநீரின்றி நோயாளிகள் டீக்கடையில் தண்ணீருக்காக அலைவது, மருத்துவர்கள் நோயாளிகளை ஆடு - மாடுகளைப் போல நடத்துவது, அடிப்பது; சாதாரண நோய்களுக்குக் கூட தனது சொந்த மருத்துவமனைக்கு வரச் சொல்லி நிர்பந்திப்பது, தேவையற்ற மருந்துகளையும் பரிசோதனைகளையும் திணித்து காசு பிடுங்குவது, பணி நேரத்திலேயே மது அருந்திவிட்டு சிகரெட் பிடித்துக் கொண்டு ஒரு ரௌடியைப் போல உலாவுவது, இதைத் தட்டிக் கேட்டால் உடனடியாக நோயாளிகளை ''டிஸ்சார்ஜ்'' செய்வது அல்லது போலீசை வைத்து மிரட்டுவது என்று கேள்விமுறையின்றி அட்டூழியங்கள் தொடருகின்றன. தருமபுரி - வேலூர் மாவட்டங்களில் நடந்ததைப் போல எங்கள் பகுதியிலும் பயங்கரவாத மருத்துவர்களுக்கு எதிரான போராட்டம் உடனடித் தேவையாக உள்ளது.

**– இராமகிருஷ்ணன், துரைராஜ், சரவணன், குமார், வேதாரண்யம்.**

★ ஜனநாயகம், மனித உரிமைகள் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் இந்து வெறி ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலிடம் பகுத்தறிவு, சுயமரியாதை, தமிழின உணர்வு என அனைத்தையும் அடகு வைத்து விட்டு பதவி சுகத்தில் சவடால் அடித்து வந்த வைகோ, பயங்கரவாத ''பொடா'' சட்டத்தை வெட்கமின்றி ஆதரித்து நின்று, இன்று அந்த ''பொடா''விலேயே கைதாகி, இதர கட்சிகளிடம் வலுவான ஆதரவின்றி தனிமைப்பட்டு அரசியல் அனாதையாகி விட்டார். வைகோவின் சந்தர்ப்பவாதத்தையும், பிரிவினைவாத பீதியூட்டி பாசிச ஜெயா நடத்தி வரும் அடக்குமுறையையும் தலையங்கக் கட்டுரை எடுப்பாக விளக்கியது. போபாலில் விஷவாயு படுகொலையை நடத்திய யூனியன் கார்பைடு நிறுவனத்தின் இந்தியத் தரகு முதலாளியான கேஷூப் மகிந்திராவுக்கு பத்மவிபூஷண் விருது வழங்கக் கிளம்பிய இந்துவெறி ஆட்சியாளர்கள், அந்நிறுவனத்தின் அமெரிக்கக் கொலைகார முதலாளி வாரன் ஆண்டர்சனுக்கு பத்மஸ்ரீ விருது அளித்து கௌரவிக்கவும் செய்வார்கள்!

**– சுகதேவ், வடபழனி, சென்னை.**

★ தலையங்கக் கட்டுரையானது, சந்தர்ப்பவாதியும், பிழைப்புவாதியுமான வைகோவை அம்பலப்படுத்தியதோடு, அரசியல் அனாதையாகிவிட்ட இழிந்த இறுதி நிலையையும் சுட்டிக் காட்டியது. கோத்ரா ரயில் எரிப்பை நடத்தியது யார்? என்பதை தடய அறிவியல் விசாரணை அறிக்கையிலிருந்து விளக்கியது சிறப்பு. நேபாளத்தில் என்ன நடக்கிறது என்று தெளிவில்லாமல் இருந்த எங்களுக்கு ''இமயத்தில் உயரும் செங்கொடி'' என்ற கட்டுரை முழுமையான புரிதலைக் கொடுத்ததோடு, புரட்சிகர உணர்வூட்டுவதாக அமைந்தது. இதுபோன்று பல்வேறு நாடுகளின் புரட்சிகர இயக்கங்களைப் பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டும். ஆகஸ்ட் இதழில் வெளியாகியுள்ள புரட்சிகர அமைப்புகளின் போராட்டச் செய்திகளும், ''இதுதான் இன்றைய இந்தியா''வும் உணர்வூட்டுவதாக அமைந்துள்ளன.

**– வாசகர் வட்டம், திருச்சி.**

★ பு.ஜ. ஜூன் இதழ் (தொகுதி:17, இதழ்: 8) ஒரு நண்பர் மூலம் கிடைத்தது. அதில் ''புலிகளின் இனவிடுதலை துரோகம்; ஈழம் மறுகாலனியாகிறது'' என்ற தலையங்கக் கட்டுரையை வாசித்தேன். இதில் பல உண்மைகள் கூறப்பட்டுள்ளன. நீங்கள் கணித்து கூறிய எதிர்விளைவுகள் உண்மையில் இங்கு யதார்த்தமாகி வருகின்றது. நீங்கள் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு உண்மைகளைக் கூறமுடிகின்றது. இங்கு இப்படிக் கூறமுடியுமா என்பது சிக்கலானது. விடுதலைப் புலிகள் தமது அரசியல் நிலைப்பாடுகளைத் தெளிவாக முன்வைப்பதில்லை. அவர்கள் பெருமுதலாளித்துவத்துக்குச் சார்பாகப் போவதாகத் தெரிகின்றது. எனது புனைபெயரில் இக்கடிதத்தை எழுதுகிறேன். ஏனெனில், இங்குள்ள நிலைமையை நீங்களும் அறிந்திருப்பீர்கள். இப்படியான பயத்தில் இங்கு பலர் வாய்மூடிக் கிடக்கிறோம். இலங்கையில் புதிய ஜனநாயகம் கிடைக்க ஒழுங்கு செய்தால் நல்லது.

**– திரிகோணன், திரிகோணமலை (இலங்கை)**

★ தரிசு நிலங்களை மேம்படுத்துகிறேன் எனக் கூறிக் கொண்டு முதலாளிகளிடம் ஒப்படைத்து விட்டு அதனை தனியார்மயமாக்குவது என்ற உள்நோக்கம் அறிந்து கொள்ள முடிந்தது. நாட்டின் முதுகெலும்பு என ஒரு பக்கம் கூறிக் கொண்டு அதே விவசாயிகளின் முதுகெலும்பினை உடைக்கும் செயல்திட்டம் இது என்பதை விவசாயிகள் உணர்ந்து இத்திட்டத்தை எதிர்க்க புரட்சிகர அமைப்புகளில் இணைவதற்கு தூண்டியது இக்கட்டுரை.

**– வேல்தினகரன், காட்டூர் (திருச்சி)**

★ எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஒழிப்பது என்று கூறி பொடாவை ஆதரித்தார் வை.கோ. இன்று பெயரளவில் தமிழின விடுதலைக்குக் குரல் கொடுப்பவர்கள் மீது பாயும் பொடா, உணர்வுப்பூர்வமாக தமிழின விடுதலைக்குக் குரல் எழுப்புகிறவர்கள் மீது எப்படி பாய்ந்து குதறும் என்று சிந்திக்க வைக்கிறது பு.ஜ. கட்டுரை.

**– வாசகர் வட்டம், கோவை.**




**இப்போது விற்பனையில்...**

## காந்தியும் காங்கிரசும்
## - ஒரு துரோக வரலாறு

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் அணுகுமுறை, பகிரங்கமான பாசிச கொலைவெறி! காந்திய - காங்கிரசின் அணுகுமுறையோ, நயவஞ்சகம் - துரோகம்!

நமது மக்களை ஏமாற்றி, துரோகப் பாதையில் இட்டுச் சென்று அவர்கள் வாழ்வை காந்திய - காங்கிரசு நாசமாக்கியது, ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாறு. இன்றைய இளைய தலைமுறையினர் பலரது கவனத்துக்கு வராமலிருக்கும் உண்மையைத் தொகுத்தளிக்கிறது, இச்சிறு நூல்.

வெளியீடு : புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (RSYF)
*விலை : ரூ. 10.00*
பிரதிகளுக்கு : கீழைக்காற்று வெளியீட்டகம், 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா






ரஜினியின் ''பாபா'' திரைப்படம் வெளியானதையொட்டி, ரஜினி ரசிகர்கள் சென்னையில் அடித்த கூத்துக்கள்தான் இந்தப் படங்கள். ஒரு பிரிவு ரசிகர் பட்டாளம் ரஜினியின் கட்-அவுட்டுக்குப் பாலாபிஷேகம் செய்ய, இன்னொரு ரசிகக் கூட்டமோ கற்பூர ஆராதனை செய்கிறது. திரைப்படத்தில் தோன்றும் கதாநாயகனின் நடிப்பில் மயங்கிப் போய் ரசிகர்மன்றம் அமைக்கும் முட்டாள் தனத்தைக் சகித்துக் கொள்ளுபவர்களைக் கூட, இந்த ரஜினி பக்தி முகம் சுளிக்க வைத்துவிடும்.

பரசுராமன் என்ற ரசிக 'தீவிரவாதி' பாபா படம் வெளியான அன்று தனது மனைவிக்குக் குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காக எட்டு மாதக் கர்ப்பிணி பெண்ணான அவரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளக் கட்டாயப்படுத்தி, குழந்தை பெறச் செய்திருக்கிறார். கடந்த ஐம்பதாண்டுகளாகத் தமிழக இளைஞர்களைப் பிடித்தாட்டி வரும் இந்த ரசிகர்மன்ற கலாச்சாரம், ரஜினி விசயத்தில் வக்கிரமாக மாறி, தமிழகத்தையே தலைகுனிய வைக்கிறது.

''கடவுளை மற; மனிதனை நினை'' எனத் தமிழக மக்களிடம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார், பெரியார். ஆனால், ரஜினிக்கு ரசிகர்களாகிப் போன தமிழின இளைஞர்களோ, ரஜினியையே கடவுளாக நினைத்து உருகிக் கொண்டிருக்கிறார்கள். ரஜினி அரசியலில் அடி எடுத்து வைத்தால், தமிழகத்தையே தலைகீழாக மாற்றி விடுவார் என நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஜூனியர் விகடன், நக்கீரன் போன்ற கிசுகிசு பத்திரிகைகளும், பார்ப்பன 'சோ'வின் துக்ளக்கும் அப்பாவி ரசிகனின் இந்த முட்டாள்தனத்திற்கு உரு ஏற்றுகின்றன.

''பாபா'' வெளியான அன்று சென்னை நகரத் திரையரங்குகளில் 10 ரூபாய் நுழைவுச்சீட்டு நானூறு ரூபாய்க்கு விற்கப்பட்டதாம். இப்படி தன்னை நேசிக்கும் ரசிகனையே மொட்டையடிக்கும் ரஜினியின் கையில் தமிழகம் கிடைத்தால், சும்மா விட்டு விடுவாரா?

ரஜினிக்கு முன்பாகவே, எம்.ஜி.ஆருக்கும் கூடத்தான் 'உத்தமர்' ஒளி வட்டம் போடப்பட்டது. எம்.ஜி.ஆரும் தனது திரைப்படக் கவர்ச்சியை மூலதனமாக வைத்து முதல்வரானார். ஆனால், தமிழகம் கண்டதென்ன? அ.தி.மு.க. என்ற திடீர் பணக்கார அரசியல் ரவுடி கும்பலின் கையில் சிக்கிக் கொண்டு தவிப்பதுதான் தமிழகம் கண்ட பலன்!

திரைப்படத்தில் பொறுக்கி கலாச்சாரத்தையும், சொந்த வாழ்க்கையில் இந்துமத பிற்போக்குத்தனத்தையும் தூக்கிக் கொண்டு வரும் ரஜினியா தமிழகத்தின் இரட்சகனாக, தமிழின இளைஞர்களின் வழிகாட்டியாக இருக்க முடியும்?



இந்தச் சிறுவனின் பெயர் முனியசாமி. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலுள்ள அரசு சீர்மரபினர் விடுதியில் தங்கிப் படித்து வந்தான். படிப்பில் கெட்டிக்காரனான முனியசாமிக்கு, தன்னைச் சுற்றி நடக்கும் அநீதிகளைத் தட்டிக் கேட்கும் தைரியமும் உண்டு. இதனால் அரசு விடுதிக் காப்பாளரின் ஊழலையும், அராஜகத்தையும் எதிர்த்து சக மாணவர்களிடம் பேசினான். இதனால் கடுப்பாகிப் போன விடுதிக் காப்பாளர், முனியசாமி மீது பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தி, விடுதியில் இருந்து இடைநீக்கம் செய்து, அச்சிறுவனைத் துரத்தியடித்தார்.

ஆனாலும் முனியசாமி துவண்டு போய்விடவில்லை. சிறுவனாக இருந்த போதும் தன்னந்தனியாகவே சென்னைக்குக் கிளம்பி வந்து, முதலமைச்சர் ஜெயாவையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரையும் சந்திக்க முயன்றான். கல்வியமைச்சர் தம்பிதுரையைச் சந்தித்து, விடுதிக் காப்பாளரின் ஊழலையும், அராஜகத்தையும் ஆதாரத்தோடு கூறினான்.

''விடுதி மாணவர்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய சலுகைகள் முறையாகக் கிடைக்க வேண்டும்'' என்பதுதான் முனியசாமியின கோரிக்கை. ஆனால், அதிகார வர்க்கமோ, தனது கூட்டுக் களவாணித்தனம் காரணமாக, விடுதிக் காப்பாளரின் மீது நடவடிக்கை எடுக்கவுமில்லை; முனியசாமியின் இடைநீக்கத்தை ரத்து செய்யவும் இல்லை.

விடுதிக் காப்பாளரின் ஊழலையும் அராஜகத்தையும் தட்டிக் கேட்க ஒரு ''ஹீரோ'' வந்து குதிப்பார் என்று முனியசாமி முட்டாள்தனமான கற்பனையை வளர்த்துக் கொள்ளவில்லை. மாறாக, அவன், தனது பிஞ்சு அறிவுக்கு எட்டிய வகையில் போராடினான்.

திரைப்படத்தில் 'நியாயத்திற்காக' வில்லன்களை அடித்து உதைக்கும் ரஜினி, நிஜ வாழ்க்கையில், தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் ஏதாவதொரு அநீதியை எதிர்த்துக் குரல் கொடுத்ததுண்டா? கர்நாடகாவில் ''பாபா'' வெளியிடுவதில் இருந்த சிக்கலை, கன்னட நடிகர் ராஜ்குமாரை பெங்களூருக்குத் தேடிப் போய்ச் சந்தித்துத் தீர்த்துக் கொண்ட ரஜினி, காவிரிச் சிக்கலுக்கு இப்படி பயணம் போனதில்லையே!

ரஜினியின் கவர்ச்சியில் மயங்கிக் கிடக்கும் தமிழக இளைஞர்களே, சற்றே சிந்தியுங்கள்! அப்பொழுதுதான் நீங்கள் முனியசாமியாக மாற முடியும்; இல்லையென்றால் ரஜினி என்ற கொள்ளைக்காரனுக்கு ஏணியாகத்தான் இருக்க முடியும்!

படிப்பகம்